விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka
# வலம்புரி
Valampurii
website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 18 வெள்ளிக்கிழமை (01.05.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 133

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# சர்வதேச மத்தியஸ்தமே இனப்பிரச்சினைக்கு தீர்வு

## 19-ல் எதுவுமில்லை என்கிறார் விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

**பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள 19ஆவது அரசியல் திருத்தச் சட்டத்தில் இனப்பிரச்சினை தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என வடக்கு மாகாண சபையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள நிலையில், தமிழ்-சிங்கள இனப்பிரச்சினையை உள்நாட்டில் தீர்க்க முடியாது எனவும் சர்வதேச மத்தியஸ்தம் ஊடாகவே இதனை தீர்க்க முடியும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண சபையின் இருபத்தெட்டாவது கூட்டத்தொடர் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில நடைபெற்றது. இதன்போது வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தினால் பிரேரணை ஒன்று முன்மொழியப்பட்டது.

இலங்கையில் உள்ள தமிழ்-சிங்கள இனப்பிரச்சினையில் சர்வதேச சமூகத்தினதும் ஐக்கிய நாடுகள் சபையினதும் வழிகாட்டல்கள் அனுசரணை 24ஆம் பக்கம் பார்க்க....

## நேபாள அனர்த்தம் வடக்கில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

நேபாளத்தில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தில் உயிரிழந்த மக்களுக்கு வடக்கு மாகாண சபையில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் 28 ஆவது மாதாந்த அமர்வு கைதடியில் உள்ள மாகாண சபையின் கட்டடத் தொகுதியில் நேற்றுக் காலை 9.45 மணியளவில் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் ஆரம்பமாகியது.

சபை அமர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் கடந்த வாரம் நேபாள நாட்டில் இடம் 04ஆம் பக்கம் பார்க்க....

## நேபாள நிலநடுக்கம் பலி 5,500 ஆனது

(காத்மண்டு)

நேபாள நிலநடுக்கத்துக்கு பலியானோர் எண்ணிக்கை 5,500-ஐ தாண்டியது. தற்போது கனமழை காரணமாக, அந்நாட்டில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது.

நேபாளத்தில் கடந்த சனிக்கிழமை (ஏப்ரல் 25-ம் திகதி) கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 7.9 ஆக பதிவாகியது.

இந்த நிலநடுக்கத்துக்கு தற்போதைய நிலவரப்படி பலியானோர் எண்ணிக்கை 5,489 - ஆக அதிகரித்துள்ளது. 24ஆம் பக்கம் பார்க்க....

### நிறைவேறிய 19ஆல் நிறைவேறாது கனவு

## கோத்தபாய, நாமல் ஆகியோர் தேர்தலில் போட்டியிட தடை !





(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள அரசியலமைப்பின் 19-வது திருத்தச் சட்டமூலத்தின் மூலம் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கோத்தபாய ராஜபகஷ போட்டியிடத் திட்டமிடடிருந்த நிலையில், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 19-வது திருத்தச்சட்டமூலம் அவரை தேர்தலில் போட்டியிட முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

நாடாளுமன்றத 23ஆம் பக்கம் பார்க்க....

மே-1
உழைக்கும் கரங்கள் உயர்வுபெற வாழ்த்துகின்றோம்
வலம்புரி குடும்பம்

### பட்டதாரிகளின் தொடர் போராட்டம்

## வடக்கு மாகாண அமைச்சர்களின் உறுதிமொழியால் கைவிடப்பட்டது



(யாழ்ப்பாணம்)

அரச வேலைவாய்ப்பை வழங்க கோரி வடக்கு மாகாண பட்டதாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட தொடர் போராட்டம் வடக்கு மாகாண அமைச்சர்களின் உறுதிமொழியை அடுத்து நேற்று இரவு முதல் கைவிடப்பட்டுள்ளது. 04ஆம் பக்கம் பார்க்க....

## தனியார் துறை சம்பள அதிகரிப்பு

(கொழும்பு)

இன்றிலிருந்து அமுலாகும் வகையில் சகல தனியார் பிரிவு சேவையாளர்களுக்கும் குறைந்த சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாய் வரை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. அதே வேளை, தனியார் பிரிவி[illegible] அரசாங்கத்தினால் பரிந்துரைக்கப்பட்ட 2500 ரூபாய் சம்பள உயர்வில் ஆயித்து 500 ரூபாய் வேதனத்தில் சேர்க்கப்பட வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.

நாளாந்த ஊதியத்தை பெறுவோரின் வேதனம் இன்றிலிருந்து [illegible] 04ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தேவை

எட்னா, சொக்லட், கொக்கக்கோலா, மலிபன், அங்கர், எலிபன், சொக் ஐஸ் கிறீம் தொழிற்சாலைக்கு ஆண்/ பெண் 60 பேர் தேவை. உற்பத்தி/ பொதியிடல்/ லேபர் பிரிவுகளுக்கு மற்றும் பண்டசாலை Stores loading மேற்பார்வையாளர் தேவை.

மாத சம்பளம் 35,000/-

0759219228

(231)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# மே நாள்





2015

கல்வி கலங்கரை விளக்கு
தொழில்வளர்ச்சியின் உயிர்நாடி
உலகத்தொழிலாளர் தினமாம் மே நாளில்
அனைத்துத் தொழிலாளர்களுடனும்
அச்சகத் தொழிலாளர்களும்
சிறப்புற வேண்டுகின்றோம்.

(சி-862)






# கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்

இல. 681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P : +94 21 222 2717/ 8
+94 21 222 2737

## British College of Higher Studies
வழங்கும் மாபெரும் கட்டணக் கழிவு
**50 % Discount**

**Spoken English with Grammar**
~~6500/=~~ Duration : 80 Hrs 3250/=

**Diploma in English**
~~9000/=~~ Duration : 110 Hrs 4500/=

வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
எமது கற்கை நெறிகள் Reading,Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாகவரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

**English For Higher Education**
~~10'000/=~~ Duration : 90 Hrs 5000/=

பல்கலைக்கழக மாணவர்கள், A/L, O/L பரீட்சை எழுதிய மாணவர்கள், மற்றும் உயர் கற்கைநெறிகளைக் கற்கும் மாணவர்கள் போன்றவர்களின் நலன் கருதி இக் கற்கை நெறியானது ஆரம்பமாகவுள்ளது.

Batches Start on
Batch I : 04/05/2015 08.30am to 12.30pm Batch III : 09/05/2015
Batch II : 06/05/2015 01.00pm to 05.00pm Batch IV: 10/05/2015

British College of Higher Studies
No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0777585913,0777222422,0714299935
(சி-860)

## காணி விற்பனை

மருதனார்மடப்பகுதியில் 4 பரப்புக்காணிவிற்பனைக்குள்ளது.

(186) தொடர்புகளுக்கு:077 328 8795

## தேவை

தாஜ் சமுத்ரா, சுவிஸ், கலதாரி, சினமன், கிரான்ட், அமாயா, ஜோபா, கோல் பேஸ், ஹோட்டல்களுக்குக் குக், ரூம் போய், ஸ்டுவர்ட், பூச்சர், கிச்சன் ஹெல்பர், பெல்போய், லேபர்ஸ் உயர்ந்த சம்பளத்துடன் (உள்நாட்டு, வெளிநாட்டு பயணங்கள்) இப்போதே.

தொடர்பு கொள்ளுங்கள்:
071 200 2057
(157)


# மேதின கூட்டங்கள்

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மே தின கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பி.ப 3 மணியளவில் மானிப்பாய் வலி தென்மேற்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, யாழ்.மாநகர சபை முன்னாள் மேயர் திருமதி பற்குணராசா யோகேஸ்வரி மற்றும் ஈழமக்கள் ஜனநாயக கட்சி தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கே.வி.குகேந்திரன் மேலும் பல தொழிற்சங்க பிரதிநிதிகளும் உரையாற்றவுள்ளனர். (செ)

0000

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்பன இணைந்து நடத்தும் மாபெரும் மே தின பேரணியும் பொதுக் கூட்டமும் இன்று 01ஆம் திக்தி வெள்ளிக்கிழமை பி.ப 3.30 மணியளவில் பருத்தித்துறை கொட்டடி கடற்கரை நடராஜா கலையரங்கில் நடைபெறவுள்ளது.

காரைநகர் கணேச வித்தியாலய அதிபர் சிவகுரு இளங்கோ தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மேதினப் பேரணி பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது. இதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

தாயகம், தேசியம், சுயநிர்ணயம் அடிப்படையில் தமிழ்த் தேசியத்தின் அங்கீகாரத்தையும் தமிழ்த் தொழிலாளர்கள், தமிழ் விவசாயிகள், தமிழ் மீனவர்கள் தமிழ் அரசியல் கைதிகள் என்போரின் விடுதலையும் காணாமற் போனோர் விவகாரம், மீள்குடியேற்ற விவகாரம் என்பவற்றை உள்ளடக்கி மே தின பேரணியும் பொதுக்கூட்டமும் இடம் பெறவுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது. (செ)


## உடனடி வேலைவாய்ப்பு

சவுதி அரேபியா நாட்டிற்கான வீட்டுப் பணிப்பெண் தேவை.
(டுபாய், மலேசியா, கட்டார்)

- உணவு, மருத்துவம், தங்குமிடம் இலவசம்
- இருவழி விமானச் சீட்டு இலவசம்
- கடவுச் சீட்டு இல்லாதவர்களுக்கு இலவசமாக கடவுச் சீட்டு செய்து தரப்படும்
- முற்பணமாக ரூபா 300, 000 நாங்கள் வழங்குவோம்.
- மாதாந்த சம்பளம்-ரூபா .30, 000/-
- முற்பணமாக வழங்கப்படும் பணத்துக்கும் மாதாந்த சம்பளத்திற்கும் தொடர்பில்லை.

தொடர்புகளுக்கு:-
0766163678, 0724824158
(245)

## The Geriatrics Society of Srilanka
இலங்கை முதியோர் சுகவாழ்வுக்கழகம்

HELTHY AGEING-THE NATURAL WAY!
"இயற்கையோடு ஒன்றிணைந்த சுகவாழ்வு"

Doctor **G.சிறிதரன்** B.S.M.S (SL) M.Phil (Jaf)

மேற்படி தலைப்பில் நாளை சனிக்கிழமை (02.05.2015) 4.00PM மணியளவில் சென்ஜோன்ஸ் அன்புலன்ஸ் மண்டபத்தில் (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில்) கருத்துரை வழங்கவுள்ளதால் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்திய டாக்டர் பத்மஸ்ரீ வ.செ.நடராசன் (MD., FRCP(Edin,) D.Sc (Hon) முதியோர் நலமருத்துவர் எழுதிய "என்றும் நலமுடன் வாழ" புத்தகத்தின் போட்டோ பிரதி பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:-
0776636596, 0714546868, 0776068656
(244)

## மகா கும்பாபிஷேக வாழ்த்து

வட மாகாண சபை உறுப்பினர் கௌரவ தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்கள் 01.05.2015 வெள்ளிக்கிழமை சிவன் ஆதினம் பழம் வீதி கந்தர்மடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானத்தில் நடைபெறவிருக்கும் மஹா கும்பாபிஷேகத்தை வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றார்.






இங்ஙனம்
பரிபாலன சபை
சிவன் ஆதினம்.
திருப்பணிச் சபை
(246)

## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)
பிரபல மனோதத்துவ நிபுணர்


Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்
01.05.2015 முதல் 08.05.2015 வரை 7 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்
(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்)
(பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயசிறி விடுதலை

(கொழும்பு)

**சிகிரியா சுவரோவிய சுவரில் எழுதினார் என்ற குற்றச் சாட்டின் பேரில் சிறைவைக்கப் பட்டிருந்த தமிழ் யுவதி சின்னத்தம்பி உதயசிறி நேற்று வியாழக்கிழமை காலை எட்டு மணிக்கு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.**



இரண்டு வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த உதயசிறிக்கு ஏப்ரல் மாதம் முதலாம் திகதியன்றே ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியிருந்தார்.

எனினும், உதயசிறியை உடனடியாக விடுதலை செய்வதற்கு அவர் சார்பில் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை வரை அவரது விடுதலைக்கு தடையாக இருந்து வந்தது. இந்நிலையில் உதயசிறி, சார்பில் வழக்குத் தொடர்ந்த நல்லாட்சிக்கான மனித உரிமைகள் இயக்கமும், மனித உரிமைகள் இல்லமும் கண்டி மேல் நீதிமன்றத்தில் வைத்து நேற்று முன்தினம் புதன்கிழமை வழக்கை விலக்கிக் கொண்டதை அடுத்து உதயசிறியை உடனடியாக வடுவிப்பதாக சிறைச்சாலை அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

இந்த அறிவித்தல் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலையள விலேயே தமக்குக் கிடைக்கப் பெற்றதால் உதயசிறியை நேற்று வியாழக்கிழமை அழைத்துவரப் போவதாக உதயசிறியின் உறவினர்கள், சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர்.

அதன் பிரகாரம் உதயசிறி இரண்டரை மாதங்களுக்குப் பின்னர் சிறையிலிருந்து தனது வீட்டுக்குத் திரும்பியுள்ளார். (இ-5)

# நிரந்தர நியமனங்களை பாக்கியமாக கருதுங்கள்

## பத்திநாதன் தெரிவிப்பு

நிரந்தர நியமனம் பெற்றுக்கொள்வது வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படுவதற்காக கிடைத்த பாக்கியம் என அனைவரும் எண்ண வேண்டும் என வடமாகாண சபை பிரதம செயலாளர் அ.பத்திநாதன் தெரிவித்துள்ளார்.

கிராம அபிவிருத்தி திணைக்களம் மற்றும் வீதி அபிவிருத்தி திணைக்களத்தில் தற்காலிகமாக பணிபுரிந்தவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு யாழ்.பொதுநூலக கேட்போர்கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசசேவையில் தற்காலிகமாக கடமையாற்றுபவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் அரசாங்கத்தின் சுற்றறிக்கை கடந்த 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வெளியிடப்பட்டது.

நிரந்தரமாக்கும் திட்டத்தை பெப்ரவரி மாதம் ஆரம்பித்தோம். வடமாகாணசபை முதலமைச்சர், அமைச்சர்கள், உறுப்பினர்கள், திணைக்கள அதிகாரிகளின் உதவியுடன் இன்று வரை 1073 தற்காலிகமாக கடமை புரிந்த உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

மேலும் சில உத்தியோகத்தர்களின் நியமனங்கள் ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

ஆறுமாத காலம் கடந்துவிட்டதால் இந்த மாதத்துடன் இத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு திட்டமிட்டுள்ளோம். ஏனெனில் ஏனைய மாவட்டங்களில் இத்திட்டம் முடிவடைந்துள்ளது. எமது மாவட்டத்தில் தாமதமாக நடைபெற்றுள்ளது. இதை விரைந்து செயற்படுத்துவதற்குதிணைக்களப் பணியாளர்கள், அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டியது அவசியம். அவ்வாறு நடைபெறவில்லை.

நிரந்தர நியமனம் பெற்றவர்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் எமக்கு அனுபவம் உள்ளது. சில உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட பின்னர் அவர்களின் நடத்தையில் மாற்றம் ஏற்பட்டு எதிராகச் செயற்படுவதும் வாகனம், வீடு,உயர் சம்பளம் என்பவற்றை எதிர்பார்த்து செயற்படும் நிலை காணப்பட்டது. அவ்வாறான சிந்தனைகள் ஏற்படுத்துவதை தவிர்க்கவேண்டும்.

அரச உத்தியோகத்தர்கள் தமது சேவைக்காலத்தில் அதிகாரிகளிடத்திலும் மக்களிடத்திலும் நல்ல மதிப்பை பெறவேண்டும் எனில் சுயலாபத்துக்கு மேலாக மக்களுக்கு சேவையாற்றி அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். அத்துடன் கொடுக்கப்பட்ட வேலையை விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் செய்யவேண்டும்.

நிரந்தர நியமனம் பெற்றுக் கொள்பவர்கள் தமது அர்ப்பணிப்புக்கான சேவையை மாகாண சபையின் முன்னேற்றத்துக்கு வழங்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4-9)

# யாழ்ப்பாணத்தவர்கள் நால்வர் இந்தியாவில் சிறையிலடைப்பு

இந்தியாவில் போலி கடவுச்சீட்டு தயாரித்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் உச்சக்கட்ட போர் நடைபெற்ற போது இலங்கை தமிழர்கள் பலர் இந்தியாவில் தஞ்சம் அடைந்தனர். இவ்வாறு குடியேறியவர்கள் அவுஸ்திரேலியா, பிரான்ஸ், சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளுக்கு முறைகேடாக சென்று வருவதாக கியூ பிரிவு பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

மேலும், இலங்கையை சேர்ந்த தமிழர்கள் சிலர் போலி கடவுச்சீட்டு தயாரித்து முறைகேடாக சிலரை இந்தியாவில் இருந்து வெளிநாடு அனுப்பி வருவதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. இதைத் தொடர்ந்து கியூ பிரிவு பொலிஸார் தனிப்படை அமைத்து தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர். முதல் கட்டமாக விருகம் பாக்கம், அம்பத்தூர், மதுரவாயல் உள்ளிட்ட பல இடங்களில் தேடுதல் வேட்டை நடந்தது. அம்பத்தூரில் உள்ள வீடு ஒன்றில் சோதனை நடத்திய போது அங்கு சந்தேகத்திற்கு இடமான முறையில் இலங்கை தமிழர்கள் 4 பேர் தங்கி இருந்தனர்.

அவர்களிடம் விசாரணை நடத்தியபோது அவர்கள் போலி கடவுச்சீட்டு தயாரிக்கும் கும்பலை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்தது. பிடிபட்ட 4 பேரும் இலங்கை யாழ்ப்பாணம் பகுதியை சேர்ந்த பாலச்சந்திரன் என்ற பாலா(48), அதே பகுதியைச் சேர்ந்த லிங்கரன் என்ற அதியமான் (43), ஜெயதாசன் (43), தனுஷன் (22) என்பது தெரியவந்தது.

அவர்களிடம் இருந்து 15 போலி கடவுச்சீட்டுக்கள் பறிமுதல் செய்யப் பட்டன. இதைத் தொடர்ந்து 4 பேரும் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் புழல் மத்திய சிறை யில் அடைக்கப்பட்டுள்ளனர்.

# துறைமுக நகரம் தொடர்பில் விளக்கமளிக்க சட்டமா அதிபருக்கு காலஅவகாசம் வழங்கல்

துறைமுக நகரத் திட்டம் தொடர்பில் விளக்கமளிப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு மேன் முறையீட்டு நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதவான் விஜித் கே மலல்கொட நேற்று முன்தினம் இந்த கால அவகாசத்தை வழங்கியுள்ளார்.

சுற்றாடல் காரணிகள் குறித்து கவனம் செலுத்தாது இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புக்கள் குற்றஞ்சுமத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளன.

இந்த மனு மீதான விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்ற போது துறைமுக நகரம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து விளக்கம் அளிப்பதற்கு கால அவகாசம் வழங்குமாறு கோரப்பட்டது.

விளக்கம் அளிக்குமாறு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் காலம் தாழ்த்தி கிடைக்கப்பெற்றதனாலேயே கால அவகாசம் கோரப்பட்டது என சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றில் அறிவித்திருந்தது.

இந்நிலையிலேயே எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதி வரையில் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (இ-5)

# இராசி பலன்

01.05.2015
(சித்திரை 18, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
திரயோதசி முழுவதும்
அத்தம் முழுவதும்
இராகுகாலம் 10.27-11.57 மணிவரை
சுபநேரம் 5.57-7.27 மணிவரை
பிரதோச விரதம்

வளவன்

**மீனம்:** சொந்த பந்தங்களின் வருகையுண்டு, வீட்டுத்தேவைகள் எளி தில் பூர்த்தியாகும், முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், சொந்த இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**மேடம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சி வெற்றிதரும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**இடபம்:** பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வியாபார விருத்தியுண்டு.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், வியாபாரத்தை விரிவுபடுத்த முயற்சிப்பீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கும்பம்:** மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது,வழிபாட்டல் அமைதி காண வேண்டிய நாள், பிரயாணத்தின் போது விழிப்புணர்வு அவசியம்.

**கடகம்:** பாசத்தோடு பழகியவர்களின் எண்ணங்கள் கூடும்,பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள்,எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** ஏட்டுக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்,பயணங்களால் பலனுண்டு,புதிய முயற்சிகள் வெற்றி தரும்.

**சிம்மம்:** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள்,குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும், சான்றோர் சந்திப்புண்டு, வழிபாட்டால் இன்பங்கள் கூடும்.

**தனுசு:** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும் நாள், வரம் தரும் தெய்வங்களை வழிபட செல்ல வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், விருந்தினர் வருகையுண்டு.

**துலாம்:** புண்ணிய காரியங்களுக்காக சிறிது செலவுசெய்து மகிழ்வீர்கள், வேலைச்சுமை அதிகரிக்கும், கடவுளை வழிபட்டு பயன் பெற வேண்டிய நாள், சயன குறைவான நாள்.

**கன்னி:** வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், மனதிற்கு ஆறுதல் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பெரியோரை மதித்து நடப்பது நல்லது, தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹொக், உத்தப்பா, ரஸல் அசத்தல்

# கொல்கத்தா வெற்றி




அன்ரோ ரசல், றொபின் உத்தப பாவின் அசத்தலான துடுப்பாட்டத் தினால் சென்னை அணிக்கு எதி ரான லீக் போட்டியில் கொல்கத்தா அணி ஒரு பந்து மீதமிருக்கையில் 7 விக்கெட்டுக்களால் திரில் வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். திருவிழாவின் நேற் றைய போட்டி சென்னை - கொல் கத்தா அணிகளுக்கு இடையில் கொல்கத் தாவின் ஈடன் கார்டன்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணித் தலைவர் காம் பீர் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய சென்னை அணிக்கு மக்கலம் அதிரடியால் ஜெட் வேகத்தில் சென்ற சென்னை அணியின்ஓட்ட விகிதம் அவர் ஆட்டமிழந்ததும் படிப்படியாக இறங்கியது.

இதனால்சென்னை அணிநிர்ண யிக்கப்பட்ட 20 ஓவர்களின் நிறை வில் 9 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 165 ஓட்டங்கள் எடுத்தது.

மக்கலம் 32, டூ பிளசிஸ் 20, பிராவோ 30, ஜடேஜா 24, நெகி 27 ஓட்டங்கள் எடுத்தனர்.

கொல்கத்தா அணி சார்பில் பிராட் ஹொக் 29 ஓட்டங்கள் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

166 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல் கத்தா அணி களம் இறங்கியது.

4.2 ஓவர்களில் 33 ஓட்டங்கள் எடுத்திருக்கும்போது காம்பீர் 19 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த மணீஷ் பாண்டே 3, சூர்யகுமார் யாதவ் 2 ஓட்டங்களில் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனா் இதன் காரணமாக கொல்கத்தா அணி 9.1 ஓவர்களில் 57 ஓட்டங் கள் எடுப் பதற்குள் முக்கிய 3 விக் கெடுக்களை இழந்தது.

4ஆவது விக்கெட்டுக்கு உத் தப்பாவுடன் ரஸல் ஜோடி சேர்ந் தார். இந்த ஜோடி சென்னை அணி யின் பந்து வீச்சை விளாசித் தள்ளி யது. இதனால் ஒரு ஓவருக்கு 10 ஓட் டங்கள் வீதம் கொல்கத்தா அணிக்கு வந்தது. இதனால் அந்த அணி 16 ஓவர்கள் நிறைவில் 132 ஓட்டங் கள் எடுத்தது. உத்தப்பாவும் அரை சதத்தை தாண்டினார்.

கடைசி 4 ஓவர்களில் கொல் கத்தா அணிக்கு 34 ஓட்டங்கள் தேவைப்பட்டது. 17ஆவது ஓவரை பிராவோ வீசினார். இந்த ஓவரின் 4ஆவது மற்றும் 5ஆவது பந்தில் ரஸல் இரண்டு இமாலய சிக்சர்கள் விளாசினார். அத்துடன் 25 பந்தில் அரை சதத்தை கடந்தார். அந்த ஓவரில் கொல்கத்தா அணி 15 ஓட் டங்கள் எடுத்தது.

இதனால் இறுதி 18 பந்துகளில் 19 ஓட்டங்கள் தேவைப்பட்டது. 18 ஆவது ஓவரை ரோனித் மோர் வீசினார். இந்த ஓவரில் 8 ஓட்டங் கள் எடுக்கப்பட்டது.

இதனால் கொல்கத்தா அணி யின் வெற்றிக்கு 12 பந்துகளில் 11 ஓட்டங்கள் தேவைப்பட்டது. 19ஆவது ஓவரை மோகித் சர்மா வீசினார். இந்த ஓவரில் கொல்கத்தா 5 ஓட் டங்கள் எடுத்தது. இதனால் கடைசி ஓவரில் 6 ஓட்டங்கள் தேவைப்பட்டது.

கடைசி ஓவரை ரோனித் மோர் வீசினார். முதல் இரண்டு பந்தில் இரண்டு ஓட்டங்கள் எடுக்கப்பட்டது. 3ஆவது பந்தில் உத்தப்பா இரண்டு ஓட்டங்கள் எடுத்தார். இதனால் கடைசி 3 பந்தில் 2 ஓட்டங்கள் தேவைப்பட்டது. 3ஆவது பந்தில் உத்தப்பா ஒரு ஓட்டம் எடுத்தார். இதனால் கடைசி இரண்டு பந்தில் ஒரு ஓட்டம் தேவைப்பட்டது. 5ஆவது பந்தை ரஸல் பவுண்டரிக்கு விரட்டி கொல்கத்தா அணியை 7 விக்கெட் டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்தார்.

கொல்கத்தா அணி 19.5 ஓவர் களில் 3 விக்கெட் இழப்பிற்கு 169 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. உத்தப்பா 80, ரஸல் 59 ஓட்டங் களுடன் களத்தில் இருந்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக கொல்கத்தா அணியின் ரஸல் தெரிவானார்.

## ஜோர்ஜ் வெப்ஸ்ரர் வெற்றிக் கிண்ணம்

## ஜொலிஸ்ரார் தொடர்ந்தும் முன்னிலை

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 6ஆவது ஆண்டாக தொடர்ந்து நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் 01.01.2015 தொடக்கம் 30.04.2015 வரை நடைபெற்று முடிந்த 26 போட்டிகளின் முடிவுகளின் அடிப் படையில், ஜொலிஸ்ரார் அணி 7 போட்டிகளில் பங்குபற்றி 5 போட்டி களில் வெற்றிபெற்று 36.60 புள்ளிகளைப் பெற்று தொடர்ந்தும் முன்னிலையில் உள்ளது.



அணி, பெற்றபுள்ளிகள், பங்கு பற்றிய போட்டிகள், வெற்றி என்ற அடிப்படையில் தரவரிசைப்பட்டி யல் பின்வருமாறு,

ஜொலிஸ்ரார் - 36.60 (07/05), யாழ்.பல்கலைக்கழகம் - 32.25 (07/04), சென்றலைட்ஸ் (சொக்ஸ்) - 22.82 (05/03), யாழ்.சென்றல் - 22.34 (04/02), யாழ்.ஜொனியன்ஸ் - 17.66 (02/02), ஸ்ரான்லி - 14.00 (04/01), திருநெல்வேலி சீ.சீ - 10.15 (02/01), ஸ்கந்தாஸ்ரார் - (9.62) (02/01), கிறாஸ்கொப்பர்ஸ் - 9.45 (02/01), கே.சீ.சீ.சீ "A" - 8.96 (03-01), மானிப்பாய் பரீஸ் - 8.92 (01/01), சிறீகாமாட்சி - 8.79 (02/01), பற்றீ சியன்ஸ் - 8.10 (02/01), சென்ற லைட்ஸ் (புளூஸ்) - 6.00 (01/01), மூளாய் விக்டோரி - 5.64 (01/01), நியூஸ்ரார் - 4.76 (02/00), யூனியன்ஸ் - 2.29 (01/00), அரி யாலை சென்றல் - 2.19 (01/00), திருநெல்வேலி YMHA - 1.98 (01/ 00), கே.சீ.சீ.சீ "B" - 1.74 (01/00), றொயின்போ - 1.15 (01/00)




## வடக்கு மாகாண...

இது தொடர்பில் பட்டதாரிகள் மேலும் தெரிவிக்கையில், அரச வேலை வாய்பை வழுங்கக் கோரிய கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் வடமா காண வேலையற்ற பட்டதாரிகள் சமூகத்தனரால்நேற்றும் (29.04.2015) இன்றும் (30.04.2015) தொடர்ச்சி யாக இரவு பகலாக யாழ். மாவட்டச் செயலக முன்றலில மேற்கொள்ளப் பட்டது.

குறித்த கவனயீர்ப்பு போராட்டத் தில் இரண்டு நாட்களும் ஐந்நூறுக் கும் மேற்பட்ட வட மாகாணத்தைச் சேர்ந்த பட்டதாரிகள் குறித்த பகுதி யில் ஒன்றுகூடி பதாகைகளை ஏந்தி அமைதியான வழியில் கவனயீரப்பு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டு வந்தோம்.

இந்நிலையில் இன்று (நேற்று) மாலை 6.10 மணியளவில் வட மாகாணத்தைச் சேர்ந்த சுகாதார அமைச்சர். கல்வி அமைச்சர், விவ சாய அமைச்சர், மீன்பிடி அமைச்சா் மற்றும் வடமாகாண சபை உறுப் பினர்கள் சிலர் குறித்த பகுதிக்கு வருகைதந்து எமது வேலை வாய்ப் புத் தொடர்பான பிரச்சினைகளை கேட்டறிந்தனர்.

குறித்த கலந்துரையாடலைத் தொடர்ந்து வேலையில்லாப் பட்ட தாரிகளாகிய எம்மால் விடுக்கப் பட்ட உடனடி வேலைவாய்பினை வழுங்கவேண்டும் என்ற கோரிக் கைக்கு அமைவாக குறித்த அமைச் சர்களினால் அவர்களுடைய அமைச் சுக்கு உட்பட்ட வெற்றிடங்களுக்கு வேலைவாய்ப்புக்களில் இணைத் துக் கொள்வதற்கான வழிவகை கள் உருவாக்கப்பட்டு வேலை வாய்ப் பில் இணைத்துக் கொள்ளப்படும் என உறுதியளித்தனர்.

இந்நிலையில் வேலையில்லா பட்டதாரிகளினால், குறித்த பிரச் சினை தொடர்ந்தும் இழுத் தடிக்கப் படாமல் குறிப்பாக ஒரு மாத காலப் பகு திக்குள் தீர்வு வழங்கப்பட வேண்டும் எனக்கோரிக்கைமுன்வைக்கப்பட்டது.

இதனையடுத்து இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் இப் பிரச் சினைக்குத் தீர்வு வழுங்குவதாக வும் அதற்கமைய எம்மால் மேற் கொள்ளப்பட்ட கவனயீர்ப்புப் போராட டத்தை தற்காலிமாக நிறுத்த வேண்டும் என்ற உறுதி மொழிக்கு அமைவாக வட மாகாண பட்டதாரி கள் சமூகம் கவனயீர்ப்பு போராட் டத்தை தற்காலிகமாக நிறுத்திக்கொண் டுள்ளது என தெரிவித்தனர். (செ-4)

## நேபாள அனர்த்தம்...

பெற்ற இயற்கை அனர்த்தத்தினால் பல ஆயிரக்கணக்கான மக்கள் இறந்தனர். அவர்களது ஆத்மா சாந்தியடைய வேண்டி வடக்கு மாகாண சபையில் அனைவரும் ஏகமனதாக இறந்தவர்களுக்கு இரண்டு நிமிடம் அஞ்சலி செலுத் தினர்.

அத்துடன் நேபாள நாட்டில் அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் ஐயாயிரத்திற் கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந் துள்ளதோடு அவர்களின் சொத்துக் களும் சேதத்திற்கு உள்ளாக்கப் பட்டுள்ளன. இவ்வாறு இவ் அனர்த் தத்தில் இறந்த மக்களது ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்றும் இரங்கலும் தெரிவித்து வடக்கு முதலவர் உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## தனியார்...

அதிகரிக்கவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதனிடையே, தனியார் பிரி விற்கான உத்தேச சம்பள அதி கரிப்பின் எஞ்சிய ஆயிரம் ரூபா அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் வழங்கப் படவுள்ளதுடன் நாளாந்த ஊதியம் பெறும் சேவையாளர்களின் 40 ரூபா சம்பள அதிகரிப்பு அன்றைய தினமே அமுல்படுத்தப்படவுள்ளது.


தொழிலமைச்சர் எஸ்.பி. நாவின்ன இந்த யோசனையை அமைச்சரவையில் முன்வைத்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (செ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிதம்பரம் நடராஜர் கோவிலில் இன்று மஹாகும்பாபிஷேகம்

## யாழிலிருந்தும் பக்தர்கள் யாத்திரை





சிதம்பரம் நடராஜர் கோவில் மஹா கும்பாபிஷேகம், இன்று காலை, 7 மணிக்கு நடைபெறவுள்ளது. கடலூர் மாவ ட்டம், சிதம்பரத்தில், பிரசித்தி பெற்ற நடராஜர் கோவில், 40 ஏக்கர் பரப்பில், நான்கு இராஜ கோபுரங்கள், ஒன்பது வாயில்கள், 15 பிரதான சந்நிதிகள் கொண்டது.

இங்கு, 400 தீட்சிதர்கள் பூஜை தாரராக உள்ளனர். இக்கோவிலில், கடந்த, 1955, 1987ம் ஆணடுகளில், நான்கு இராஜகோபுரம் உட்பட, அனைத்து சந்நிதிகளுக் கும், மஹா கும்பாபிஷேகம் நடந் தது.

தற்போது, 27 ஆண்டுகளுக்குப் பின், இன்று மஹா கும்பாபிஷேகம் நடக்க உள்ளது. கோவில் திருப்பணி, தீட்சிதர்கள், கட்டளை தாரர்கள் மூலம், 40 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. யாகசாலை பணிகளுக்கு மட்டும், 9.5 கோடி ரூபாய செலவிடப்படுகிறது. கடந்த, 25ஆம் திகதி முதல், யாகசாலை பூஜைகள் நடந்து வருகின்றன.

இன்று முதலாம் திகதி காலை, தம்பதி பூஜை, கோ பூஜை உள்ளிட்ட சிறப்பு பூஜை, கடம் புறப்பாடு செய்து, காலை, 7மணிக்கு, சிவகாம சுந்தரி சமேத ஆனந்த நடராஜ ராஜமூர்த்தி சித்சபை, ஆயிரங்கால் மண்டபம், நான்கு இராஜகோபுரங்கள் ஆகியவற்றுக்கு, ஒரே நேரத்தில், மஹா கும்பாபிஷேகம் நடக்கவுள்ளது.

பின், சித்சபையில், சிவகாமசுந்தரி அம்மன் சமேத நடராஜருக்கு சிறப்பு அலங்காரம், மகா தீபாராதனைக்கு பின், நடராஜர், சித்சபையில் இருந்து கனகசபைக்கு எழுந்தருளுகிறார்.

இரவு, பஞ்சமூர்த்திகளுடன், தெருவடைச்சான் சப்பறம் உற்சவத்தில் நடராஜர் வீதியுலா நடக்கவுள்ளது. இதேவேளை நாளை, 2ஆம் திகதி காலை, நடராஜர் சுவாமி சிறப்பு தேரோட்டம் நடைபெறவுள்ளது.

மாலையில், ராஜசபை ஆயி ரங்கால் மண்டபத்தில் நடராஜர் எழுந்தருளு கிறார். அன்றிரவு, இலட்சார்ச்சனை நடக்கவுள்ளது.

கும்பாபிஷேக விழா ஏற்பாடுகளை, பொது தீட்சிதர் செயலர் சர்வேஸ்வர தீட்சிதர், கும்பாபி ஷேக கட்டளை ஒருங்கிணைப்பாளர் தியாகப்பா தீட்சிதர் மற்றும் பொது தீட்சிதர்கள் செய்து வருகின்றனர்.

கும்பாபிஷேகம் செய்யும்போது கும்பத் தீர்த்தத்தில் இறைவனை ஆவாகனம் செய்து, யாக த்தின மூலம் மந்திரம் ஜெபித்து சக்தியை உருவேற்றி, அந்தக் கும்பத் தீர்த்தத்தை இறை பிம்பத்திலும் கோபுர கலசங்களிலும் அபிஷேகம் செய்வர்.


கடவுளின் உடலாகக் கும்பத்தையும், அதன் மேல் சுற்றப்பட்ட நூல் 72 ஆயிரம் நாடி நரம்புகளையும், உள்ளே ஊற்றப்பட்ட நீர் இரத்தமாகவும், அதனுள் போடப்பட்ட தங்கம் ஜீவனாகவும், மேலே வைக்கப்பட்ட தேங்காய் தலையாகவும், கும்பத்தின் கீழ் பரப்பப்பட்ட தானியம் ஆசனமாகவும் பாவித்து வஸ்திரம், சந்தனம், பூக்கள் ஆகியவற்றைக் கொண்டு அலங்காரம் செய்து யாக மேடையில் அமைப்பது வழக்கமாகும்.


சாதாரண கும்பமானது மந்திர சக்தியால் உயர்கலசமாக மாறுகிறது. கும்பாபிஷேகத்தால் ஆலயத்தின் இறைசக்தி பன்மடங்கு பெருகுகிறது.

இதேவேளை நடராஜர் திருக்கோவில் மஹாகும்பாபிஷேகத்தில் பங்கெடுத்து அருளைப் பெற்றுக் கொள்வதற்காக ஈழத்தில் இருந்து குறிப்பாக யாழ்ப்பாணத்திலிருந்து அதிகளவான பக்தர்கள் சிதம்பரத்திற்கு யாத்திரை மேற்கொண்டுள்ளனர்.

## 100 ஆண்டுகளுக்குப் பின்னர்

# தஞ்சைப் பெரிய கோவிலில் தேர்த்திருவிழா





உலகப் புகழ்பெற்ற தஞ்சை பெரிய கோவிலில் சுமார் 100 ஆண்டுகளுக்குப் பிறகு, சித்திரைத் திருவிழாவில் தேரோட்டம் நடைபெற்றிரு க்கிறது.

19ஆம் நூற்றாண்டுகளுக்குப் பிறகு தஞ்சைப் பெரிய கோவிலில் தேரோட்டம் நடைபெறவில்லை என்கின்றனர் ஆய்வாளர்கள்.

தஞ்சாவூர் மராட்டிய மன்னர்களின் கீழ் இருந்தபோது, 18 நாட்கள் நடந்த சித்திரைத் திருவிழாவில் தேரோட்டம் என்பது மிக முக்கியமான ஒரு நிகழ்வாக இருந்து வந்தது.

ஆனால், அந்தத் தேர் பழுதடைந்த நிலையில், பல ஆண்டுகளுக்கு முன்பாக தேரோட்டம் நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில், தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் புதிதாக தேர் ஒன்றைச் செய்ய தமிழக அரசு 50 இலட்ச ரூபாயை ஒதுக்கீடு செய்திருந்தது.

இதையடுத்து, 16.5 அடி உயரத்தில் புதிய தேர் 3 அடுக்குகளுடன் 40 தொன் எடையில் உருவாக்கப்பட்டது. இந்தத் தேரின் வெள்ளோட்டம் சில நாட்களுக்கு முன்பாக நடைபெற்றது.

அதற்குப் பிறகு நேற்று முன் தினம் காலை 6.30 அளவில். தியாகராஜர் என்ற உற்சவர் தேரில் வைக்கப்பட்டு தேர் நிலையிலிருந்து புறப்பட்டது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் தேரை இழுத்துச் சென்றனர். சில இடங்களில் ஜேசிபி எந்திரங்களின் மூலமும் தேர் தள்ளப்பட்டது.

100 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தத் தேரோட்டம் நடப்பதாக பலரும் கூறினாலும், 1818ஆம் ஆண்டிற்குப் பிறகு, தேரோட்டம் நடந்ததற்கான சான்றுகளே இல்லை என தஞ்சாவூரைச் சேர்ந்த ஆய்வாளர் குடவாயில் பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். பல்வேறு தரப்பினரையும் இந்தத் தேரோட்டம் ஒருங்கிணைக்கிறது என்கிறார் பாலசுப்பிரமணியம்

தேரோட்டம் நடைபெற்ற 4 ராஜவீதிகளிலும் போக்குவரத்து முழுமையாக நிறுத்தப்பட்டது. இந்தத் தேரோட்டத்தில் ஆயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். இந்தத் திரு விழாவை யொட்டி மாவட்டத்தில்உள்ள அனைத்து மாநில அரசு அலுவ லகங்களுக்கும் நேற்று முன்தினம் உள்ளூர் விடுமுறை விடப்பட்டிருந்தது. (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி இரணைமடு கனக
# தேர்த்திருவிழா சிறப்புமல



### ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி

பல்லுலகும் பல உயிரும் படைத்து அளித்து துடைக்கும் எல்லையறு பரம்பொருளாகிய இறைவனுடைய திருவருள் சக்தியாக விளங்குபவள் உலகமாதா ஆதிபராசக்தி. இதனையே திருவருட்பயன்

**தன்னிலமை மன்னுயிர்கள் சாரத் தரும்சக்தி**
**பின்னமிலான் எங்கள் பிரான் என்கிறது.**

இறைவனுடைய பேரருளை உலக ஆன்மாக்கள் பெற்றுய்ய துணை செய்யும் அன்னை அகில அண்டங்களையும் படைத்தும் காத்தும் அழித்தும் அருளியும் மறைத்தும் உயிர்களிடத்து அன்பு செலுத்தி பரிபூரணமாய் விளங்கும் அன்னை இரணைமடுக்குளத்தின் காவற்தெய்வமாக கனகாம்பிகையாக வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள். இவ் ஆலயம் ஆகம முறைகளைப் பின்பற்றி பண்பாட்டு விழுமியங்களை பேணி வழிபாட்டிலும் துயர் துடைப்பு பணிகளிலும் உளவளத்துணை நிலையமாகவும் மிளிர வாழ்த்துவதோடு அம்பிகை தேரில் ஆரோகணித்து கடைக்கண்ணால் அருள்பாலிக்கவும் வடம்பிடிப்போமாக. வந்திப்போமாக. வாழ்வு உயர கனகாம்பிகைத்தாயே பாதம் பணிகின்றேன்.

**லோகா சமஸ்தா சுகினோ பவந்து விவித வித்தியன்**
**சிதம்பர லக்சுமி திவாகரக்குருக்கள், பிரதம குரு, கனகாம்பிகை அம்பாள் ஆலயம்,இரணைமடு**



### அம்பிகை தேரேறும் அற்புதம் காணீர்!

இரணைமடுவெனும் புண்ணியதீர்த்தத்தின் அருகே விரும்பி உறைந்து எப்பொழுதும் இளகியமனதுடன் அருள்புரியும் இரணைமடு கனகாம்பிகை அம்பாள் இம்முறையும் பக்தர்கள் புடைசூழ சித்திரத்தேரேறுகின்றாள். அவள் அருள் விழிப்பார்வையில் விரியும் கிளிநொச்சி மருதநிலம் நீராலும் நெற்கதிர்களாலும் பச்சையுடுத்து ததூகலிக்கின்றது. அமைதியும் சாந்தமும் கொண்ட சூழலில் பன்னெடுங்காலமாக அமர்ந்திருக்கும் அம்பிகை வருடாவருடம் ஊர்களை தரிசித்து பக்தர்களுக்கு அருள்பாலித்துவந்து தேரேறி தீவினைகள் அழித்து அகந்தை ஆணவ எண்ணங்களையும் சம்காரித்து நல்வாழ்வளிக்கும் பொழுதுதான் இது வரட்சி தலைவிரித்தாடும் காலத்தில் அம்பிகை வாசலில் பொங்கலிட்டு அடியார்கள் செய்யும் வேண்டுதல்களில் மழை இரங்குவது அம்பிகையின் அருட்கடாட்சம். அம்பாளின் திருவடியில் இரணைமடுப்பெருந் தீர்த்தம் கிளிநொச்சி நிலமெங்கும் பரவி மக்களின் வாழ்க்கையில் துயர்தீர்க்கும் வண்ணமாய் இருக்கின்றது. தன் உறவுகளின் துயர் தீராமல் அன்னை பள்ளி கொள்ளாள். அவள் வல்லமையெனும்வாளோடு இருப்பவள். வந்து அவள் கண்ணில் உலவி மண்ணில் நல்ல வாழ்வு வாழ்வீராக.

**சி.சிறிதரன் , பாராளுமன்ற உறுப்பினர், யாழ்ப்பாணத்தேர்தல் மாவட்டம், கிளிநொச்சி**



### வாழ்த்துச் செய்தி

நீரும் நெல்லும் அழகும் வளமும் நிறைந்த அருள்மிகு ஸ்ரீ கனகாம்பிகை அம்மனின் தேர்ப்பவனி வீதியுலா வருங்காட்சி அழகு. காண்பவரின் கண்ணும் மனமும் களிப்புறும். இயற்கை எழிலும் மயில்களின் குரலும் குயிலிசையும் இணைந்த பேரழகுச் சூழலில் அமைந்த நாயகியின் அழகும் பொலிவும் எமது மக்களின் வாழ்வை இளமையோடு இனிதாக்கும். கிளிநொச்சி மாவட்டத்தின் அன்னையாக வீற்றிருந்து அருள்பாலிக்கும் கனகாம்பிகை அம்மன் விவசாயிகளின் ஆதார சக்தி. வணிகர்களின் அழகு சுந்தரி. தொழிலாளர்களின் குலத்தாய். அன்னையை நாடி வந்தோருக்கு தன்னை உருக்கித் தங்கமாக அருள்மழை பொழியும் அற்புதத் தெய்வம்.அம்மனின் தேருலாக் கண்டு நல்லாசிகளும் நல்லருளும் கோடி பெறுவோம்.

**மு.சந்திரகுமார், பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக்குழுக்களின் பிரதித்தலைவரும்.**



### அருள் மழைபொழியட்டும் புத்துணர்ச்சி பெறட்டும்

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற வாக்கியத்திற்கமைவாகவும் அதிசிரத்தையாக பக்தி மேலீட்டினாலும் பல கோயில்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்தபோதும் முதன் பெற்று விளங்குவது கனகாம்பிகை அம்மன் ஆலயம் என்றால் மறுக்கமுடியாத உண்மை.

சித்தரின் சிந்தனையில் எமது திணைக்களத்தில் இருக்கும்போதே உதித்த இவ்வாலயம் சமூக சமயப் பணிகளை ஆற்றுவதோடு மட்டுமல்லாது ஆகம வழிபாடுகளிலும் சிறந்து விளங்குகின்றது.

சித்திரத்தேரில் புத்திரரோடு பவனிவரும் அன்னை அருள் மழையில் நனைந்து மக்கள் வாழ்வு சிறக்கட்டும் என அம்பிகையின் திருப்பாதங்களை வணங்கி வாழ்த்துகின்றேன்;

திரு.கு.செந்தூரன்
நீர்ப்பாசனப் பொறியியலாளர், கிளிநொச்சி

**வடம் பிடித்தால் இறை உலகில் இடம் பிடிக்கலாம் - என்றெண்ணி திருத்தேர் வடம் பிடிக்க வாரீர்**
**மலரமைப்பு துரைராசா டெசிகரன்**
**சைவப்பணியில் ... ஆலய அறங்காவலர் சபை**
**அன்னையின் அருள் அகிலமெல்லாம் ஆளும்**
**விசேட குறிப்பு : தேர்த்திருவிழா தினத்தன்றும்**
**தீர்த்தோற்சவமன்றும் கிளிநொச்சி நகரில் இருந்து விசேட போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.**
**குறிப்பு : 03.05.2015 முற்பகல் 10.00 மணிக்கு இரணைமடு வாவியில் தீர்த்தத்திருவிழா இடம்பெறும் தொடர்ந்து இரவு பாரம்பரிய நிகழ்வாக இரணைமடு தடாகத்திலிருந்து கும்பதீர்த்தம் எடுத்து அன்னைக்கு அபிஷேகம் இடம்பெறும் அத்துடன் பொங்கல் விழாவும் இடம்பெறும்.**
**அடியவர்கள் அனைவரும் இந் நிகழ்வில் கலந்து கொள்ளவும்**




### திருத்தேர் வடம்பிடிக்க வாரீர்!

இந்த ஆண்டு தவத்திரு யோகர் சுவாமிகளுடைய 51ஆவது குருபூசை தின விழா... கள் நடைபெறும். இலங்கைத்தீவில் வடமாகாணத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு பகுதியில் பெரும் கோவில் கொண்டு எழுந்தருயிருக்கும் ஸ்ரீ கனகாம்பிகை அம்பாளின் தேர்த்திருவிழா தவத்திரு யோகர்சுவாமிகளின் சிந்தனையில் உருக்கொண்டு அறிவுரைகளால் வளர்ந்துவரும் இவ்வாலயத்தில் ஆண்டுத் திருவிழாக்காலம் அமைவதையிட்டு கிளிநொச்சி மக்களாகிய நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம். சுவாமிகள் இரணைமடுக் குளக் கட்டுமானப் பணி நடந்தவேளை களஞ்சியப் பொறுப்பாளராக நடமாடியதால் அவர்களுடைய தூய திருவடிகளைச் சுமந்து புனிதமடைந்தது இத்திருத்தலம். இவ்விடத்திற்கும் இக்காலத்திற்கும் ஏற்ற தெய்வமான மதுரை மீனாட்சியின் மூர்த்தமாயுள்ள கனகாம்பிகை அம்மனை நிலைநிறுத்தி வழிபடுவதோடு சித்திரை பூரணைதோ றும் இரணைமடுக்குள நீரால் நயமும் நலமும் பெறும் கிளிநொச்சி மக்களை ஆயிரம் பானைகள் வைத்துப் பொங்குங்கள் என்று கூறிய சுவாமிகளின் வாக்கிற்கேற்ப எந்த இடர் இன்னல் வந்தாலும் கடந்த 51 ஆண்டுகளுக்கு மேலாக பெருவிழா எடுத்து பொங்கி பெருமகிழ்படைபவர் கிளிநொச்சி மக்களே! கிளிநொச்சி பிராந்தியம் தோறுமுள்ள ஊர்களில் பங்குனி முதலாம் திங்கள் முதல் 12 நாட்களில் ஊர்தோறும் ஊருலா அழைத்து வீதிகளைச் சுத்தம் செய்து இல்லங்களின் வாயில்களில் வாழை நாட்டி மாவிலை தோரணம் கட்டி பூரண கும்பம் வைத்து நிறைவான பெரு...

### அன்னையின் தேர் ஓட்டத்தால் ஏரோட்டம் ஏற்றம் பெறட்டும்...

செந்நெல் பொலிந்து நல்நெல் விளையும்
கிளிமாநகரில் வளமென்றால் இரணைமடு
அந்நாளில் களஞ்சியம் காத்தோன் வன்னி வளம் பெற
இரணைமடுதாயென்றுகருடன் வழிகாட்டஅமைத்த இவ்வாலயம்
இந்நாளில் மூர்த்திதலம் தீர்த்தம் மூன்றும் ஒருங்கமைந்து
முச்சித்திரத் தேர் கொண்டு சித்திரைத் திங்கள்
இந்திரலோகமாககால் கடுக்ககாவடிகள் ஆடும் கூட்டம்
ஊர்திரண்டுவடம் பிடிக்கும் இந்நன்நாளில்
சாந்தியும் சமாதானமும் பெற்று பேரின்பபெருவாழ்வுபெற
கனகாம்பிகைத் தாயே உன் கடைக்கண்ணால் அருளம்மா
புந்திநிறைவதுபோல் சந்நிதிமுன்னுள்ள தீர்த்தம் நிரம்பட்டும்
ஏரோட்டம் சிறக்கட்டும் ஏராளர் பொங்கட்டும் புதுப்பாதை திறக்கட்டும்
எந்நாளும் உன் கடைக்கண்பார்வை கிடைக்கட்டும் என்று இறைஞ்சுகின்றேன்.

**வீ. சந்திரதாஸ், செயலாளர், அறங்காவலர் சபை, கனகாம்பிகை அம்மன் கோவில், இரணைமடு.**

நியூ சிவா ரேடிங் கோ
மொத்த, சில்லறை வாணிபம்
ஏக முகவர்- மரினா எண்ணெய் வகை
29, 30
A9, வீதி,கிளிநொச்சி.
021 228 3714

HURU HARDWARE
All Buildings Materiels & Paint Suppliers
Leading Hardware Merchants in Kilinochchi
Proprietor: N. Sivakumar
Mobile: 077 869 1045
T.P. 021 228 0111
Fax: 021 228 0222
No. 175, Karadippokku Junction,
A9 Road, Kilinochchi.

ஹரே கிருஷ்ணா ஹாட்வெயார்
இல. 15/2, கனகபுரம் வீதி,
கிளிநொச்சி.
TP:- 077 470 1328,
077 678 7710

Murukandy Pillaiyar Hardwar
HNB அருகாமை
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி.
TP:- 021 228 5474/
077 915 3787

சிவா பதிப்பகம்
புத்தகங்கள், துண்டுப்பிரசுரங்கள், விளம்பரப்பலகை, அலுவலக ஆள் அடையாள அட்டை, திரை அச்சு (Screen Print) முதலான அனைத்து வகையான அச்சக வேலைகளையும் ஒரே இடத்தில் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
05, கனகபுரம்,
கிளிநொச்சி.
No.05, Kanagapuram, Kilinochchi
T.P. 021 2285534
Email: R.Sivapathippakam@gmail.com
இறப்பர் முத்திரை ஒரு மணி நேரத்தில் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

மக்கள் வங்கி முன்பாக
Sri Kanesha Grocery Centre
சகல விதமான பல்பொருள்
தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்
480, Kandy Road,
Kilinochchi.

சோலைவனம்
கிளிநொச்சி
Rooms
Training Hall
Food
இல. 79,
உதயநகர் மேற்கு,
கிளிநொச்சி.
TP:- 021 228 3933
Mob:- 077 776 3355
E-mail:solaivanamguesthouse
@gmail.com
web: www.solaivanam.lk

ஸ்ரீ கு
Dealers
Silk Sarees
Near Kantas

FRIENDS INN
Reception Hall & Rest House
Wedding/ Conference Hall
A/C, Non A/C Rooms
Swimming Pool Restaurant
Kilifriendsinn@gmail.com
No.18, 4th Cross Street
Kanagapuram, Kilinochchi
077 399 9210,
021 228 3666
www.friendsinn.net

MURUGAVEL WELDING WORKS
KANAGAPURAM ROAD,
KILINOCHCHI. HNB முன்பாக
சகல விதமான Gate வகைகள் GRIL வகைகள் மற்றும் Trader வகைகள்; சகல விதமான ஒட்டு வேலைகளுக்கு நாடுங்கள்.
TP: 077 3210350
உரிமையாளர்:- ரி.ஜெகன்

யாழ்
பூப்புனி
Regd No. Kn/kr-105


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுத்தல் அளவைக் கருவிகளுக்கு வலிகாமம் தெற்கில் முத்திரையிடல்

(சுன்னாகம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள சகல வர்த்தகர்களினதும் ப.நோ.கூ.சங்கங்கள், சந்தை வியாபாரிகள் உட்பட நிறுவைகள், அளவைகள் நிறுக்கும் கருவிகளுக்கு அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் பரிசோதித்து முத்திரையிடப்பட உள்ளதால் சகல வர்த்தகர்களும் நிறுவைகள், அளவைகள் கருவிகளுக்கு கீழ்காணும் திகதிகளில் முத்திரையினை பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச சபைத் தவிசாளர் கேட்டுள்ளார்.

எதிர்வரும் 5,7,8 ஆம் திகதிகளில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை உடுவில் உப அலுவலக பொது நூலக கட்டடம், மருதனார் மடத்திலும் 11,12,14,15 ஆம் திகதிகளில் வலி. தெற்கு பிரதேச சபை சுன்னாகம் உப அலுவலகம் சுன்னாகத்திலும் இடம்பெறவுள்ளன. (இ-3)




# தொழிலாளர் தினத்தை முன்னிட்டு இன்று விடுமுறை வழங்குங்கள்

## பிரதித் தொழில் ஆணையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**தொழிலாளர் தினத்தை முன்னிட்டு இன்று முதலாம் திகதி அனைத்து தனியார் வர்த்தக, கூட்டுறவு நிலையங்களையும் மூடி தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்குமாறு வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் அறிவித்துள்ளார்.**

கடிதம் மூலமாகவும் தொலைபேசி மூலமாகவும் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே தொழிலாளர் தினத்தன்று அனைத்து தனியார், வர்த்தக, கூட்டுறவு நிலையங்களையும் மூடி தொழிலாளர்களுக்கு விமுறை வழங்குமாறு அனைத்து தொழில் தருநர்களையும் கேட்டுக்கொள்வதாக ஆணையாளர் மேலும் கேட்டுள்ளார். (இ-3)

# பட்டதாரிகள் நியமனத்திற்குள் உள்வாங்குமாறு கோரிக்கை

கீழ் உழைப்பு பட்டதாரிகளை பட்டதாரி நியமனத்திற்குள் உள்வாங்குமாறு கீழ் உழைப்புப் பட்டதாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மே தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ள இந்தக் கடித்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் கீழ் உழைப்பு பட்டதாரிகள் சுமார் 16 ஆயிரம் பேர் வரை காணப்படுகின்றனர். இவர்களில் வடமாகாணத்தில் மட்டும் சுமார் 2 ஆயிரத்து 500 பேர்வரை உள்ளனர். இவர்கள் தமது வறுமை நிலை காரணமாக தமக்கு கிடைத்த அரச தொழில்களை செய்து வருகின்றனர்.

மிகவும் கஷ்டப்பட்டு படித்து பட்டம் பெற்றும் தாம் கற்ற கல்விக்கு உரிய தொழில் கிடைக்காமல் கிடைத்த அரச வேலையில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்துள்ளனர். இதனால் பட்டதாரிகள் ஆட்சேர்ப்புக்குள் போகமுடியாமல் மத்திய அரசின் அலுவலகங்களிலும் மாகாண அரசின் அலுவலகங்களிலும் பணியாற்றி வருகின்றனர்.

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை மூலம் குறித்த பதவிகளிலிருந்து உள்ளீர்க்கப்பட்டு பட்டதாரி நியமனம் வழங்கப்பட்டு அவர்களுக்கு நிவாரணமும் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பட்டதாரி நியமனத்திற்குள் உள்வாங்கப்பட்டதைப் போன்று அகில இலங்கை ரீதியாக அரச பொது முகாமைத்துவ உதவியாளர் சேவையிலும் கிராம சேவையாளர் சேவையிலும் ஆயுள்வேத மருந்துக் கலவையாளர் சேவையிலும் அலுவலக உதவியாளர் சேவை மற்றும் வேறு பல பதவி நிலைகளிலும் பணி செய்து வருகின்றவர்களை பட்டதாரி நியமனத்துக்குள் அவர்களின் சேவைக்காலம் பாதிக்காது சேவைக்காலத்துடன் உள்ளீர்ப்பு செய்து நியமனங்களை வழங்க வேண்டும். இவர்களின் உயர் கல்வித்தரத்தை கருத்தில்கொண்டு நாட்டின் அபிவிருத்தியில் இணைத்துக் கொள்ளுமாறு வடக்கு மாகாண கீழ் உழைப்பு பட்டதாரிகள் சங்கம் கேட்டுக் கொள்கின்றது என அக் கடிதத்ததில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# கர்ப்பூரம் உற்பத்தி செய்யும் நிலையம் கொக்குவில் மேற்கில் திறந்து வைப்பு



வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் கொக்குவில் மேற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினருக்கு ஒரு மில்லியன் ரூபாய் செலவில் கர்ப்பூரம் உற்பத்தி செய்யும் நிலையம் வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் உள்ளவர்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும்நோக்குடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.தவராசா, மாகாணசபை உறுப்பினர்கள் பா.கஜதீபன், அ.பரஞ்சோதி, யாழ்.மாவட்ட உதவி அரசாங்க அதிபர் றூபினி வரதலிங்கம், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நாதன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஆர். வரதீஸ்வரன், கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-9)

# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

நெடுந்தீவுக்கும் காரைநகருக்கும் இடைப்பட்ட இலங்கை கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டதாக கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 37 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி எல்லை தாண்டி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டதாக நாகை மற்றும் காரைக்கால் பகுதியைச் சேர்ந்த 37 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு அவர்களின் 5 படகுகளும் கைப்பற்றப்பட்டன.

இந்நிலையில் விளக்கமறிய லில் இருந்து மீனவர்களின் வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டு அடுத்தமாதம் 13 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (இ-9)

# ‘ஓப்பின் ஹவுஸ்’ கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் வசிக்கும் அல்லது தொழில் நிமிர்த்தம் தங்கியிருக்கும் இந்திய பிரஜைகள் எதிர்கொள்ளும் கடவுச்சீட்டு, நுழைவு அனுமதி (விசா) போன்ற பிரச்சினைகளுக்கான, தீர்வுகளுக்கான கலந்துரையாடல் ஒன்று இல. 14, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் நாளை மறுதினம் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமாகாணத்தில் தங்கியுள்ள இந்தியர்கள் அனைவரையும் இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

வருகையை உறுதிசெய்துகொள்ள 021 221 9672 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

# கணிததிறன் விருத்தி மதிப்பீட்டுப் பரீட்சை

வடமாகாண கணித பாட அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் அனுசரணையுடன் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் அட்சரகணிதம், கேத்திரகணிதம் ஆகிய பகுதிகளை கொண்ட கணித திறன் விருத்தி மதிப்பீட்டுப் பரீட்சை எதிர் வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

திறமையை வெளிப்படுத்தும் முதல் பத்து மாணவர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் 75 புள்ளிகளுக்கு மேல் பெறும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும். 2014 டிசெம்பர் சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் தங்கள் பாடசாலை மூலம் விண்ணப்பிக்கலாம் என Field work Centre பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ-3)

# சிறப்புற இடம்பெற்ற நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடமாடும் சேவை நடைபெற்றது. அரசாங்க அதிபருடன் மேலதிக அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நடமாடும் சேவையில் 300 இற்கும் அதிகமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இதேவேளை நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள மேலதிக மாவட்டப் பதிவாளர் கிளை மற்றும் அரசாங்க வலை அமைப்பு இணைப்பு என்பவற்றை அரச அதிபர் திறந்து வைத்துள்ளனர். (இ-3)




# தேர்த்திருவிழாவும் தீர்த்தத்திருவிழாவும்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் அருள்மிகு சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனத்தில் இன்று முதலாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை மஞ்சத்திருவிழாவும் நாளை சனிக்கிழமை மாலை சப்பறத்திருவிழாவும் இடம்பெறும்.

அதேவேளை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத்திரு விழாவும் இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (இ

# கல்வியியற் கல்லூரியின் 15 ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் 15 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவும் பீடாதிபதி ச.அமிர்தலிங்கத்தின் நவீன கல்விப் பிரயோகங்கள் நூல் வெளியீடும் நாளை 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியளவில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பிரதான மண்டபத்தில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடப் பீடாதிபதி பேராசிரியர் ஜி.மிகுந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயூரன் சுகுமாரனின் இறுதி வார்த்தைகள்




போதைப் பொருள் கடத்தல் வழக்கில் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 7 பேருடன் மயூரன் சுகுமாரனுக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

நெஞ்சில் துப்பாக்கியால் சுட்டு தண்டனையை நிறைவேற்றி யிருக்கிறது இந்தோனேசிய "நீதி"!(?). தண்டனை நிறைவேற்றப்படுவதற்குமுன் மயூரனை சந்தித்துப் பேசிய தர்மினி மணி (மயூரனின் உறவினர்), அவருடைய கடைசி வார்த்தைகளை பகிர்ந்து கொண்டுள்ளார்.

"நான் மயூரனிடம் பேசிய போது, அவர் பார்க்க விரும்பும் புதிய அவெஞ்ஜர்ஸ், பேட்மேன் Vs சுப்பர் மேன், ஸ்டார் வார்ஸ் 7, சனிக்கிழமை அன்று நடக்க இருக்கும் மேவெதர் Vs பேக்கியோ குத்துச்சண்டை ஆகியவற்றை பார்க்க முடியாதே என்று வருந்தினார். அவர் அப்படிச் சொல்லும் போது என் அம்மாவுக்கும், அத்தைக்கும் கண்ணீர் வழிந்தது.

ஆனால், மயூரன் ஜோக் அடித்துக் கொண்டு அவர்களைத் தேற் றிக் கொண்டே இருந்தார். மயூரன் அப்படித்தான். சுற்றியிருப்பவர்களுக்காக தன்னைப் பற்றி சிந்திக்காமல் இருப்பார்.

என் கையையும், என் சகோதரி கையையும் பிடித்துக்கொண்டு, "வாழ்க்கையில் யாரும் காலையில் எழும்போதே வெற்றியுடன் எழுவதில்லை. சின்ன சின்ன வெற்றிகள் ஒன்று சேர்ந்துதான் பெரிய வெற்றியாக அமையும். இதற்காக வாழ்க் கையில் கடுமையாக உழைக்க வேண்டும்.

உங்களுடைய உழைப்பை இந்த உலகம் கவனிக்காது. தினமும் சின்ன சின்ன இலக்கு களை வைத்துக் கொண்டு அதை அடைய முயற்சி செய்யுங்கள்.

வாழ்க்கையில், என்னை நானே தடுத்துக்கொண்டதுதான் என்னை தடுத்துவிட்டது. யாரையும் "முடியாது" என்று சொல்ல அனுமதிக்காதீர்கள. அவர்களுடைய எதிர்மறை எண்ணங்களை மாற்றி நம்பிக்கை தரும் எண் ணங்களாக மாற்றுங்கள்" என்று மயூரன் தெரிவித்திருந்தார்.

இனிதனக்கு தேவைப்படாது என்று கூறிவிட்டு , மயூரன் தன்னிடம் இருந்த சாக்லெட்டுகளை எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கச் சொன்னார். அங்கே 2 நாட்களுக்கு முன்பு திருமண மான ஆண்ட்ரூ சான் (தண்டனை நிறைவேற்றப்பட்டு விட்டது), கல்யாணக்களையில் சிரித்துக் கொண்டிருந்தார்.

மயூரனுடன் பிரார்த்தனை செய்த போது மயூரன், ஆண்ட்ரூ உடன் கடவுள் எப்போதும் இருக்கி றார் என சொல்லிக்கொண்டே இருந்தேன. இத்தனைக்கும் பிறகு, இதுதான் எனக்குத் தோன்றுகிறது!" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மயூரன்-சான் மரண தண்டனையின் பின்னணியில் அவுஸ்திரேலியாவா?

### பரபரப்புத் தகவல்

அவுஸ்திரேலிய பொலிஸாரின் துப்பறியும் தகவல் இந்தோனேசயா விற்கு கிடைததே மயூரன்- அன டரூசான் உட்பட்டவர்களுக்கு மரண தண்டனை விதிக்கக் காரணமென தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவுஸ்திரேலிய மத்திய பொலிஸார், தமது நாட்டில் அவர்களது குற்றச் செயலைத் தடுத்து நிறுத்தாமல் விட்டதுடன், அவர்கள் இந்தோனேசியாவிற்குச் சென்ற பின்னர் அந்நாடு மரண தண்டனையை வழங்குகிறது என்று தெரிந்தும் அந்நாட்டுக்கு இவர்கள் பற்றி தகவல்களை வழங்கியிருந்தது என பரபரப்புத் தகவல் வெளியாகி யுள்ளது. (இ-5)

# மரணதண்டனை விதிப்புக்கு பான் கீ மூன் கடும்கண்டனம்

(ஜகார்த்தா)

**இந்தோனேசியாவில் இலங்கைத் தமிழர் உட்பட எண்மருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை மிகவும் வருத்தமளிக்கிறது எனவும் 21 ஆம் நூற்றாண்டிலும் இது போன்ற செயல்களை ஏற்க முடியாது எனவும் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இந்தோனேசியாவில் இந்திய வம்சாவளியை சேர்ந்த மயூரன் சுகுமாரன் உள்ளிட்ட 8 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அவர்கள் போதை மருந்து கடத்தி வந்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அவர்களின் மரண தண்டனையை நிறைவேற்ற கூடாது என உலக நாடுகள் கடும எதிர்ப்பு தெரிவித்தும் அதையும் மீறி மரண தண்டனை நிறைவேற்றி உள்ளனர். இத ற்கு ஏற்கனவே அவுஸ்திரேலியா, பிரேசில் ஆகிய நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

இந்த நிலையில்ஐ.நா. பொதுச்செயலாளர் பான்கி மூனும் கண டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக் கையில் 8 பேருக்குமரண தண்டனை விதித்திருப்பது மிகவும் வருத்தத்தை அளிக்கிறது. 21ஆம் நூற்றாண்டில் இதுபோன்ற செயல்களை செய்வதை ஏற்க முடியாது. குற்றங்களை தடுக்க இந்தோ னேசியா மாற்று வழிகளை கையாள வேண்டும் என்று கூறியுள்ளார்.

இதையடுத்து இந்தோனேசியா அட்டர்னி ஜெனரல் பிரஸ்டோயோ வெளியிட்டுள்ள அறிக்கையில், எங்கள் நாடு போதை மருந்து பழக்கத்தில் சிக்கி விடாமல் தடுக்க இதை தவிர வேறு வழியில்லை. நாங்கள் இதை விளையாட்டாக செய்யவில்லை. மிகவும் ஆலோசித்து தான் இந்த கடுமையான முடிவை எடுத்திருக்கிறோம் என்று தெரிவித்தார். (இ)

# திருத்தம் இல்லாத 19ஆவது வெள்ளைப்பூ மலர் வளையம்

(கொழும்பு)

19ஆவது திருத்தச் சட்டத்தை மாதுலுவாவே சோபித தேரர் வெள்ளைப் பூச்சரம் என்று கூறியபோதும் அதில் திருத்தங்கள் கொண்டு வராமல் இருந்திருந்தால் அது 'வெள்ளைப்பூ மலர்வளையம்' ஆகியிருக்கும் என மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

இது நாட்டுப்பற்று, சமூகத் தொண்டு என்ற பதங்கள் கொண்டு மூடப்பட்டிருந்ததாக கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தேரர் தெரிவித்தார்.

ஜனநாயக விரோத போக்கு காணப்பட்டதாலேயே தான் உள்ளிட்ட சில தேரர்கள் 19வது திருத்தச் சட்டத்திற்கு தொடர்ந்து எதிர்ப்பு வெளியிட்டு வந்ததாக அவர் தெரிவித்தார்.

சுயாதீன ஆணைக்குழு பாராளுமன்றுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டியதில்லை என்ற விடயம் விமர்சனத்திற்கு உள்ளாகி இருப்பதாகவும் 10வீதம் அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கவென முழு நாட்டு மக்களும் வரி செலுத்த நேரிட்டுள்ளதாக மெதகொட அபயதிஸ்ஸ தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1967 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 19 3/4<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/4401 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 23 1/4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: காசாளர் கனடா PR<br>தொ.இ: G/4402 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 14 செவ் 12இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BA/ அரச தொழில்<br>தொ.இ: B/4403 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 25 செவ் 2இல்<br>உயரம்: 159cm<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: G/4404 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 20<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4405 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 30 செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/4406 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 30 செவ் 2இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC/ அரச தொழில்<br>தொ.இ: B/4408 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 61 செவ் 1இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: G/4407 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1129

## மூன்று அபாயக் கனவுகள்

...அதைப் பற்றியே யோசித்துக் குழப்பத்தில் ஆழ்ந்திருந்த மன்னரிடம் ஒருநாள் சிவா என்ற இளைஞன் வந்தான். அவன் மன்னரை வணங்கிவிட்டு, 'மகாராஜா! நான் அறிவு ஆற்றல் படைத்தவன்! ஆனால், என்னுடைய திறமையை இதுவரை வெளிப்படுத்த வாய்ப்பு கிடைக்கவில்லை. உங்களுடைய கனவுகளின் உட்பொருளைப் பற்றிய என் கருத்தை வெளியிட அனுமதித்தால், நான் ஓர் அறிவாளி என்று வெளி உலகுக்குக் காட்ட எனக்கு வாய்ப்பு கிடைக்கும்!' என்றான்.

மன்னனும், ஜடாதர முனிவர் தனக்கு விடுத்த எச்சரிக்கை பற்றியும், அதன் பிறகு அவர் கூறியது போலவே தனக்குத் தொடர்ச்சியாகத் தோன்றிய விபரீதக் கனவுகளையும் அவனிடம் விளக்கி கூறினார்.

அதை கவனமாகக் கேட்ட சிவா, 'மகாராஜா! நீங்கள் கண்ட கனவுகளுக்கு உட்பொருள் உள்ளது. முதல் இரண்டு கனவுகளின் சூசகமான உட்பொருளை நான் விளக்குகிறேன். அவை சரியாக அமைந்தால், மூன்றாவது கனவையும் விளக்குகிறேன்' என்றான்.

மன்னன் சரியென்றதும் சிவா, 'மகாராஜா! தங்களுடைய முதற் கனவில் தங்களை ஒரு நாகம் துரத்தியது. நாகபாம்பு தனக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு வஞ்சம் தீர்க்கும் சுபாவம் உடையது. உங்கள் கனவின் உட்பொருள், உங்களால் தண்டிக்கப்பட்ட ஒருவன் உங்களைப் பழி தீர்க்க திட்டம் வகுத்துள்ளான். நீங்கள் அவனை உடனடியாகக் கண்டு பிடித்து சிறையில் அடைக்க வேண்டும். இரண்டாவது கனவில் விண வெளியிலிருந்து மின்னல இறங்கி வந்து உங்களைத் தாக்க முயற்சித்தது. அதாவது, உங்களுடைய பகைவனான அயல் நாட்டு மன்னன் உங்கள் மீது படையெடுக்கத் திட்டம் தீட்டுகிறான் என்பதே உட்பொருள்!' என்றான்.

அதைக் கேட்ட மன்னர் பிரமித்துப் போனார். சிவா கூறுவது நூற்றுக்கு நூறு சரியாக இருக்கும் என்று அவருக்குத் தோனறியது. யோசித்துப் பார்த்ததில், சமீபத்தில் கொள்ளையர் தலைவன் பைரவனை சவுக்கடி தந்து தண்டனை கொடுத்தது நினைவிற்கு வந்தது. உடனே, காவலர்களை அழைத்து பைரவனை மீண்டும் கைது செய்ய உத்தரவிட்டார். அவனை நையப்புடைத்து விசாரித்ததில், மன்னரைக் கொலை செய்ய சதித்திட்டமிட்டு ஒரு விஷப்பாம்பை அவருடைய படுக்கையறையில விட்டிருந்தது தெரிய வந்தது. இதன்மூலம் அவன் சதித்திட்டம் தக்க சமயத்தில் முறியடிக்கப் பட்டது. தனது இரண்டாவது கனவின் வளக்கம் உண்மையா என்று அறிய, ஒற்றர்களை அண்டை அயல் ராஜ்யங்களுக்கு அனுப்பினார்.

அண்டை ராஜ்யமான சிங்கபுரியின் மன்னன் விக்கிரமசேனன் தங்கள் மீது போர் தொடுக்க ரகசியமாகத் திட்டமிட்டிருப்பதை ஒற்றர்கள் மூலம் அறியப்பெற்ற மன்னர் திகைத்துப் போனார்.

ஆகையால் அவர் சிவாவிடம், 'சிவா! விக்கிரமசேனன் படைபலம் பொருந்தியவன்! எனக்கு இபபோதே அவன் திட்டம் தெரிந்தாலும், என்னால் எதுவும் செய்ய இயலாதே! என்ன செய்யலாம்?' என்று கவலையுடன் கேட்டார்.



'அதற்கும் ஒரு வழி உண்டு! அதைத் தான் தங்கள் மூன்றாவது கனவு விளக்குகிறது. கனவில் தாங்கள் கண்ட சிங்கம் சிங்கபுரி மன்னனைக் குறிக்கிறது. அவன் விரைவிலேயே படையெடுப்பது நிச்சயம்! அப்படிப் படையெடுத்தால், தாங்கள் கண்டிப்பாக படுதோல்வி அடைவீர்கள்! ஆனால், உங்களுடைய பெண் தோல்வியிலிருந்து உங்களைக் காப்பாற்ற முடியும்!' என்றான்.

'எப்படி?' என்று மன்னர் ஆவலுடன் கேட்டார். "சிங்கபுரி மன்னனுக்குத் திருமண வயதில் ஒரு மகன் உண்டு. அவனுடன் உங்கள் மகளை மணமுடித்தால், சிங்கபுரி மன்னன் உங்கள் சம்மந்தி ஆகி விடுவார். பிறகு போரே நிகழாது' என்றான்.

அவனுடைய ஆலோசனையைக் கேட்டு மன்னர் உடனே தூதுவன் மூலம் ஒரு கடிதமும், இளவரசியின் ஓவியமும் அனுப்பினார். அதில், 'நீங்கள் சம்மதித்தால், உங்கள் மகனை என் பெண்ணுக்கு மணமுடிக்க விரும்புகிறேன்' என்று எழுதி இருந்தார்.

கடிதத்துடன் இணைக்கப்பட்டிருந்த இளவரசியின் ஓவியத்தைக் கண்டவுடனே, சிங்கபுரி இளவரசன் தன் சம்மதத்தை தன் தந்தையிடம் தெரிவித்தான். தன் மகனின் விருப்பத்தையறிந்த விக்கிரமசேனன், மணிகண்ட மன்னருடன் போர் தொடுக்கும் திட்டத்தைக் கைவிட்டான். திருமணமும் விரைவில் இனிதே நடந்து முடிந்தது. சிவாவின் புத்தி கூர்மையினால் தனக்கு வரவிருந்த அபாயங்களிலிருந்து தப்பித்த மணிகண்டர், அவனை மிகவும் பாராட்டி பரிசுகள் பல அளித்து, தன் பிரதம ஆலோசகராக நியமித்தார்..... (முற்றும்)



05.2015 01

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1328 - ஸ்கொட்லாந்தைத் தனிநாடாக இங்கிலாந்து அங்கீகரித்தது. ஸ்கொட்லாந்து விடுதலைப் போர் முடிவுக்கு வந்தது.
- 1707 - இங்கிலாந்து மற்றும் ஸ்கொட்லாந்து இணைக கப்பட்டு பெரிய பிரித்தானியா என்ற ஒரு நாடாகியது.
- 1834 - பிரித்தானியக் குடியேற்ற நாடுகள் அடிமைத் தொழிலை நிறுத்தின.
- 1840 - உலகின் முதலாவது அதிகாரபூர்வ ஒட்டக் கூடிய தபால்தலை, பென்னி பிளாக் ஐக்கிய இராச்சியத்தில் வெளியிடப்பட்டது.
- 1851 - லண்டனில் பெரும் பொருட்காட்சி விக்டோரியா மகாராணியினால் திறந்து வைக்கப்பட்டது.
- 1925 - சீனாவில் அனைத்து சீன தொழிற்சங்கங்களின கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இதுவே இன்று 134 மில்லியன் உறுப்பினர்களுடன் உள்ள உலகின் மிகப்பெரிய தொழிற்சங்கம் ஆகும்.
- 1940 - கோடை கால ஒலிம்பிக் போட்டிகள் போர் காரணமாக நிறுத்தப்பட்டன.
- 1948 - கொரிய மக்கள் ஜனநாயகக் குடியரசு அமைக் கப்பட்டது. கிம் உல்-சுங் அதன் முதலாவது ஜனாதிபதியானார்.
- 1950 - குவாம் ஐக்கிய அமெரிக்காவின் பொதுநல வாயத்தில் இணைக்கப்பட்டது.
- 1956 - இளம்பிள்ளை வாத நோய்த் தடுப்பு மருந்து அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1961 - கியூபாவை சோசலிச நாடாகவும் தேர்தல் முறையை ஒழித்தும் அதன் பிரதமர் பிடெல் காஸ்ட்ரோ அறிவித்தார்.
- 1987 - இரண்டாம் உலகப் போரின் போது அவுஷ் விட்ஸ் வதை முகாமில் கொல்லப்பட்ட யூதப் பெண்மதகுரு ஈடித் ஸ்டெயின் பாப்பரசரால் புனிதப்படுத்தப்பட்டார்.
- 1993 - இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாச மேதனப் பேரணியில் வைத்து மனிதக் குண்டுதாக் குதலின் மூலம் கொல்லப்பட்டார்.
- 2004 - சைப்பிரஸ், செக் குடியரசு, எஸ்தோனியா, ஹங்கேரி, லாத்வியா, லித்துவேனியா, மால்ட்டா, போலநது, சிலோவாக்கியா, சிலவேனியா ஆகிய ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தன.
- 2006 - புவேர்ட்டோ ரிக்கோ அரசு நாட்டின் பணவீக்கம் காரணமாக பாடசாலைகளையும் அரச நிறுவனங்களையும் மூடியது.
- 2011 - அல்கொய்தா தலைவர் ஒசாமா பின்லேடன் அமெரிக்கப் படையினரால் பாகிஸ்தானில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**பிறப்புக்கள்**

- 1951 - கோர்டன் கிரீனிட்ச், மேற்கிந்தியத் தீவுகளின் முன்னாள் துடுப்பாளர்
- 1971 - அஜித் குமார், தமிழ்த் திரைப்பட நடிகர்

**இறப்புகள்**

- 1965 - ஜி. என். பாலசுப்பிரமணியம், கர்நாடக இசைப பாடகர், நடிகர் (பி. 1910)
- 1993 - ரணசிங்க பிரேமதாசா, இலங்கை ஜனா திபதி (பி. 1924)
- 2011 - ஒசாமா பின்லேடன், அல்கொய்தா தலைவர் (பி. 1957)

**சிறப்பு நாள்**

மே தினம் - உலகத் தொழிலாளர் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை ஜனாதிபதி மைத்திரி நிறைவேற்றினார்



## கயந்த கருணாதிலக்க புகழாரம்

**(கொழும்பு)** **சிறுபான்மை அரசாங்கமாக இருந்தாலும் 19ஆம் அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை வெற்றி கொண்டமை தொடர்பில் மகிழ்ச்சியடைவதாக ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மக்களுக்கு வழங்கிய வாக் குறுதிகளை நிறைவேற்றியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

19ஆம் திருத்தச்சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பின்னர் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எந்த ஒரு தலைவரும் தன்னுடைய அதிகாரத்தை அதிகரித்துக் கொள்ள எதிர்ப்பார்ப்பாரே தவிர குறைத்துக்கொள்ள விரும்புவதில்லை.

ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ. தன்னுடைய அதிகாரங்களை குறைத்து , மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டார் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# 19ஆம் திருத்தச்சட்டத்திற்கு எதிரான சூழ்ச்சிகள் தோற்கடிக்கப்பட்டுள்ளன

## அஜித் பீ.பெரேரா சுட்டிக்காட்டு

19ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிரான சூழ்ச்சித் திட்டங்கள் தோற்கடிக்கப்பட்டுள்ளதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை நியமிக்கும் போது பிரதமரிடம் அது குறித்து கேட்க வேண்டுமென்ற திருத்தம் எந்தவிதமான மாற்றமும் இன்றி அமுல்படுத்தப்பட்டுள்ளது.

19ஆம் திருத்தச் சட்ட அமுலாக்கம் நாட்டின் ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றியாகவே கருதப்பட வேண்டும்.

19ஆம் திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படுவதனை தடுத்து நிறுத்த பல்வேறு தரப்பினர் கடும் முயற்சிகளை மேற்கொண்டனர்.

அனைத்து சூழ்ச்சித் திட்டங்களையும் அரசாங்கம் பொறுமையுடனும் நிதானத்துடனும் கையாண்டு தோற்கடிக்கச் செய்துள்ளது.

முன்னாள் அமைச்சர்களான ஜீ.எல். பீரிஸ், தினேஸ் குணவர்தன, பந்துல குணவர்தன போன்ற வர்கள் 19ஆம் திருத்தச் சட்ட விவாதத்தில் பங்கேற்ற விதத்தைக் கொண்டே அவர்களின் சூழ்ச்சித் திட்டம் அம்பலமானது என அஜித் பெரேரா, நேற்று முன்தினம் வெளி விவகார அமைச்சில் நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவி த்துள்ளார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 50 | 60 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 90 | 100 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 30 | 40 | 50 | 30 | 40 |
| தக்காளி | 40 | 60 | 40 | 50 | 40 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 | 60 | 40 | 40 |
| கோவா | 40 | 40 | 40 | 50 | 40 | 30 |
| கரட் | 120 | 120 | 90 | 120 | 120 | 100 |
| பூசணி | 20 | 40 | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 40 | 50 | 40 | 60 | 70 |
| வாழைக்காய் | 40 | 60 | 50 | 60 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 90 | 80 | 100 | 100 | 50-100 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 120 | 100 | 90 |
| பாகற்காய் | 140 | 80 | 80 | 100 | 100 | 90 |
| வெண்டிக்காய் | 80 | 140 | 50 | 60 | — | 80 |
| கருணைக் கிழங்கு | — | 70 | — | 80 | 50 | 80 |
| பயற்றங்காய் | 100 | 80 | 60 | 60 | 160 | 80 |
| லீக்ஸ் | 180 | 160 | 120 | 200 | 50 | 150 |
| பீற்றூட் | 60 | 40 | — | 60 | 60 | 40 |
| கறிமிளகாய் | 120 | 80 | 50 | 60 | 400-600 | 80 |
| முருங்கைக்காய் | 450 | 500 | — | 400 | 120-160 | 500 |
| போஞ்சி | 200 | 140 | 100 | 160 | — | 140 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 30 | — | 30 | 70 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 20 | 30 | 140 | 20 |
| தேசிக்காய் | 160 | 160 | 140 | 160 | 60 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 30 | 50-60 | 140 | 60 |
| இராசவள்ளி | 180 | 150 | — | 120 | — | 100 |
| வெங்காயப்பூ | — | — | — | — | 30 | — |
| முள்ளங்கி | 40 | 50 | 40 | 80 | 30 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 30 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 357


இலக்கியா நகுலன்




கிரிஸ் கிரி




தனு தனுசியா




பிரவின் தாஸ்




ராஜா தனு



தாரணி பரமசிவம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

### 152 நாட்கள் ஓடி வெற்றி விழாக் கொண்டாடிய படம் 'வீரா'

ரஜினிகாந்த் படத்தை வாங்கக்கூடாது என்று விநியோகஸ்தர்கள் சங்கம் போட்ட தடையை ('ரெட்கார்டு') மீறி தயாரான படம் 'உழைப்பாளி.'

119



'எங்க வீட்டுப்பிள்ளை', 'மிஸ்ஸியம்மா', 'மாயா பஜார்' போன்ற சிறந்த படங்களைத் தயாரித்த 'விஜயா - வாகினி' பட நிறுவனம், சுமார் 20 ஆண்டுகள் படத்தயாரிப்பை நிறுத்தி வைத்திருந்தது.

நீண்ட இடைவெளிக்குப்பின், ரஜினியை வைத்து, மீண்டும் படத் தயாரிப்பில் இறங்கத் தீர்மானித்தது.

ரஜினியுடன் ரோஜா, சுஜாதா, கவிதா, சங்கீதா, ஸ்ரீவித்யா ஆகியோர் நடிக்க ஒப்பந்தம் ஆனார்கள். பாடல்களை வாலி எழுத, இளையராஜா இசையமைப்பார் என்று அறிவிப்புகள் வெளியாயின.

### எதிர்பாராத பிரச்சினை

அப்போது, யாரும் எதிர்பாராத பிரச்சினை ஒன்று எழுந்தது. அந்தக் காலக் கட்டத்தில், பல திரைப் படங்கள் சரியாக ஓடவில்லை. பல பட அதிபர்கள் நஷ்டத்தை சந்தித்தனர்.

இதனால் நடிகர் - நடிகைகள் சம்பளத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்று, பட அதிபர்களும், விநியோகஸ்தர்களும் வேண்டுகோள் விடுத்தனர்.

இதுபற்றி நடிகர் - நடிகைகளும், விநியோகஸதர்களும், பட அதிபர்களும் தனித்தனியாகக்கூடி, ஆலோசனைகள் நடத்தி வந்தார்கள்.

'தயாரிப்புச் செலவு அதிகமாகக் காரணமே, நடிகர்களின் சம்பளம்தான்' என்று பட அதிபர்கள் தரப்பில் கூறப்பட்டதை, நடிகர்கள் ஏற்கவில்லை. 'எங்களுக்கு இருக்கும் 'மார்க்கெட் வேல்' வை வைத்துத்தானே சம்பளம் தருகிறீர்கள். படம் விற்கப்படுவதும், நடிகர்களின் புகழை வைத்துத்தானே!' என்பது நடிகர்கள் தரப்பு வாதம்.

### முத்தரப்பு கூட்டம்

இந்தப் பிரச்சினையில் ஒரு முடிவுக்கு வர, முத்தரப்பு கூட்டம் நடந்தது. பட அதிபர்கள், நடிகர் - நடிகைகள், விநியோகஸ்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் ரஜினி பேசும் நேரம் வந்தது. அவர் பேசும்போது, 'வரியைக் குறைக்கச் சொல்லி அரசாங்கத்திடம் கேளுங்கள். தியேட்டர் வாடகையை குறைக்கச் சொல்லுங்கள். இது இரண்டும் சாத்தியமானா எல்லாமே சரியாயிடும்' என்று அவர் மனதில் தோன்றிய கருத்தை பளிச்சென்று சொல்லிவிட்டு, காரில் ஏறிப்போய் விட்டார். மற்ற நடிகர்களும் வெளியேறினார்கள்.


### தடை

இது, விநியோகஸ்தர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியது.

'ரஜினி நடித்த படங்களை வாங்கக்கூடாது' என்று விநியோகஸ்தர்கள் சங்கம் தடை ('ரெட்கார்டு') போட்டது. சென்னை, காஞ்சீபுரம், திருவள்ளூர் மாவட்ட திரைப்பட விநியோகஸ்தர்கள் சங்கத்தலைவரும், தென்னிந்திய திரைப்பட வர்த்தகசபை துணைத்தலைவருமான 'சிந்தாமணி' எஸ்.முருகேசன் இந்த தடை உத்தரவை பிறப்பித்தார்.

அந்தக் காலக்கட்டத்தில், சென்னை விநியோகஸ்தர்கள் சங்கம் எடுக்கும் முடிவுக்கு தமிழ்நாடு முழுவதும் உள்ள விநியோகஸ்தர்கள் சங்கங்கள் கட்டுப்பட்டு நடந்தன.

(தொடரும்)





# கருவாச்சி காவியம்

**வைரமுத்து-129**

....அக்கா வச்ச ஒலையில சோறு கொதிக்க.. தங்கச்சி வச்ச அடுப்புல கொழம்பு கொதிக்க... வந்துட்டானய்யா மகராசன்.

முக்காக் கும்பாவுக்குச் சோத்த அமுக்கி, முழுக்கும் பாவுக்கும் கொழம்ப ஊத்தி கறியையும் சோத்தையும் பெணைஞ்சு பொணஞ்சு சாப்பாடுகூடச் சண்டை புடிக்கிறானய்ய முத்துக்காமு.

சுடு சோத்துக்கு ஒடம்பெல்லாம் வேர்த்து ஊத்துது. ஒறச்ச கொழம்புக்குக் கண்ணெல்லாம் தண்ணி வடியுது; மூக்கெல்லாம் நீர் ஒழுகுது.

கால் சப்பைக் கறிய ஒரே கடியில கடைவாய்ப் பல்லுல கடிச்சு இழுத்து சொர சொர சொரன்னு சோத்த மெல்லவும் கடுக்குன்னு கடிபட்டுச்சு பல்லுல ஒரு கல்லு.

கடிக்கிறத நிறுத்திட்டுக் கண்ண மூடிக்கிட்டு யோசிக்கான். கல்லத் துப்புனாக் கறியும் சேந்து விழு ந்திரும். கறியோட சேத்துக் கடிச்ச கல் லையும் முழுங்கிப்புட் டான்.

அடியே பொண்டுகளா! நீங்க அரிசியில கல்லக் கொட்டிச் சோறாக்கிப் போட்டாலுஞ்சரி; இல்ல கல்லையே கொட்டிச் சோறாக்கிப் போட்டலுஞ் சரி; முழுசாச் செமிக் காம விடமாட்டான் இந்த முத்துக்காமு.

கையக் கழுவி வாய் கொப்புளிச்சுட்டுப் பவளத்தைப் பாத்துக் கண்ணடிச்சு உத்தரவு போட்டுட்டு, உள்ள படுக்கப்போயிட்டான் முத்துக்காமு.

தன் சோத்தையும் தன் பங்குக் கறியையும் தங்கச்சியச் சாப்பிடவச்சு, சுடவச்ச பாலச் சொம்புல குடுத்துத் தாராளமாப் போயிட்டு வாடீன்னா தங்கச்சிய அக்கா.

பாயப் பகிர்ந்து கொடுத்தவ பாய் இல்லாமத் தலகாணி மட்டும் போட்டுப் படுத்துக் கிட்டா வெளியில.

மனசிலயும் ஒடம்புலயும் அலுப்பு; கன்னத்துல ஒழுகின கண்ணீர்ல உப்பு ஒறையுமுன்ன ஒறங்கிப்போனா.

யக்கா! மோசம் [illegible] டோம் யக்கா!

விடிஞ்சும் விடியுமுன்ன பழனி செட்டிப்பட்டியவே பொரட்டிப்போட்ட சத்தம் கேட்டுக் கலைஞ்ச சீலையையும் ஒடைஞ்ச உசுரையும் ஒண்ணு சேத்து எந்திரிச்சு



உக்காந்தா கனகம்.

[illegible]

உள்ள ஓடிப்போயிப் பாத்தா யானை செத்துக் கெடக்கிற மாதிரி பாயில பொணமாக் கெடக்கான் முத்துக்காமு.

அய்யோ அய்யோன்னு சுவர்ல முட்டி முட்டி அழுகுறா பவளம்.

மாமான்னு பொணத்தோட மார்ல விழுந்து கதர்றா கனகம்.

அவன் நெத்திதடவி மூஞ்சி தடவி மாரத் தழுவி தோள்த் தடவி கையத்தடவிக் கூடைபி யில பாத்தா- அவன் வலது கையில மோதிரமிருக்கு; வைரக்கல்லக் காணோம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அருள்மிகு கந்தசுவா…

## கிளிநொச்சி மா…ட்…



## பஞ்சதள இராஜகோபுர ந…

## கும்பாபிஷேகப் பெருவிழ…



### அன்பும் ஆசியும் கிடைப்பதாக

''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்''என்பது முன்னோர்களது முதுமொழியாகும். முதற்கண் இக்கோவில் அமைய முதற்காரணமாக விருந்த அமரர் முகாந்திரம் வெற்றிவேலு ஐயாவிற்கும் அன்னாரது சந்ததியாருக்கும் கிளிநொச்சி நகர் வாழ் மக்கள் அனைவரும் என்றென்றும் நன்றியுடையவராவர்.மேற்படி ஐயா அவர்கள் இலங்கையில் புகழ்பெற்ற முருகனாலயங்களான கதிர்காமம், நல்லூர், செல்வச்சந்நிதி, சித்தாண்டி முருகன் கோவில்களுக்கு இணையாக கிளிநொச்சி மாநகரில் வேல் பிரதிஷ்டை செய்து வழிபாடியற்றிவராவர். ஆலயங்களில் கோபுர தரிசனத்தின் முக்கியத்துவம் என்னவெனில் அடியார்கள் வெகு தொலைவில் நின்றும் எம்பெருமானை எந்தவேளையிலும் எவராலும் வணங்கக்கூடிய தன்மையாகும். இவ்வாலய திருப்பணிக்கு மனமார்ந்த பல உதவிகளை செய்த நீர்ப்பாசன திணைக்களம், கிளிநொச்சிவாழ் வர்த்தகர்கள்,பக்தர்கள் அனைவருக்கும் நல்லாசியினை கூறுகின்றோம்.

மேலும் இவ்வாலய கட்டுமானப் பணியில் ஈடுபட்ட சிற்பாசாரியர்கள்,பூசை புனஸ்காரங்களை செய்த அந்தண சிவாச்சாரியார்கள் போன்றவர்களின் பக்திமிக்க கைங்கரியங்களால் ஆலயத்தின் அருள் ஒளி மேலும் மேலும் பெருகுவதனை அவதானிக்க கூடியதாகவுள்ளது. இவ்வாலய ஆரம்பகால கட்டட நிர்மாண வரலாற்றை நோக்கின் 1960ஆம் ஆண்டிற்கு முன்னர் திருநெறி கழகத்தை சேர்ந்த அமரர் தியேட்டர் முருகேசு ஐயா,அமரர் V.R.தம்பிப்பிள்ளை போன்றவர்கள் இவ்வாலய கட்டுமானப் பணியில் முன்னின்று உழைத்து இன்று கந்தசுவாமி பெருமானின் திருவடிகளின் கீழ் உள்ளனர்.

மேலும் இத் திருப்பணியில் ஈடுபட்ட சகல அடியார்களுக்கும் நன்றியும் ஆசியும் வழங்குவதுடன் எதிர்காலத்தில் எம்பெருமானுக்கு ஓர் சித்திரத்தேர் அமைத்து எம்பெருமானை வீதி உலா வர செய்ய வேண்டிய திருவுளத்தையும் எல்லாம் வல்ல எம்பெருமான் நல்க வேண்டும் எனப் மனதார பிரார்த்திக்கின்றேன். அத்துடன் ஏனைய மூன்று வாசல்களுக்கும் எதிர்காலத்தில் கோபுரம் அமைந்தால் மேலும் சிறப்பாக இருக்கும். அதனையும் எம்பெருமானே செய்விக்கவேண்டிய மனத்தை எம் எல்லோருக்கும் தர வேண்டும். இன்று இவ்வாலயம் புகழ்பெற்ற தேவாலயமாக விளங்குவதனை நாம் எல்லோரும் காணக்கூடியதாகவுள்ளது.

மேலும் தனியே கோவில் கட்டுமானப் பணியுடன் நின்றுவிடாது இன்றைய விஞ்ஞான காலத்தின் சீர்கேடுகளை சமாளிக்க பஜனை கோஷ்டி ஒன்று எமது ஆலயத்தில் இருப்பது காலத்தின் தேவையாகும். கலியுகத்தின் கருணைக்கடலாகவும் கலியுக வரதனாகிய முருகப்பெருமானை கூவி அழைத்தால் அவர் ஓடோடி வந்து எமது துன்பங்களை எல்லாம் போக்கி அருள் செய்வார் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. வேதங்களில் கூறப்படும் " சுப்பிரமணியோம்" என்பதனை நாம் குறைந்தபட்சம் 09 முறை கூவி அழைக்க வேண்டும். மேலும் இத்திருப்பணிக்கு உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நல்லாசி கூறி இவ்வாசியுரையை நிறைவு செய்கின்றோம்.

**மகாதேவ ஆச்சிரமம்,ஜெயந்தி நகர்,கிளிநொச்சி.**



### அருளாசிச் செய்தி

முருகன் அடியார்களுக்கு,

கிளிநொச்சியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் முருகப்பெருமானுக்கு ஐந்து தளங்களை கொண்ட இராஜகோபுரம் அமைக்கப்பட்டதையிட்டு மகிழ்ச்சி. ஆலயம் ஆன்ம ஈடேற்றத்திற்கும் மனித வாழ்விற்கும் மகிழ்ச்சியைத்தருகின்ற செயல் வடிவமாகும். இதன் கட்டட அமைப்பு அஷ்திரங்களில் கூறப்பட்டிருக்கும் நிலை மனிதன் படுத்திருக்கும் அமைவைக் கொண்டது. காலில் இருந்து தலைவரை ஒவ்வொன்றிற்கும் தனித்துவமான தத்துவம் உண்டு. கால்பகுதியை இராஜகோபுரமாக சொல்ல ஆலயத்தின் முழுமையை தெளிவுபடுத்துவது இராஜகோபுரம். இதையே கோபுர தரிசனம் கோடிபுண்ணியம் என்பர்கள். கோபுரத்தில் அமையும் சிற்பங்கள் உலகதத்துவத்தையும் ஐந்து வாசல்கள் மனிதனை இயக்கும் பஞ்சபுலன்கள் ஆகும். பலதுன்பங்களுக்கு மத்தியில் ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்தது ,ஆலயத்திற்கு இன்று கும்பாபிஷேகம் செய்வது பிரதேச மக்களின் செயற்பாட்டை நெறிப்படுத்தி நிற்கின்றது. இவ்வாலயம் இன்னும் பல வளர்ச்சிகளை கண்டு இப்பிரதேச மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு பணியாற்றவும் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்று அனைவருக்கும் இறையருள் கிடைக்கவும் இறைவனை பிரார்த்திக்கிறோம். இப் புனிதப் பணியை செய்யும் கிளிநொச்சி வாழ் மக்களுக்கும் ஆலய பரிபாலன சபையினருக்கும் இறைவன் ஆசி கிடைப்பதாக!

**''என்றும் வேண்டும் இன்ப அன்பு''**

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,இரண்டாவது குருமஹாசந்நிதானம்,**



### ஆசியுரை

சொற்பதம் கடந்த அற்புதக் கந்தனின் பஞ்சதள இராஜகோபுரக் கும்பாபிஷேகம் காண்பது எமது முற்பிறவியிற் செய்த நற்பலனேயாகும். திகழ் சரவணத்தோன்,பிரணவமுரைத்தோன், வேல்கைக் கொண்டோன், வள்ளி மணவாளன் திருக்கோவிலின் உள்ளே இராஜகோபுர தரிசனத்துடன் கண்கண்ட தெய்வமாம் சூரிய பகவான், நிறைமதியாம் சந்திரனும் வீற்றிருக்க துவாரபாலகரை வணங்கி ஆலயத்தினுட்பிரவேசம் செய்வது நாம் செய்த பாக்கியமே. அறுபடை வீடு கொண்ட முருகன் இராஜகோபுரத்தில் கந்தனின் திருவிளையாடல்களும் கந்தபுராண வரலாறும் பக்தர்கள் தரிசனம், கோபுர வர்க்கச் சிற்பங்கள், தளவரிகள் அஷ்ட திக்பாலகர்கள் அமைந்திருப்பதும் எமது சமயத்தினூடாக வெளிப்படும் இயல்,இசை,நாடகம்,முத்தமிழ் கலை போன்றவை சித்தரிக்கப்பட்டிருப்பதும் பக்திப் பரவசத்தை மேலும் மேலும் மெருகூட்டுகின்றது.இக் கோபுரத்தை அமைத்துத்தந்த சிற்பாசாரியார்களும் ஏனைய அனுசரணையாளர்களும் பெருமைக்குரியவர்கள் ஆகின்றனர்.

பாலமுருகனாக, முத்துக்குமரனாக, சண்முகப்பெருமானாக, வள்ளி மணாளனாகக் காட்சி தரும் வேலவனின் அற்புதத்திருக்கோவில் மேலும் பல திருப்பணிகள் நிறைவுற்று வன்னிப் பெரு நிலப்பரப்பின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயமாகத் திகழ முருகப்பெருமான் திருத்தாள் பணிந்து அருளாசி கூறுகின்றேன்.

**'' ஆனா அமுதே அயில் வேல் அரசே ஞானா கரனே நவிலத் தருமோ**
**யானா கியான் னைவிழுங் கிவெறுந் தானாய் நிலைநின் றதுநற் பரமே''**
**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

**கிளிநொச்சி- கந்தசாமி கோவில் ஆதீன பிரதம குரு, மஹாகும்பாபிஷேக பிரதம சிவாச்சாரியார், கிரியாநிதி கிரியாசாகரம் கிரியாதத்வநிதி சிவஸ்ரீ கு.இரத்தினேஸ்வரக்குருக்கள் (அகில இலங்கை சமாதான நீதிபதி)**



### கிளிநொச்சி கந்தனுக்கு இராஜகோபுரம்

ஓம் என்னும் பிரணவரூபநாயகனை என் உள்ளத்திலே நினைத்து கந்தவேளின் பாதங்கள் இருகரம் தொட்டு வணங்கி கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேக சிறப்பிதழுக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு பேருவகை அடைகிறேன்.

இற்றைக்கு இருபது வருடங்களுக்கு முன்பிருந்தே கிளிநொச்சி கந்தனுடன் பின்னிப்பிணைந்து அடியவனாகவும் தொண்டனாகவும் இன்று ஆலயத்தின் பரிபாலனசபையில் என்னை இணைத்து வாழ வைத்து கொண்டிருக்கின்ற கந்தவேலன் ஏ-9 பெருஞ்சாலை ஓரமாக வீற்றிருந்து அரசாட்சி செலுத்திக் கொண்டிருக்கும் உமைபாலகன்.

கடந்தகால போர்ச்சூழல் அனர்த்தங்களால் மக்களுடன் சேர்ந்து எம்பெருமானின் ஆலயமும் ஆலய பொருட்களும் திருப்பணி வேலைகள் யாவும் மிகவும் பாதிக்கப்பட்டு போரின் வடுக்களை சுமந்து முருகவேளின் கிருபையால் மீண்டு வந்த புதுயுகத்தில் ஏர்கொண்டு உழவு பார்க்கும் விவசாயிகளின் வியர்வையாலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கொழும்பு வர்த்தக பெருமக்களின் ஒத்தாசையாலும் புலம்பெயர் வாழ் கிளிநொச்சிக் கந்தனின் அடியவர்களின் ஒத்துழைப்பினாலும் முருகனுக்கு பஞ்சதளத்தில் இராஜகோபுரம் ஒன்று அமைக்கும் பணி ஆரம்பமாகி மணி மண்டபமும் அதனுடன் இணைத்து நிறுவப்பட்டு 01.05.2015 இன்றைய தினம் குடமுழுக்கு காணுவதையிட்டும் முதல் முதலாக எம்பெருமானுக்கு இறுவெட்டு வெளியிடுவதை இட்டும், கிளிநொச்சி மண்ணே புத்துயிர் பெற்றுள்ளது. இத்திருப்பணிக்கு மனமுவந்து வாழ்த்தியவர்கள், நிதியுதவி வழங்கிய அனைத்து அடியவர்களுக்கு எம்பெருமான் அருளாட்சி என்றும் கிடைக்கும். கிளிநொச்சி கந்தனுடைய பாதார விந்தங்களை அனைவரும் இறுகப் பற்றி கும்பாபிஷேக விழாவின் அருளோடு இணைவோமாக.

**யோகரட்ணம் தஜேந்திரன், பொருளாளர்,அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்,கிளிநொச்சி.**



### அருள்மிகு கந்தசுவாமி கோவிலின் இராஜகோபுர குடமுழுக்கு சிறப்புற நிறைவுற கந்தன் கருணை கிட்டுவதாகுக.

எமது மாவட்டத்தில் சைவசமயத்தின் சிறப்பை எடுத்துக்காட்டும் வண்ணம் கம்பீரமாக எழுந்து நிற்கும் இராஜகோபுரம் மக்களின் வாழ்வின் உயர்வையும் ஒற்றுமை பண்பை உலகுக்கு எடுத்துக் காட்டும் வண்ணம் திகழ்கின்றதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

சிறு கோவிலாக ஆரம்பித்த கந்தசுவாமி கோவிலில் நகர வர்த்தகர்களினதும் மாவட்ட சிவாச்சாரியர்களினதும் விவசாயிகளினதும் பெரும் முயற்சியால் சீரும் சிறப்பும் பெற்று வளர்ச்சி அடைந்து வந்தமை வரலாறு காட்டும் உண்மை. கந்தனின் கருணையாலும் காலத்துக்கு காலம் கோவிலை நிர்வகித்து வரும் நிர்வாக சபையினரின் அளப்பெரிய முயற்சியால் இன்று வானளவி நிற்கும் இராஜகோபுரத்தைக் கண்டு வாழ்த்தி வணங்குகின்றோம்.

இறைவனின் கோவிலுக்கு அழகு தருவது கோபுரம் ஆகும். கோபுரத்தை வணங்குவது கோடி புண்ணியம் என்று பெரியோர் கூறுவர்.

மக்களின் வாழ்வை வளர்ச்சிப்படுத்தும் நோக்கமாகவே ஆகமங்களின் கூற்றுப்படி கோபுர கலசங்கள் அமைக்கப்படுதல் இராஜகோபுரத்திற்கு சிறப்பும் பாதுகாப்பும் மிக்கது.

எனவே இராஜகோபுரத்திற்கு நடைபெறும் குடமுழுக்கு நிகழ்வு கிராம நன்மையையும் ஊர் நன்மையையும் உலக நன்மையையும் ஏற்படுத்த இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். கந்தன் கருணை எல்லோருக்கும் கிடைப்பதாகுக.


**வே.மகாலிங்கம், தலைவர் திருநெறிக்கழகம் கிளிநொச்சி**




கிளிநொச்சி நகரின் மத்தியில் குடிகொண்டு மக்களின் மனதிலெல்லாம் நிலைகொண்டு அருளாட்சி புரியும் முருகன், சீமாட்டி இராமநாதனின் பெயரில் இருப்பிடம் தேடி சு.நடேசுபிள்ளை (பாராளுமன்ற உறுப்பினர்) அவர்களின் தலைமையில் அத்திபாரங்கண்டு, நீர்ப்பாசன இலாகாச் சிற்றூழியர்களின் நீண்ட உடல் உழைப்பிலும் பணியாளர்களின் பாரிய பங்களிப்பிலும் உருப்பெற்று கிளிநொச்சி வணிகரினதும் தனவந்தர்களினதும் பேருதவி கொண்டு வளர்ச்சி பெற்று, இன்று ஐந்து நிலை இராஜகோபுரம் மலரும் பொலிவும் கொண்ட முகங்கொண்டுஎழிற்கோலம் பெற்றுள்ளது. இவை கிளிநொச்சி மக்களின் ஆன்மீக மேம்பாட்டிற்கும் வள நிலைச்சிறப்பிற்கும் சுட்டியாகத் திகழ்கின்றன. இனி என்றும் போல் தளர் நிலை மக்களை மேம்படுத்தவும் மேல் நிலையாளரை மெருகூட்டவும் அருள்புரிய வேண்டி வணங்கிப் பணிகின்றேன்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

**நா.சோதிநாதன், முன்னாள் உதவிக்கல்விப்பணிப்பாளர்.**





### செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

அருவமும் உருவமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர்முகங்களாறும்கரங்கள்பன்னிரண்டுங்கொண்டே
ஒருதிரு முருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகமுய்ய.

சித்தர்கள், மகான்கள் நடமாடிய கிளிநொச்சி பெரும் பதியில் குடிகொண்டு இருக்கின்ற கந்தப்பெருமான் திருக்கோவிலுக்கு பஞ்சதள இராஜகோபுரம் அமைக்கப்பட்டது அ[illegible] மிகவும் ஆனந்தம் அடைகிறேன்.சைவத்தமிழர்களின் பூர்வீக பூமியாகிய வன்னி மண்ணில் வளமான கோவில் அமைந்திருப்பது பெருமை தருகிறது. இத் திருக்கோபுர திருப்பணிக்காக அல்லும் பகலும் உழைத்த ஆலய பரிபாலன



### தேவஸ்தான பிரதம குருவின் ஆசிச்செய்தி

அனைத்து அண்டங்களையும் அவைகட்கு உட்பட்ட உலகங்களையும் படைத்து காத்து அளிப்பவன் இறைவன் ஆகும். இத்தகு இறைவனை நினைந்து உயிர்களெல்லாம் உள்ளம் உருகி அன்பால் நனைந்து இன்புற வேண்டும் என்பதற்காகவே முன்னோர்கள் எண்ணற்ற ஆலயங்களை அமைத்தனர். இந்த வகையில் இலங்கை திருநாட்டின் கிளிநொச்சி மாநகரின் மத்தியிலே அமர்ந்து அருள் புரியும் கந்தவேள் பெருமான் ஆலயத்தில் பஞ்ச கிருத்தியங்களை ஒன்றாக்கி பஞ்ச தளங்களுடன் கண்கவர் வர்ணத்தில் ஆர்ப்பரிக்கும் அழகுடன் கம்பீரமாக காட்சியளிக்கும் இராஜகோபுரம் கிளிநொச்சி வாழ் சைவ அடியார்கட்கு கிடைத்த ஓர்



### கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் வழங்கிய வாழ்த்துச்செய்தி

**கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்**

தமிழ் மணமும் சைவநெறியும் ஓங்கி வளரும் கிளிநொச்சி மாவட்டத்தின் மத்திய பகுதியில் புராதன தனிச்சிறப்பு வாய்ந்த ஆலயமாய்த் திகழ்ந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் கிளிநொச்சி கந்தசாமி ஆலயத்தின் பஞ்சதள இராஜகோபுரத்தின் கும்பாபிஷேகம் நிறைவேற்றப்படவுள்ள செய்தியையறிந்து என் உள்ளம் புளகாங்கிதம் அடைந்து கந்தப்பெருமானின் அருளாட்சிக்கு உட் பட்ட அடியவனாகி பஞ்சதள கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் என் உள்ளம் பூரிப்படைகின்றது. மனதிலே கோயில் கட்டி கும்பாபிஷேகம் நிகழ்த்திய பூசலார் நாயனாரது எண்ணக்கிடக்கைகள் எம்மக்கள்



### கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான கும்பாபிஷேக மலருக்குரிய வாழ்த்துச் செய்தி

''கோயில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' எனும் ஆன்றோரின் கூற்றிற்கிணங்க நெல்விளையும் பூமியாம் கிளிநொச்சி மாநகரின் மத்தியில் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி ஆலயம் பெருவளர்ச்சி அடைந்துள்ளதை அனைவராலும் காணக்கூடியதாகவிளங்குகிறார்முருகப்பெருமான்.

ஐந்துதள இராஜகோபுர குடமுழுக்கு பெரும் தினத்தை முன்னிட்டு வெளிவரும் கும்பாபிஷேக மலருக்கு எனது இதயம் கனிந்த வாழ்த்துக்க

## மஹா கும்பாபிஷேகம்
## 01.05.2015 இன்று
## வெள்ளிக்கிழமை
## காலை 8.55 தொடக்கம்
## பகல் 10.23 மணிவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாமி தேவஸ்தானம்

## வட்டம்,A9 வீதி

## ர நவகுண்ட பக்ஷ மஹா

## விழா சிறப்பிதழ்- 2015







**அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர்**
**திரு.கந்தையா நீலகண்டன் அவர்களின் வாழ்த்துச் செய்தி**

கிளிநொச்சி மாநகரில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் கலியுகவரதனாம் கந்தப்பெருமானுக்கு இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறது. அதனையொட்டி வெளியிடப்படவுள்ள மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதை அடியேன் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற முச்சிறப்புக்களும் அமையப் பெற்ற இத்தலத்தைக் குறுகிய காலத்தில் புனர்நிர்மாணம் செய்து இன்று இராஜகோபுரத்தையும் நிறைவேற்றியுள்ளது போற்றுதற்குரியது.

ஆண்டவனுக்குரிய திருத்தலங்கள் பேணிப்பாதுகாக்கப்படும் போது அவ்வூர் சிறப்புற்று விளங்குமென்பதே எமது ஐதீகம். அதற்கேற்ப இத்திருத்தலம் பேணிப்பாதுகாப்பதற்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கும் பரிபாலன சபையினர், இராஜகோபுர நிர்வாகக் குழுவினர், உள்நாட்டு வெளிநாட்டு பக்தர்கள் யாவரையும் நன்றியுணர்வுடன் நோக்குகின்றோம். இந்துமாமன்றத்தின் குறிக்கோள்களில் ஒன்றாகிய ஆலயங்களை அமைத்தல், பேணுதல், புனர்நிர்மாணித்தல் என்பதற்கமைய கலியுகவரதனின் இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெறுவது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

ஆன்மீகச் செயற்பாடுகளுக்கு அப்பால் ஆலயங்கள் சமூக நலன் கருதிய செயற்பாடுகளையும் எடுத்துச் செல்லவேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும். அவ்விதத்தில் யுத்தத்தாலும் இடப்பெயர்வாலும் பாதிக்கப்பட்டவன்னிப் பெருநிலப்பரப்பில் வசிக்கும் எமது உடன் பிறப்புக்களின் வாழ்வாதாரத்திற்கு இவ் ஆலயங்கள் முன்னின்று உழைக்க வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் தேவையான அனுசரணைகளை வழங்கும். நடைபெறவுள்ள இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறப்புறவும் அதனையொட்டி வெளியிடப்படும் மலர் மூலம் சமய எழுச்சியை முன்னெடுக்கவும் எல்லாம் வல்ல கந்தப் பெருமானின் அருள் கிடைக்க வேண்டுகின்றோம்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே (கந்தர் அனுபூதி

என்றும் இறைபணியில்
கந்தையா நீலகண்டன்.



**கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான குடமுழுக்கு மலருக்குரிய வாழ்த்துச்செய்தி**

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் எனும் சைவப்பெருநோக்கோடு கிளிநொச்சி மாநன்னகரின் மத்தியில் பெருவிருட்சம் பெற்று மக்களுக்கு அருளாட்சி நல்கிக் கொண்டிருக்கும் கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி ஆலயம் பெருவளர்ச்சி கண்டு நான் மனநிறைவடைவதுடன் இந்த ஆலய ஐந்து தள இராஜகோபுர குடமுழுக்கு பெரு தினத்தை முன்னிட்டு வெளிவரும் கும்பாபிஷேக மலருக்கு எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களை என் சார்பாகவும் மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்லம் சார்பாகவும் வழங்குவதில் பெருமையடைகின்றேன். கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்ற ஆன்றோர்கூற்றுக்கிணங்க கடவுளை நம்பிக்கையோடு வழிபாடு செய்வதனால் நம் இவ்வுலக வாழ்வு மேன்மை பெறுவதுடன் மட்டுமன்றி மறுமையிலும் பேரின்பமாகிய முக்தி கிட்டும் என்னும் ஆன்மீகப் பெருநோக்குடன் கிளிநொச்சி வாழ் அடியார்களின் பெருமுயற்சியினால் இன்று இவ்வாலயம் பெருவளர்ச்சி கண்டுள்ளமை போற்றுதற்குரியது. ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு என்பதுபோல கடந்த காலங்களில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலைகளால் ஏற்பட்ட இன்னல்களையெல்லாம் களைந்து எமக்கு இனிவருங்காலங்களில் அருளாட்சி வழங்கி எமையெல்லாம் காக்கவேண்டுமென்ற ஆன்மீக நோக்குடன் கிளிநொச்சி மாநகரின் மத்தியில் அருள்மிகு கந்தசுவாமி ஆலய ஐந்து தள இராஜகோபுரம்தனை இந்து மதத்திற்கு பெருமைசேர்க்கும் வகையில் அமைந்ததையிட்டு எமது மனநிறைவான வாழ்த்துக்களை என்சார்பாகவும் இல்லப் பணிப்பாளர்கள், பணியாளர்கள் இல்லக் குழந்தைகள் சார்பாகவும் கூறி நிற்கின்றேன்.

**தி.இராசநாயகம், முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், தலைவர், மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்,ஜெயந்தி நகர்,கிளிநொச்சி.**



**கந்தவேல் பெருமானின் பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேகம் சிறக்கமனம் நிறைந்த வாழ்த்துக்கள்..**

கிளிநொச்சி மாநகரின் மத்தியில் எழுந்தருளியிருக்கும் அருள் மிகு கந்த சுவாமி தேவஸ்தானத்தின், பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கு, கருணை கூர்ந்த ஆறுமுகப் பெருமானது பாதக்கமலங்களைப் பணிந்து வணங்குகின்றேன்

ஆலயத்தின் திருப்பணி கைங்கரியத்தை ஆற்றுகின்ற சபையிலே, அடியேனுக்கும் அருள் பணியாற்றுகின்ற சந்தர்ப்பமானது என்பிறவிபயனின் பேரின்பத்தை அடைந்த உணர்வினை தந்துள்ளது. பல்வேறுபட்ட துன்பங்களையும், இடர்களையும் சந்தித்த இப்பிரதேசத்தின் மக்கள், முருகப் பெருமான் மீதுகொண்ட அளவு கடந்த பக்தியும்,அவருடைய அருட்பார்வையால் தாம் மீண்டெழுவோம் என்று அவர்கள் எண்ணிய நம்பிக்கையும், வீண்போகவில்லை என்பதுநாம் கண் கூடேகாணும் காட்சிகளே, சாட்சிகளாகின்றன. தேடிவரும் அடியவர்களுக்கெல்லாம் நாடிவரம் அருளும் கந்தவேள் பெருமானது இவ் ஆலயத்தினை, அழகு செய்து பார்க்க எண்ணிய எண்ணற்ற அடியவர்களது முயற்சியே, இன்று வானளாவ எழுந்து நிற்கும் அழகிய பஞ்சதள இராஜ கோபுரமாகும். "கோபுரதரிசனம் கோடிபுண்ணியம்" என்பதுசான்றோர்வாக்கு, ஆலயத்திற்கு வருகை தரும் அடியவர்கள் தம் மனத்தின்கண் இருக்கும் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களையும் அழித்து பேரின்ப பெருவாழ்வு பெறவே வருகின்றார்கள்.அவ் அடியவர்கள் ஆலயத்தினை அண்மிக்கின்றபோது கோபுரத்தினை கண்ணுற்று தம் மனங்களை ஆண்டவன் பால் சிந்திக்க செய்வதற்காய் அமைக்கப் பெற்றதே கோபுரம் என்று கூறுவார்கள். இச் சிறப்புமிக்ககோபுரமானது ஆலயத்தின் ஆகமவிதியின் படியான அமைப்புக்களிலே முக்கியமான ஒன்றாகத் திகழ்கின்றது.

இத்துணை சிறப்புமிக்க இராஜகோபுரமானது எம்பெருமான், உமைமைந்தனது கந்தசுவாமி ஆலயத்திற்கு அமையப் பெற்றது என்பது

அரிய திருப்பணியைநிறைவேற்றுவதற்கு நிதியினை, பொருளினை, உடலுழைப்பினை வழங்கிய அடியவர்களது அர்ப்பணிப்பான சிந்தனை அவர்களது சௌபாக்கியமான வாழ்விற்கு வழிவகுக்கும் என்பதும், எம்பெருமானது அருளாசி அவர்களுக்கும் அவர்கள் தம் வம்சத்திற்கும் என்றென்றும் கிடைக்கும் என்பதும் அனுபவரீதியான உண்மையாகும். இத் தெய்வீகக் கைங்கரியத்தினை ஆற்றுவதற்கு துணை நின்ற அத்தனைபேருக்கும், கிடைத்திருக்கும் இச் சந்தர்ப்பத்தினூடாக எனது சிரம்தாழ்த்திய வணக்கத்தினையும் நன்றியையும் தெரிவிப்பதில் மகிழ்வுகொள்கின்றேன்.

மேலும் கந்தவேல் பெருமானாய் வீற்றிருக்கும் எம் குழந்தை முருகனது ஆலயத்தினை மென்மேலும் அழகுபடுத்தி பக்தியும், ஆன்மீக உணர்வும் எங்கும் பரவ திருப்பணியாற்ற நாம் எல்லாம் ஒன்றுசேரவேண்டும் என்று இச்சந்தர்ப்பத்தில் முருகனடியார்களிடம் வேண்டுவதோடு, இப் பஞ்சதள இராஜகோபுரகும்பாபிஷேகம் கந்தசுவாமிப் பெருமானது அருள் அருளாசியுடனும்,அந்தணப் பெரியோர்களது குரு ஆசியுடனும்,அடியவர்களது ஆன்மீக சிந்தனையோடும் சிறப்புற நடைபெறம னதார வாழ்த்துகின்றேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

**எந்திரி நவரட்ணம் சுதாகரன், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்,கிளிநொச்சிப் பிராந்தியம்**



வன்னி நிலப்பரப்பின் தலையாக விளங்கும் கிளிநொச்சி மாநகரில் அருளாட்சி செய்யும் கந்தசுவாமி கோவிலுக்கு பஞ்சதள இராஜகோபுர கும்பாபிஷேக மலரிற்கு வாழ்த்துச் செய்தி அளிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியுடையேன்.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்ற வாக்கிற்கு இணங்க இராஜகோபுர நிர்மாண நிறைவேற்றுக்குழுவின் அயராத முயற்சியாலும் முருகப்பெருமானின் அருளாலும் குறுகிய காலத்தில் கோபுரம் கட்டி முடிக்கப் பெற்றது யாவரும் அறிந்ததே. அவனருளாலே அவன்தாள் வணங்கி என்ற மணிவாசகரது திருவாசக மொழியாலே முருகப்பெருமான் இலங்கை வாழ் தமிழ் சைவ உலகிற்கும் துன்பத்தில் உழலும் அனைவருக்கும் நற்கதி அருள இறைஞ்சி வணங்குகின்றேன்.

**இ.ச.பே.நாகரெத்தினம், யாழ்ப்பாணம்,**




**வாழ்த்துச் செய்தி**

"வந்தாரை வாழ வைக்கும்" கிளிநொச்சி மாநகரின் மத்தியில் ஏ-9 வீதியில் அமர்ந்திருந்து அருள்பாலிக்கும் முருகப் பெருமானுக்கு கிளிநொச்சி வாழ் விவசாயப் பெருமக்கள், அடியார்கள், அந்தணப் பெருமக்கள், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், கொழும்பு வர்த்தகப்பெருமக்கள், புலம்பெயர்வாழ் அன்புள்ளங்கள், இலங்கை இராணுவத்தின் பொறியியற் பகுதியினர், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள் அனைவரினதும் நிதியுதவி, பொருளுதவி, சரீர உதவி, வாகன உதவி என்பவற்றினால் உருவாக்கப்பட்ட பஞ்சதள இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன்.

குறிப்பாக இந்த பஞ்சதள இராஜகோபுர திருப்பணியின் முதன்மைப் பொறுப்பை ஏற்று எமக்கு இரவு-பகல் என்று பாராது உழைத்த கிளிநொச்சி பிராந்திய பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் பொறியியலாளர் நவரட்ண சுதாகரன் அவர்களுக்கும் ஏனைய நிர்மாணக்குழு உறுப்பினர்களுக்கும் சிற்பாச்சாரியார் .வே.யோகேஸ்வரன் (அராலி-ஈசன்) அவர்களுக்கும் ஆலய பரிபாலன சபை சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். தன்னை நாடி வந்து வேண்டுபவர்க்கு வேண்டுவனவெல்லாம் வழங்கும் முருகப் பெருமான் வல்வினைகள் போக்கி வரும் துயர்கள் நீக்கி மக்கள் பேரானந்தப் பெருவாழ்வு வாழ்ந்திட வரமருள வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

"கோபுர தரிசனம் கோடிபுண்ணியம்" "கோபுர தரிசனம் பாவவிமோஷனம்"

**ச.ஸ்ரீகௌரிபாலா, கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான தலைவர்**



**சிற்பாச்சாரியாரின் வாழ்த்துச் செய்தி**

இலங்காபுரியின் அருள் மேவி மிளிரும் செந்நெல் விளையும் பூமியாம் கிளிநொச்சி மாநகரின் அழகிற்கு அருள் சேர்க்கும் புனித தலமாக எழுந்தருளி வீற்றிருக்கும் அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் பஞ்சதள இராஜகோபுரம் அமைக்கப்பெற்று நவகுண்ட மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்ந்து நிர்வாகிகள், அடியார்கள் அனைவரும் கந்தசுவாமியின் அருள் பெற்று சிறந்து விளங்க எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் .

**வேலுப்பிள்ளை யோகேஸ்வரன் (ஈசன்)**
**சிற்ப சிரோன்மணி, அராலி மத்தி, அராலி.**

சபையினரை நன்றியோடு வாழ்த்துகிறேன். போரினால் அழிந்த மண்ணில் மீண்டும் ஓர் பக்தெழுச்சியை ஏற்படுத்த வேண்டிய கடப்பாடு அனைவருக்கும் உண்டு. அவ்வகையில் கிளிநொச்சி அருள்மிகு கந்தசாமி தேவஸ்தானம் சீரோடும் சிறப்போடும் மேலும் வளர்ச்சி பெற முருகப்பெருமானை பிரார்த்திக்கிறேன். எங்கள் சமய மேன்மையை கிளிநொச்சி மாவட்டத்தில் கட்டி வளர்ப்பதற்கு இத்திருக்கோவில் மேலும் நல்ல செயற்றிட்டங்களை உருவாக்க வேண்டும் என பணிவோடு வேண்டிக்கொள்கிறேன். கண்டி வீதியால் செல்லும் மக்கள் தூரத்திலேயே கையெடுத்து கும்பிடும் அளவுக்கு தூலலி[illegible] ஆகிய திருக்கோபுரம் பரிணமிக்கும் என்பதில் ஐயம் இல்லை.

யாவர்க்குமாம் இன்னுரைதானே.

**கலாநிதி ஆறு.திருமுருகன்,தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**

வரப்பிரசாதமாகும். "நல்ல உணர்வு வரும் போது நல்ல காலம் வருகின்றது" என பொருள்படும். எனவே எம்பெருமான் தேவஸ்தான சிவாச்சாரியார்கள், நிர்வாக சபையின் சைவ அடியார்கள் மனதிலே தோன்றிய சிறப்பான எண்ணம் இன்று நம் அனைவரதும் கண்முன்னே தனித்துவமாக சிகரம் போல் பேரானந்தம் அடைய வைக்கின்றது. இக் கைங்கரியத்தை எம்பெருமான் கருணையால் ஆற்றிய நிர்வாக சபையினருக்கும் அடியார்கட்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் கந்தவேள் பெருமானின் கோபுர ஒளி எங்கும் பரவி சுபீட்சமும், சுகமான வாழ்வும் பெற்று வாழ எனது ஆசிகளைக் கூறி கந்தவேள் பெருமானை பிரார்த்திக்கின்றேன்.

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

**கிரியா ரத்னம், கிரியாமணி சிவஸ்ரீ ஜெகஜெயந்தன் குருக்கள்**
**(தேவஸ்தான ஆதீன பரம்பரை பிரதம குரு)**

மத்தியில் இறைபணியை, இறைசிந்த னையை நினைந்துருக வைத்துள்ளது. தேவஸ்தானம் அமைப்பது என்பதைவிட தேவஸ் தானத்தை மக்கள் உரிய வழிபாட்டு இடமாகக் கொண்டு உண்மையான பக்தியுடன் மனதை எல்லோரும் துன்பம் நீங்கி வாழவேண்டும் என்ற உயர்சிந்தனைக்கு உட்படுத்தி ஆன் மாவை இலக்கு நோக்கி இட்டுச் செல்லவேண்டும்.

அந்த வகையில் இவ் ஆலயத்தில்புதி தாக அமைக்கப்பெற்ற இராஜகோபுரமானது வானளாவி நின்று அடியவர்களின் மனதில் தூய சிந்தனையை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இவ் ஆலயத்திற்கு இராஜகோ புரம் அமைப்பதற்கு முன்னின்றுழைத்த கந்தன் அடியவர்களுக்கு சகல சௌபாக்கியங் களும் கிடைப்பதற்கு எல்லாம் வல்ல கந்தப்பெருமானை வேண்டி அமைகின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம், அரசாங்க அதிபர், மாவட்டச் செயலர்,கிளிநொச்சி மாவட்டம்.**

ளையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். எமது முன்னோர்களின் விருப்பத்திற்கிணங்க இராஜகோபுர வேலைகள் அனைத்தும் நிறைவடைந்து அவர்களது கனவுகள் நனவாக்கப்பட்டு விட்டன என்பதையும் இச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். "யாமிருக்க பயமேன்" எனும் கந்தனின் பொன் வாக்கிற்கிணங்க கிளிநொச்சி மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற ஆலயங்களுள் முதலாவது ஐந்து தள இராஜகோபுரமாக அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார். எமது கோபுர வேலைகளுக்காக உதவிய அனைத்து பக்த அடியார்களுக்கும் எனது நிர்வாகம் சார்பில் பெரும் நன்றி சொல்ல கடமைப்படுவதோடு எம்பெருமானின் திருவருளும் நல்லாசிகளும் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

**கோ.பத்மநாதன், ஆலய பரிபாலன சபை செயலாளர்.**

**இங்ஙனம்**
**தேவஸ்தான பரிபாலன சபையினரும்**
**அடியார்களும்**
**T.P:-021 228 3745**
**021 320 8022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 19 ஆவது திருத்தம்

# வெற்றியும் தோல்வியும்

நீண்ட இழுபறிகளுக்குப் பின், 174 திருத்தங்களுடன் 19 ஆவது திருத்தச் சட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை (ஏப்ரல் 28, 2015) நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் அரசியலமைப்புத் திருத்தமொன்று 211 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்ட முதலாவது சந்தர்ப்பமாக இதனைக் கொள்ள முடியும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகார எல்லைகளை மட்டுப்படுத்தி நாடளுமன்றத்துக்கும் அமைச்சரவைக்கும் அதிகாரங்களைப் பகிரும் முகமாகவே, 19 ஆவது திருத்தச் சட்டம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தேசிய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டது. ஆனால், குறித்த அரசியலமைப்புத் திருத்தத்தை, எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட பெருமளவான (111) மாற்றங்களைச் செய்த பின்னரே நிறைவேற்ற முடிந்திருக்கின்றது. இது, தேசிய அரசாங்கத்தின் தோல்வியாகவே கருதப்படுகின்றது.

ஆனால், அந்தத் தோல்வியைத் தாண்டிய வெற்றியொன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும பெற்றிருக்கின்றார்கள் என்றும் கொள்ள முடியும். மைத்திரிபால சிறிசேனவின் அரசியல் வாழ்வில் கடந்த ஜனவரி மாதம் 08 ஆம் திகதி பெற்றுக் கொள்ளப்பட்ட ஜனாதிபதி தேர்தல் வெற்றி, அவர் என்றைக்குமே எதிர்பார்க்காத ஒன்று. ஆனால், அந்த வெற்றியைத் தாண்டி தன்னுடைய பெயரை வரலாற்றில் பதிவு செய்வதற்கான சந்தர்ப்பத்தை 19 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியதனூடு செய்திருக்கின்றார்.

ஜனாதிபதி பதவியை அடைவதற்கு ரணசிங்க பிரேமதாஸ, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் மேற்கொண்ட பிரயத்தனங்களில் குறைந்தளவைக் கூட மைத்திரிபால சிறிசேன செய்திருக்கவில்லை. ஜனாதிபதி வேட்பாளராக தன்னை முன்னிறுத்த ஒப்புக்கொண்டது மட்டுமே அவர் மேற்கொண்ட கத்தி முனைத் தீர்மானம். மற்றப்படி, அவருக்கான வெற்றியை பொது எதிரணியும் இளைஞர்களும் வெளி நாடுகளும் ஊடகங்களும் இணைந்து பெற்றுக் கொடுத்தன. எனினும், தனக்குக் கிடைத்த வெற்றியை வைத்துக் கொண்டு அதிகாரங்களைப் பெருக்கிக் கொள்ளும் சந்தர்ப்பம் மைத்திரிபால சிறிசேனவுக்கும் வாய்த்தது. அவர் அதனைச் செய்யாமல், ஜனநாயக விழுமியங்கள் மீது, தான் கொண்ட நம்பிக்கையை வெளிப்படுத்தியிருக்கின்றார். இதனை மக்கள் ஜனநாயகத்தின் குறிப்பிட்டளவான வெற்றியாகக் கொள்ள முடியும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசாங்கம், 1978 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய அரசியலமைப்புத் திருத்தங்களுக்கு அமைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. சுமார் 37 வருடங்களாக அந்த முறையின் கீழே இலங்கை ஆளப்பட்டிருக்கின்றது. நாடாளுமன்றம் மற்றும் நீதிமன்றங்களின் சுயாதீனங்களில் தலையீடு செய்யுமளவுக்கான தனிநபர் ஆளுகையை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை வழங்கியிருந்தது. அதனை, மாற்றுவது நாட்டு ஜனநாயகத்தை பாதுகாப்பதாகக் கொள்ள முடியும். கடந்த காலங்களில் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எமக்கான (மக்களின்) ஜனநாயக உரிமையைக் கொண்டு சர்வாதி காரத்தை தேர்வு செய்கின்றோம் என்கிற எண்ணப்பாடு எழுந்திருக்கின்றது.

நிறைவேற்று அதிகாரத்தை அறிமுகப்படுத்திய ஐக்கிய தேசியக் கட்சியே, அந்த அதிகாரத்தினால் அதிகம் பழிவாங்கப்பட்ட கட்சியாகும். என்றைக்குமே இலங்கை அரசியலில் தன்னை (ஐ.தே.க.வை) தோற்கடிக்க முடியாத சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன கொண்டுவந்த அரசியலமைப்புத் திருத்தம், அவரது மருமகனான ரணில் விக்ரமசிங்கவை இரண்டு தசாப்தங்களாக அலைக்கழித்திருக்கின்றது. அதுதான், ஐக்கிய தேசியக் கட்சி, 19ஆவது திருத்தச் சட்டத்தினை உறுதியாக முன்மொழிய வைத்தமைக்கான காரணம். மாறாக, ஜனநாயகத்தின் மீது ஐக்கிய தேசியக் கட்சி பாரிய அக்கறை கொண்டிருக்கின்றது என்று நம்புவதற்கான சூழல் இன்னமும் அமையவில்லை.

நாடாளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மையுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தை தவிர்க்க முடியாமல் ஏற்றாலும், மஹிந்த அபிமானிகளினாலும் ரணில் வெறுப்பாளர்களினாலும் நிறைந்திருக்கின்றது. இந்த விடயங்களை சரியாக கையாண்டாலேயன்றி தன்னால் எதனையும் செய்ய முடியாத சூழல் இருக்கின்றது என்பதை மைத்திரிபால சிறிசேன உணர்ந்து வைத்திருக்கின்றார். அதுதான், நீண்ட விட்டுக் கொடுப்புகளுக்குப் பின்னர் 19 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டியும் வந்திருக்கின்றது.

எவ்வளவு விட்டுக்கொடுப்பைச் செய்தாவது, 19 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதே மக்களின் நம்பிக்கையை மீண்டும் வெற்றி கொள்ள உதவும் என்பதில் மைத்திரிபால சிறிசேனவும் ரணில் விக்ரமசிங்கவும் தெளிவாக இருந்தார்கள். அதுதான், வரவுள்ள பொதுத் தேர்தலை மஹிந்த ராஜபக்ஷ பூச்சாண்டிகளைத் தாண்டி வெற்றி கொள்வதற்கான வழி என்றும் நம்புகின்றார்கள். அந்த நம்பிக்கையில் பெருமளவு உண்மையும் இருக்கின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது பொது எதிரணி (மைத்திரி- ரணில்- எதிர்க் கட்சிகள் கூட்டு), நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் மிக முக்கியமானது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிப்பு (அல்லது அதிகாரங்களின் மட்டுறுத்தல்). ஆக, அதனை செய்யாது பொதுத் தேர்தலை எதிர்கொள்வது என்பது முன்னாள ஜனாதிபதிகள் செய்த அதே தவறினைச் செய்வதற்கு ஒப்பானது.

அதாவது, முன்னாள் ஜனாதிபதிகளும் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதாக ஒவ்வொரு தேர்தலிலும் வாக்குறுதியளித்து அதனைக் காற்றில் பறக்க விட்டிருக்கின்றார்கள். அந்த வகையில், மைத்திரிபால சிறிசேன-ரணில் விக்ரமசிங்க கூட்டினால் வாக்குறுதியை பகுதியளவேனும் நிறைவேற்ற முடிந்திருக்கின்றது என்பது வெற்றி. அதனை மக்களிடம் வெற்றிக்கான காரணமாகவும் முன்வைக்க முடியும். அதுபோக, வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்ற முடியாமைக்கான காரணமாக, மஹிந்த பூச்சாண்டியையும் கடந்த அரசாங்கத்தின் ஊழல்வாதிகளையும் இலகுவாக கைநீட்டவும் முடியும்.

இன்னொரு பக்கம், நாம் எதிர்பார்த்த திருத்தங்களுடன் 19 ஆவது திருத்தச் சட்டம் அமையவில்லை என்பதில் ஐக்கிய தேசியக் கட்சி ஆழ்ந்த அதிருப்தியுடன் இருக்கின்றது. பொதுத் தேர்தலின் பின்னர் புதிய திருத்தங்களைச் செய்வதற்கான உத்தேசங்களுடன் இருப்பதாக அந்தக் கட்சியின் முக்கியஸ்தரான அமைச்சர் மங்கள சமரவீர ஏற்கனவே குறிப்பிட்டிருக்கின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஜனாதிபதியிடம் இருந்து அதிகாரங்களை பெற்றுக் கொள்வதில் எந்த விட்டுக் கொடுப்பையும் செய்வதற்கு தயாராகவில்லை. மாறாக, பிரதமரிடம் (ரணிலிடம்) அதிகாரங்களைக் குவிப்பதற்கான வாய்ப்புக்களை உருவாக்குவதிலேயே குறியாக இருக்கின்றது. 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு தவிர்க்க முடியாமல் தலையாட்டியிருக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பெரும்பான்மையான உறுப்பினர்கள், தேர்தல் முறை மாற்றங்களை உள்ளடக்கிய 20 ஆவது திருத்தச் சட்டத்தை தமது வெற்றிக் கருவியாக முன்வைத்திருக்கின்றன.

தேர்தல் முறை மாற்றத்தை செய்யாது பொதுத் தேர்தலொன்றுக்கு ஜனாதிபதியோ, பிரதமரோ சென்றால், அதனை வைத்துக் கொண்டு பொதுத் தேர்தலில் களமாடுவார்கள். இதுதான், ரணில் விக்ரமசிங்கவுக்கான இப்போதைய பெரும் சிக்கல். இந்தச் சிக்கலை அவர் எப்படித் தாண்டப்போகின்றார் என்பதே பொதுத் தேர்தலில் அவரின் வெற்றி வீதத்தின் அளவை தீர்மானிக்கும் ஒன்றாகவும் மாறும்.

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவை முன்னிறுத்தி ஆட்சி மாற்றமொன்றை உருவாக்குவதே ஐக்கிய தேசியக் கட்சியின் அடிப்படை நோக்கமாக இருந்தது. அதனூடு, தோல்வியின் போக்கிலிருந்த கட்சியை மீளவும் வெற்றிப்படிகளில் ஏற்றுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவதும், ஆட்சியைக் கைப்பற்றுவதும் ஆகும்.

அந்த முயற்சி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றாலும் மிகவும் சிக்கல் நிறைந்தது என்று தெரிந்ததுதான். ஆனால், அவற்றை கையாள்வது தொடர்பில் மறைமுகமான வெற்றியை ரணில் விக்ரமசிங்க ஒவ்வொரு தருணத்திலும் பெற்று வந்திருக்கின்றார். அதனை, அவர் நாடாளுமன்றத்துக்குள்ளும் நிரூபித்து வந்திருக்கின்றார்.

கடந்த கால ஆட்சியில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பில் விசாரணைகளை துரிதப்படுத்து வதற்கான காலத்தைக் கணித்து ரணில் விக்ரமசிங்க களமாற்றுகின்றார். 19 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றத்துக்குப் பின்னரான காலத்தை அவர் அதற்காக தெரிவு செய்து வைத்திருக்கின்றார்.

அதுதான், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் பாரிய குழப்பங்களை ஏற்படுத்தி நாடாளுமன்றத்தை ஸ்தம்பிக்க வைக்கும். அதனூடு மக்களிடம் நேரடியாக தேர்தலுக்குச் செல்ல முடியும். அப்படியான சூழ்நிலைகளை உருவாக்குவதே, ஐக்கிய தேசியக் கட்சிக்கு தற்போதைக்கு பாதிப்பை வழங்கும் 20 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதிலிருந்து தப்புவதற்கான ஒரே வழி. அந்த வழியினை நடைமுறைப்படுத்துவதில் ரணில் விக்ரமசிங்க எந்த விட்டுக்கொடுப்பையும் செய்ய வில்லை என்று கொள்ள முடியும்.

இன்னொரு பக்கம் மஹிந்த பூச்சாண்டியைக் காட்டி, மைத்திரி பால சிறிசேனவை ஓரளவுக்கு தமது கட்டுக் குள் வைத்துக் கொள்ளலாம் என்று நினைத்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் ஊழல் குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டிருக்கின்றவர்கள், அடுத்த திட்டம் தொடர்பில் சிந்திக்க வேண்டியேற்பட்டிருக்கின்றது. ஏனெனில், மஹிந்த ராஜபக்ஷவினை மீண்டும் அரசியல் தளத்துக்கு கொண்டு வருவது என்பது அவ்வளவு இலகுவானது அல்ல. மாறாக, கொண்டுவந்தாலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினூடு அதனை சாத்திய மாக்குவது என்பது முடியாதது. ஆக, மஹிந்த பூச்சாண்டி என்பது மறைமுகமாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு வெற்றியைத் தேடிக் கொடுக்கும் சூத்திராமாகவே இருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்கள், மஹிந்த ராஜபக்ஷவின் மீள்வருகை தொடர்பில் அவ்வளவு ஆர்வம் கொள்ளவில்லை. மாறாக, தமது ஆளுகையுள்ள அரசாங்கம் அமைய வேண்டும் என்பதே அவர்களின் தற்போதைய நோக்கம். ஏனெனில், பொதுத் தேர்தலின் பின்னர் தேசிய அரசாங்கம் அமைந்தாலும் அது, ரணில் விக்ரமசிங்கவின் திட்டங்களின் கீழான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமாகவே செயற்படும் என்பது வெளிப்படையானது. அதனை, எப்படித் தகர்ப்பது என்றே சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் இப்போது யோசிக்கின்றார்கள். ஆனால், அதற்கான வழிகள் அவ்வளவு இலகுவாக திறந்துவிடாது.

ஏனெனில், ரணில் விக்ரமசிங்க அனைத்துப் பக்கத்திலும் பொறிகளை வைத்திருக்கின்றார். 19 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதினூடு, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் முழுமையாக ஒழிக்கப்பட்டிருக்கின்றது என்று யாரும் நம்ப வேண்டியதில்லை. அது உண்மையும் இல்லை.

ஆனால், நிறைவேற்று அதிகாரத்தின் காரங்கள் ஜனநாயகத்தின் வேரை அசைக்குமளவுக்கு இனி நீள்வதற்கான வாய்ப்புக்கள் குறைவு. ஆனால், இவற்றையெல்லாம் தாண்டி, 19 ஆவது திருத்தச் சட்டத்தின் நிறைவேற்றம் ரணில் விக்ரமசிங்கவின் எதிர்கால அரசியல் இருத்தலை தீர்மானிப்பதற்கான கருவியாகவே கொள்ள முடியும். அதனை, அவர் மைத்திரிபால சிறிசேனவின் ஒத்தாசையோடு வெற்றி கொண்டிருக்கின்றார். வரும் நாட்கள் அதற்கான செய்தியை இன்னும் அழுத்தமாகப் பதிவு செய்யும்.

-மிரர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறநாட்டு மீனவர்கள்

# எல்லை தாண்டினால் சுட அதிகாரம் உண்டு

### அமைச்சர் சுவாமிநாதன் சர்ச்சைக்குரிய கருத்து



(கொழும்பு)

இந்தியாவிலுள்ள தமிழ் அகதிகளை இன்னும் ஒரு வருடத்திற்குள் தாய் நாட்டிற்கு அழைத்து கொள்ளப்படுவார்கள் எனவும் பிறநாட்டு மீனவர்கள் எல்லை தாண்டி இலங்கைக் கடற்பகுதியில் நுழைந்தால் அவர்களை சுடுவதற்கு இலங்கை சட்டத்தில் அதிகாரம் உண்டு என மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் சர்ச்சைக்குரிய கருத்தை முன்வைத்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள 2 ஆயிரம் ஏக்கர் நிலத்தை மீட்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்த அமைச்சர்,

குறித்த நிலம் மீட்கப்பட்டதன் பின்னர் உரிய வசதிகள் செய்த பின் இந்தியாவிலுள்ள இலங்கை தமிழர்கள் மீள அழைத்துக்கொள்ளப்படுவார்கள் என தெரிவித்தார்.

இலங்கையில் வசிக்கும் தமிழர்களை இலங்கை அரசு தனியாக பிரித்து பார்க்கவில்லை எனவும், வடக்கு மாகாணத்தில் 90 சதவீத கண்ணிவெடிகள் அகற்றப் பட்டுவிட்ட நிலையில் எஞ்சிய 10 சதவீத கண்ணிவெடிகள் விரைவில் அகற்றப்படும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை இருநாட்டு மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணும் முழுப்பொறுப்பு இந்தியாவிடமே காணப்படுகின்றது என அமைச்சர் தெரிவித்தார்.

பிறநாட்டு மீனவர்கள் எல்லை தாண்டி இலங்கை கடற்பகுதியில் நுழைந்தால் அவர்களை சுடுவதற்கு இலங்கை சட்டத்தில் அதிகாரம் காணப்படுகின்றது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# அவன்கார்ட் மோசடியுடன் தொடர்புடையவர்களை கைது செய்யவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

### பிரதி நீதியமைச்சர் சுட்டிக்காட்டு

குற்றப் புலனாய்வு திணைக்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கையளித்துள்ள அவன்கார்ட் நிறுவனம் சம்பந்தமான அறிக்கையில் அதனுடன் தொடர்புடைய 5 பேரது பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ள போதிலும் அவர்கள் எவரும் இதுவரை கைது செய்யப் படவில்லை.

இந்நிலை அவன்கார்ட் நிறுவனம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களம் நடத்திய விசாரணைகளில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நபர்களை உடனடியாக கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பிரதி நீதியமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வு திணைக்களத தின் அறிக்கையை துரிதமாக ஆராய்ந்து சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாக கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதியமைச்சர் கூறியுள்ளார்.

அவன்கார்ட் நிறுவனம் தொடர்பில் விசாரணை நடத்திய குற்றப் புலனாய்வு திணைக்களம் நிறுவனத்தின் தலைவர் நிஷங்க சேனாதிபதி, பணிப்பாளர் மஞ்சுள குமார, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய -ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் டி.எம்.எஸ்.ஜயரத்ன, ரக்னா லங்கா பாதுகாப்பு நிறுவனத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ ஆகியோர் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தது.

பயங்கரவாத தடுப்புச் சட்டம், துப்பாக்கி மற்றும் வெடிக்கும் பொருட்களை தம்வசம் வைத்திருப்பதற்கு எதிரானசட்டம் ஆகியவற்றின் கீழ் இவர்களை கைது செய்ய வேண்டும்.

எவவாறாயினும் கைது செய்யப் படுவது ஏன் தாமதிக்கப்பட்டு வருகிறது என ஆராய்ந்து அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப் படும் என பிரதி நீதியமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ)

# காணாமற்போனவர்கள் வெலிக்கடைச் சிறையில்

### மீட்டுத்தரக்கோரி அமைச்சர் ஜோனிடம் உறவினர்கள் கோரிக்கை

கடந்த காலங்களில் காணாமற் போனதாகக் கூறப்படும் தமது பிள்ளைகள், வெலிக்கடை சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று பொது ஒழுங்குகள், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் காணாமற் போனவர்களின் உறவினர்கள் நேற்று முன்தினம் முறையிட்டனர்.

அமைச்சர் அமரதுங்கவை நேற்றுமுன்தினம் சந்தித்த, காணாமற் போனவர்களின் உறவினர், வெலிக்கடை சிறைச்சாலையில் தங்களது பிள்ளைகள் இருப்பதாக தெரிவிக்கப்படும் நிலையில், அது குறித்த உரிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். சிறைச்சாலையில் கொண்டாடப்பட்ட தைப்பொங்கல் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள், ஊடகங்களில் வெளியாகியிருந்த நிலையில், அவற்றில் தமது பிள்ளைகள் காணபபட்டதாக அமைச்சரிடம், அப்பிளைகளின் உறவினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அவர்களின் கோரிக்கைகளை செவிமெடுத்த அமைச்சர், இது குறித்து தாம் உரிய நடவடிக்கை எடுப்பதாக அவர்களிடம் உறுதியளித்துள்ளார். (இ-5)

## இன்று ஒரு தகவல்

### மற்றவர் கருத்துக்கு மதிப்பளியுங்கள்

ஒரு கருத்துக்கு மூன்று முகங்கள் உண்டு. அதன் ஒரு முகம் உங்களுடையது. அதன் இன்னொரு முகம் மற்றொருவருடையது. ஆனால் மூன்றாவது முகம்தான் அந்தக் கருத்தின் உண்மையான முகம். மற்றவர்களோடு உரையாடும் போது இதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். அதேநேரத்தில் உங்கள் கருத்து உண்மையானது என்ற தெளிவு உங்களுக்கு இருந்தால் கடைசிவரை அதை வலியுறுத்துங்கள். விவாத த்தின் போது மற்றவர்களின் கருத்து உண்மையானது என்ற தெளிவு உங்களுக்கு இருந்தால் கடைசிவரை அதை வலியுறுத்துங்கள். விவாதத்தின்போது மற்றவர்களின் கருத்து உண்மை யானது என்று தோன்றினால் அதைத் தயக்கமின்றி ஏற்றுக் கொள்ளுங்கள். ஒருவேளை 2 பேரின் கருத்துக்களையும் தாண்டி உண்மையானதொரு கருத்து இருக்கிறது என்ற எண் ணம் உங்களுக்கு ஏற்பட்டால் நீங்கள் இருவரும் அதை ஏற்றுக் கொள்ள முன்வர வேண்டும். அங்கே 'ஈகோ'வுக்கு இடம் கொடுக்கக்கூடாது.

கணவன், மனைவி உறவிலிருந்து சமூகம் சார்ந்த மற்ற எல்லா தொடர்பு நிலைக்கும் இந்த அடிப்படை குணம் தேவைப்ப டுகிறது.

பிரச்சினைகள், சிக்கல்கள், சண்டைகள் இவை எல்லாம் ஏற்படுவதற்கு என்ன காரணம் என்று ஆய்வு செய்த ஆராய்ச்சியாளர்கள், பிரச்சினையை தீர்க்க முடியாமல் போவதற்கான முக்கியமான காரணம் என்ன என்பதைக் கண்டு பிடித்துள் ளனர். அதை ஆங்கிலத்தில் 'எம்பதி' என்பர். ஒரு பிரச்சினையை எப்போதும் நமது கோணத்தில் பார்ப்பதை இது குறிக்கிறது. அப்படி இல்லாமல் பிரச்சினைக்குரியவர்களின் கோணத்தில் அதை நாம் பார்க்க வேண்டும். அப்போதுதான் பிரச்சினையின் உண்மையான தன்மை நமக்குத் தெரியும். மற்றவர்கள் கோணத் திற்கு நாம் மதிப்புக் கொடுப்பதே இல்லை. நாமாகவே எல்லா வற்றையும் முடிவு செய்கிறோம். இப்படி நாமாகவே நமக்கு ஒத்துவரும் வகையிலேயே எல்லாவற்றையும் பற்றி யோசி த்துக்கொண்டு இருக்கிறோமே தவிர அவர்களது கோணத்தில் இருந்து பிரச்சினையைப் பற்றி யோசிப்பதில்லை.

அவர்கள் பார்க்கும் கோணத்தில் பல நல்ல காரணங்கள் இருக்கலாம். அவர்கள் பக்கம் நியாயம் இருக்கலாம். அதனால் ஒரு பிரச்சினையை நமது கோணத்திலிருந்து யோசிக்கும் அதே நேரத்தில் அவர்கள் கோணத்திலிருந்தும் யோசிக்க வேண்டும். அப்போதுதான் பிரச்சினைகளை எளிதில் தீர்ப்பதற்கான வாய்ப்புகள் உருவாகும்.

**மற்றவர்களை சமாளிப்பதில் உங்களது திறனைப் பெருக்கிக் கொள்வதற்காக நீங்கள் எடுக்கும் முதல் நடவடிக்கையாக அவர்களின் தன்மையை நீங்கள் சரிவர புரிந்து கொள்வது இருக்க வேண்டும்.**

மக்களையும் அவர்களது மனிதத் தன்மையையும் புரிந்து கொள்ள அவர்கள் இப்போது எப்படி இருக்கிறார்கள். இனி எப்படி அவர்கள் இருக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்ப் பதைவிட நீங்களாகவே ஒரு முடிவுக்கு வருவதைவிட அவர்கள் இருக்கின்ற அந்த நிலையிலேயே நீங்கள் அவரை முதலில் அங்கீகரிக்க வேண்டும்.

மற்றவர்கள் உங்களைப்பற்றி நினைப்பதைவிட, உங்கள் மீது அக்கறை கொள்வதைவிட தங்களைப் பற்றியே பத்தாயிரம் மடங்கு அதிகளவில் கவலைப்படுகின்றனர். அக்கறை கொள் கின்றனர். அது தவறு. மக்கள் தங்களைப் பற்றி மட்டும்தான் அக்கறை கொள்கின்றனர் என்பதைப் புரிந்துகொள்ளும் அறிவுதான் மக்களுடன் நீங்கள் தொடர்பு கொள்வதற்கு அடிப்படையாகிறது. மற்றவர்களை சமாளிக்க உங்களுக்கு சக்தியையும் திறனையும் அது அளிக்கிறது. இதைப் புரிந்து கொண்டால் வெற்றிகரமான பல நுட்பங்கள் உருவெடுக்கும்.

மனித உறவுகளைப் பேணுவதில் நீங்கள் திறமைசாலிகளா கத் திகழ, நீங்கள் எடுக்க வேண்டிய ஒரே ஒரு முக்கியமான நடவடிக்கை மற்றவர் கருத்துடன் உடன்படும் கலையில் நீங்கள் வல்லமை பெறுவதாகும். உண்மையிலேயே இது காலத்தின் கட்டாயம். உடன்படும் இந்த எளிய நுட்பத்தைப்போல் வேறு எதுவும் உங்களுக்கு வாழ்நாளில் உதவப் போவதில்லை. பிறர் கருத்தை எவ்வளவுக்கு எவ்வளவு கேட்கிறீர்களோ அந்த அளவுக்கு நீங்கள் கெட்டிக்காரராகி விடுவீர்கள். அதிகம் பிறரால் விரும்பப்படுவீர்கள். சிறந்த உரையாடல் வல்லுநரா கவும் நீங்கள் மாறிவிடுவீர்கள்.

ஒருவர் பேசுவதை நன்கு காது கொடுத்துக் கேட்பவர், பேசுகிறவரைக் காட்டிலும் மற்றவர்களை அதிகம் கவர்ந்து விடுகிறார். காரணம், நன்கு கேட்கிற ஒருவர், தான் பேசுவதை மற்றவர்கள் கேட்கும்படி செய்து விடுகிறார்.

வெற்றிகரமான விமர்சனத்தின் திறவுகோல் அந்த விமர்சனத்தின் போது நீங்கள் வெளிப்படுத்தும் நட்பு உணர்வாகும். அதற்கு முற்றிலும் அந்தரங்கமாக விமர்சனம் செய்ய வேண்டும். விமர்சிப்பதற்கு முன்பாக, அன்பாக அல்லது புகழ்ச்சியாக சில வார்த்தைகளை கூறுங்கள். தனிப்பட்ட முறையில் ஒருவரைத் தாக்குவதாக, புண்படுத்துவதாக உங்கள் விமர்சனம் இருக்கக் கூடாது. ஒருவரது செயலை விமர்சியுங்கள். ஆனால் அந்தச் செயலைச் செய்த மனிதரை விமர்சிக்காதீர்கள். அவருடைய ஒத்துழைப்பை நாடுங்கள், அவரைப் பற்றிய உங்கள் விமர்சனத்தை நட்பாக முடியுங்கள். அதுவே விமர்சிப்பதிலுள்ள வெற்றி.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மே தின அறைகூவல்




இன்றைய முதலாளித்துவ உலகு அறிவுச் சமுதாயம், அறிவுத் தொழிலாளர்கள், அறிவுசார் பொருளாதாரம் என தனது இருப்பை நிலைநிறுத்தி வருகையில் வறுமை, சுரண்டல், இன மதப் பூசல்கள், கொலைகள், மேற்குலகு நோக்கிய புலம்பெயர்தலும் நவீன சுரண்டலும், அமைதியற்ற சூழலும் அதிகரித்து வரும் நிலையில் மே தின வரலாற்றை நினைவுபடுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது.

மே தினம் என்பது போராட்ட தினம். புதுயுகம் படைப்பதற்கான புரட்சி தினம். கூலி உயர்வு கேட்டு அல்ல கூலி அடிமை முறைமையையே ஒழித்துவிட்டு ஒரு சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவதற்காக அறைகூவல் விடுக்கும் தினம்.

125 ஆண்டுகளுக்கு முன்னர் தொழிலாளர்களின் வேலை நேரத்திற்கு வரம்பே கிடையாது. 14 மணித்தியாலங்கள், 18 மணித்தியாலங்கள் எனத் தொழிலாளர்கள் கசக்கிப் பிழியப்பட்டார்கள்.

இதை எதிர்த்து 8 மணி நேர வேலை, 8 மணி நேர பொழுதுபோக்கு, 8 மணி நேர தூக்கம் என்ற கோரிக்கை எழுந்தது. ஐரோப்பா, அமெரிக்க, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் தொழிலாளர்களின் கிளர்ச்சிகள் வெடித்தன.

1886 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் திகதி அமெரிக்காவின் பல நகரங்களில் மூன்று இலட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். சிக்காக்கோ நகரிலும் வேலை நிறுத்தம், பேரணி, பொதுக்கூட்டம் நடந்தன.

பொதுக்கூட்டத்தில் முதல் பேச்சாளர் பத்திரிகையாளர் ஆல்பர்ட் பார்சன்ஸ் மற்றும் பலரும் பேசினார்கள். எழுச்சி பரவியது.

மே மாதம் மூன்றாம் திகதி கதவடைப்புச் செய்யப்பட்டிருந்த மாக்கார் மிக் தொழிற்சாலை முன் தொழிலாளர்கள் கூடி அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

கூட்டத்தினர் மீது பொலிசார் திடீரென்று துப்பாக்கிச்சூடு நடத்தினார்கள். இதில் தொழிலாளர்கள் இரண்டு பேர் கொல்லப்பட்டார்கள். 50 பேர் படுகாயம் அடைந்தார்கள்.

மே மாதம் 4 ஆம் திகதி துப்பாக்கிச்சூட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஹெ மார்க்கெட் சதுக்கத்தில் தொழிலாளர்கள் திரண்டு கூட்டம் நடத்தினார்கள்.

கூட்டம் முடிந்து அனைவரும் கலைந்து சென்ற போது திடீரென்று ஒரு குண்டு வெடித்தது. இதில் பொலிஸ்காரர் ஒருவர் இறந்தார். உடனே பொலிசார் கண்மூடித்தனமாகச் சுட்டுத்தள்ளினார்கள்.

இதில் தொழிலாளர்கள் பலர் இறந்தார்கள். பலர் படுகாயமடைந்தார்கள். இதையடுத்து சிக்காக்கோ நகரத் தொழிலாளர் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள்.

எட்டு தலைவர்கள் மீது கொலைக் குற்றமும் சதிக் குற்றமும் சாட்டப்பட்டது. நீதிமன்ற விசாரணை என்ற நாடகத்திற்குப் பிறகு நான்கு பேர் தூக்கிலிடப்பட்டார்கள். ஒருவர் சிறையிலேயே இறந்துவிட்டார். மூன்று பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

ஆறு ஆண்டுகள் கழித்து இதனைப் பரிசீலித்த ஆளுநர் எட்டுப்பேருமே குற்றமற்றவர்கள் என்று கூறினார். ஆயுள் தண்டனை அனுபவித்துக் கொண்டிருந்தவர்களை விடுதலை செய்தார்.

இதற்கிடையில் சோஷலிஸ்ட் தொழிலாளர்களின் சர்வதேச மாநாடு அதாவது இரண்டாவது அகிலம் பாரிஸ் நகரில் 1889 ஆம் ஆண்டு நடந்தது.

இதில் சார்ல்ஸ் மார்க்ஸின் மகன் எலினோர் மார்க்ஸ், ஜேர்மன் கம்யூனிஸ்ட் தலைவி க்ளாரா ஜெட்கின், ரஸ்ய கம்யூனிஸ்ட் தலைவர் பிளகானவ் போன்ற கம்யூனிஸ்ட் தலைவர்கள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.

"உலகம் முழுவதும் ஒரே நாளில் அதாவது மே மாதம் முதலாம் திகதியன்று தொழிலாளர் தினமாகக் கொண்டாடி இயக்கம் நடத்துவது" என்று இந்த மாநாட்டில் முடிபு செய்யப்பட்டது.

எட்டு மணி நேர வேலை மட்டுமன்றி வேறு பல கோரிக்கைகளையும் இந்த மே நாளில் எழுப்பிப் போராடுவது என்றும் முடிபு செய்யப்பட்டது. இதன்படி 1890 ஆம் ஆண்டு மே முதலாம் நாள் உலக அள வில் முதல் முறையாக மே தினம் கொண்டாடப்பட்டது.

இதைத் தொடர்ந்து மே தின விழா புதுப்புது நாடுகளுக்கும் பரவியது. அதன் தன்மையும் தீவிரமானது. ரஸ்யாவில் மே தினம் புரட்சிக்கான ஒத்திகையாகவே கொண்டாடப்பட்டது.

மே தினங்களில் தொழிலாளர்கள் முதலாளித்து ஆட்சிக்கு எதிராக கிளர்ந்தெழுந்து 1905, 1914 ஆண்டுப் புரட்சிகளுக்கு ஊடாக 1917 ஒக்டோபர் புரட்சி மூலம் தொழிலாளர் ஆட்சியையே மலரச் செய்தார்கள்.

இன்று உலக நாடுகள் எங்கும் மே தினம் ஒரு சடங்கு போலவே கொண்டாடப்படுகின்றது. இவர்கள் மே தினத்தைப் புதைக்கப் பார்க்கிறார்கள் என ஜேர்மன் கம்யூனிஸ்ட் றோசா லக்ஸம்பேர்க் குறிப்பிட்டு அதனை எதிர்த்து போராடினார்.

இலங்கையில் 1893 ஆம் ஆண்டு நடந்த அச்சுத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தைத் அடுத்து தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சி ஆரம்பமானது.

பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காக தொழிலாளர்கள் கொண்டு வரப்பட்டு ஏறத்தாழ நூறு ஆண்டுகளின் பின்னரே அதாவது 1932 ஆம் ஆண்டு அவர்களுக்கான தொழிற் சங்கம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதே மலையகத் தொழிலாளர்கள் இன்றுவரை பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

கடந்த ஆண்டு கொஸ்லாவத்தில் இடம்பெற்ற மண் சரிவில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் மண்ணுக்குள் புதையுண்டார்கள்.

இதற்கும் காரணம் காலனித்துவ காலத்தில் அமைக்கப்பட்ட பலமற்ற வீட்டுத் தொகுதிகளேயாகும்.

வடக்கு, கிழக்கில் யுத்தத்தினால் நிலமிழந்த விவசாயிகள், குடிமக்கள், தங்கள் ஜீவாதார உரிமைக்காக போராடுகின்றார்கள்.

நகரங்களில் பொதிகள் சுமக்கும், தள்ளும் தொழிலாளர்கள் போதிய கூலியைப் பெறுவதில்லை.

நகரப் புடவையகங்களில் வேலை செய்யும் பெண்கள் கூடுதலான நேரம் வேலை செய்தும் குறைந்த ஊதியத்தையே பெறுகிறார்கள்.

நகரப் புறங்களை சுத்தம் செய்யும் தொழிலாளர்களின் நிலைமையும் இவ்வாறே உள்ளது.

பல்கலைக்கழகங்களில் அரசியல்மயமாக்கலினால் ஏற்பட்ட பாதிப்புக்களையிட்டு மாணவர்கள் தொடர் பேரணிகள், ஆர்ப்பாட்டங்களை நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மே தினத்தில் ஜனநாயகம், நல்லாட்சி என்பனவே தொனிப் பொருளாக அமையும். எனவே, இன்றைய மே தினத்தில் மக்கள் யாபேரும் ஒன்றிணைந்து சுரண்டல், சூறையாடல், இனவாதம் என்பனவற்றுக்கு எதிராக குரல் எழுப்பி ஜனநாயகம், நல்லாட்சி, தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் என்பவற்றை வலுப்படுத்தும் அரசியல் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

பி.முத்துலிங்கம்
ஓய்வு நிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# "நிரந்தர காணியும் சுதந்திர வாழ்வும் எமக்கு வேண்டும்"

விக்ஸ்காட்டு மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்



வவுனியா, பாரதிபுரம், விக்ஸ்காட்டுப் பகுதியில் குடியிருக்கும் மக்கள் தாம் குடியிருக்கும் நிலத்திற்கான காணி உறுதியை வழங்குமாறு வவுனியா மாவட்ட செயலகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பிரதேச செயலகம் முன்பு நேற்றுக்காலை ஒன்றுகூடிய அப்பகுதி மக்கள் தமக்கான காணி உரிமைகளை வழங்குமாறு கோரி பதாகைகளை ஏந்தியவாறு ஊர்வலமாக சென்று மாவட்ட செயலகம்முன் பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் "விக்ஸ்காட்டு மக்களின் பிரச்சினையில் அரசாங்கம் கண்மூடி இருப்பது ஏன், நிரந்தர காணியும் சுதந்திர வாழ்வும் எமக்கு வேண்டும், புதிய அரசாங்கம் எமக்கு புனர்வாழ்வைத்தா, விக்ஸ்காட்டு மக்களின் அவல நிலையை தீருங்கள், காலம் முழுக்க காட்டு வாசி வாழ்க்கைதானா" என எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்தியிருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் அப்பகுதி மக்களுடன் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும் கலந்து கொண்டார்.

இதேவேளை தமக்கு காணி உறுதி வழங்கக்கோரியும் அங்குள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் மக்களால் அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (2-250)

# வகுப்பு-1ஏபி, 1சி ஐச் சேர்ந்த தரப்பாடசாலைகளில் அதிபர்களுக்கான வெற்றிடங்கள்

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் கீழுள்ள பாடசாலைகளில் 1AB,1C ஆகிய தரப்பாடசாலைகளில் நிலவுகின்ற அதிபர் வெற்றிடங்களுக்கு வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளரினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் ஐந்து 1 AB தரப் பாடசாலைகளுக்கும் மூன்று 1C தரப் பாடசாலைகளுக்கும் தகுதியான இலங்கை அதிபர் சேவை வகுப்பு -1 ஐச் சேர்ந்தவர்களிமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள 1 AB தரப் பாடசாலைகளான மு/மாங்குளம் மகாவித்தியாலயம்,மு/யோகபுரம் மகாவித்தியாலயம் மு/பாண்டியன் குளம் மகாவித்தியாலயம்,மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், மு/முத்தையன் கட்டு வலதுகரை மகாவித்தியாலயம் ஆகிய ஐந்து பாடசாலைகளுக்கும் 1C தரப் பாடசாலைகளான மு/பாலிநகர் மகாவித்தியாலயம்,மு/ஐயங்கன் குளம் அ.த.க. பாடசாலை, மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளுக்குமாக மொத்தம் எட்டுப் பாடசாலைகளுக்கு வடக்கு மாகாணத்தில் கடமையாற்றுகின்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது மூன்று வருட காலமேனும் சேவையாற்றக் கூடிய வயதை உடையவராக இருத்தல் வேண்டும். இலங்கை அதிபர் சேவையை சேர்ந்த விண்ணப்பதாரி தற்போது கடமையாற்றும் பாடசாலையில் மூன்று வருட கால சேவையை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.இதன் பிரகாரம் பொருத்தமான அதிபர் தரத்தை உடைய பாடசாலையை சேவை நிலையமாகக் கொண்டிருந்தவருக்கு இது பொருத்தமற்றது. உதாரணமாக இ.அ.சேவை - 1ஐச் சேர்ந்த ஒருவர் தரம் -II-III பாடசாலையில் கடமையாற்றிக் கொண்டிருப்பின் அவர் விண்ணப்பிக்க முடியும்.

பிரதியதிபராக, பகுதித் தலைவராக பொறுப்புக்கள் வழங்கப்படாதுள்ள இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கு இது பொருத்தமற்றது.

இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளால் குறித்த வலயப் பாடசாலைகளில் கடமையாற்றுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பதாரிகள் தாங்கள் விரும்பிய ஒழுங்கு முறைக்கு அமைய ஆகக் கூடியது மூன்று பாடசாலைகளுக்கு மட்டும் விண்ணப்பிக்கமுடியும்.

ஏழு வருடங்களுக்கு மேலாக ஒரே பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றுபவர்கள் கடமை நிறைவேற்றும் அதிபராக கடமையாற்றிய சேவைக்காலம் உட்பட கட்டாயம் விண்ணப்பிக்க வேண்டும்.

மேற்படி தகுதி உடைய விண்ணப்பதாரிகள் துணுக்காய் கல்வி வலயத்தில் விண்ணப்படிவத்தை பெற்று பூர்த்தி செய்து வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சுடன் எதிர்வரும் 20 ஆம் திகதி புதன் கிழமைக்கு முன்பாக செயலாளர், கல்வி அமைச்சு,வடக்கு மாகாணம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக தகவல் தேவைப்படுவோர் துணுக்காய் வலயக்கல்வி அலுவகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)




# வவு.நலன்புரி நிலையங்களில் வாழ்கின்ற மக்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது

(குருமன்காடு)

மீள்குடியேற்ற அமைச்சின் அதிகாரிகளுக்கும் அரச அதிபருக்கும் இடையில் நடைபெற்றது



வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களான சிதம்பரபுரம், பூந்தோட்டம் ஆகிய நலன்புரி முகாம்கள் தொடர்பில் வவுனியா அரசாங்க அதிபர் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் அதிகாரிகளுக்குமிடையிலான கலந்துரையாடல் நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இயங்கி வரும் இந்த இரு நலன்புரி நிலையங்களில் தற்போது சுமார் 320 குடும்பங்களுக்கும் மேல் வசித்து வருகின்றன.

இந் நிலையில் பூந்தோட்டம் நலன்புரி நிலைய மக்கள் தம்மை தகுந்த இடத்தில் குடியேற்றுமாறும் சிதம்பரபுரம் மக்கள் தம்மை நலன்புரி நிலையம் அமைந்துள்ள காணியிலேயே குடியேற்றுமாறும் கோரி அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

எனினும் நீண்டகாலமாக இப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காத நிலையில் மக்கள் பல போராட்டங்களில் ஈடுபட்டிருந்தனர்.

இந் நிலையில் நேற்று மீள்குடியேற்ற அமைச்சின் அதிகாரிகள் மற்றும் வவுனியாஅரசாங்க அதிபர் உட்பட பிரதேச செயலாளர்கள் மற்றும் அரச அரசசார்பற்ற நிறுவன அதிகாரிகளுக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மக்களின் குடியேற்றம் தொடர்பாகவும் அவர்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

இதன்போது மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் திருமதி ரஞ்சினி, மீள்குடியேற்ற அதிகாரசபையின் பணிப்பாளர் கே. கணேஸ், மீள்குடியேற்ற அமைச்சின் மேலதிக செயலாளர் நயுமுதின்,வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலளார் திருவாகரன் உட்பட வவுனியா பிரதேச செயலாளர்களான க. பரந்தாமன், கா. உதயராசா, என். கமலநாதன் மற்றும் திட்டப்பணிப்பாளர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.(2-250)

## மனைப்பொருளியல் பட்டதாரிகள் மகஜர் கையளிப்பு

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மனைப்பொருளியல் பட்டதாரிகள் 14பேர், தங்களுக்கான ஆசிரியர் நியமனத்தை வழங்கக் கோரி வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் மகஜரொன்றைக் கையளித்தனர்.

வடக்குமாகாண சபையின் மாதாந்த அமர்வு கைதடியில் அமைந்துள்ள வடக்குமாகாண சபையில நேற்று நடை பெறுகையில், அங்கு வருகை தந்த முதலமைச்சரிடமே இவர்கள் தங்களது கோரிக்கை அடங்கிய மகஜரை கையளித்தனர்.

கலைப்பீடத்தில் மனைப் பொருளியலை சிறப்புப் பாடமாகக் கற்று, கடந்த 2012ஆம் ஆண்டு வெளியேறியவர்களே இவ்வாறு மகஜர் கையளித்தனர். (2)

# வேகத் தடைகளை அகற்றி சீரான போக்குவரத்திற்கு உதவுங்கள்

## சாரதிகள் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன் சந்தியிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக வீதிக்கு குறுக்காக அமைக்கப்பட்டுள்ள மூன்று வேகத் தடைகளினால் வாகனங்களில் பயணிப்போர், பொதுமக்கள் ஆகியோர் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

இதன் பிரகாரம் முறிகண்டி-வன்னேரி,ஸ்கந்தபுரம்-கோட்டைகட்டியகுளம் ஆகிய வீதிகளை இணைக்கும் அக்கராயன் சந்தியிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக மட்டும் ஒன்றரை அடி உயரத்தில் இரு மண்மேடுகளைக் கொண்ட வேகத் தடைகளும் ஒற்றை அடி ஆழத்தினாலான வாய்க்காலொன்று வீதிக்கு குறுக்காக வெட்டப்பட்டுள்ளது.

இந்த மூன்று வேகத்தடைகள் ஒவ்வொன்றும் 200 மீற்றருக்கு இடைப்பட்ட தூரத்தைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இவ்வேகத் தடைகளை அகற்றி சீரான போக்குவரத்திற்கு உதவுமாறு பொதுமக்கள்,சாரதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-270)

# குறைந்த கட்டணத்தில் பருவகாலச்சீட்டு வழங்கல்

கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் பாடசாலை மாணவர்களுக்கும் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனத்திற்கும் குறைந்த கட்டணத்தில் பருவகாலச்சீட்டு வழங்கும் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளதாக பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்ற பொது மக்கள், மாண வர்கள் ஆகியோர் இல.03 உதயநகர் கிழக்கு, கிளிநொச்சியில் அமைந்துள்ள பணிமனையுடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற முடியுமென அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவர்கள் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் வருமாறு. யுத்தம் நிறைவடைந்து ஐந்து வருடகாலமாக பாதைகள் சீரற்ற போதுகூட பயணிகளிற்கான அனைத்து இடங்களிற்கும்போக்குவரத்துசேவையினை இன்றுவரை செய்து வருவதுடன் கடந்த வருடங்களில் ஒருவருடகாலமாக அரச அதிபரின் வேண்டுதலிற்கிணங்க விசுவமடுவில் இருந்து இரணைமடு வரை பாடசாலைபணிகளிற்கென இலவசமாக எமது இரண்டு பேருந்துகள் பணியமர்த்தியமையும் குறிப்பிடத்தக்கது. பாடசாலை மாணவர்களிற்கு தற்போதும் (சீசன்) பருவகாலச்சீட்டினை அறிமுகம் செய்து குறைந்த கட்டணத்தில் வழங்கி வருகின்றோம்.

நாம் அனைத்து இடங்களிற்கு மான போக்குவரத்து சேவையினை நடத்துவதுடன் அக்காலத்திலேயே எமது மாவட்ட அரசாங்க அதிபரின் கருத்திற்கமைய பாடசாலைமாணவர் களிற்கு குறைந்த கட்டணத்தில் பரு வகால சீட்டு வழங்கியும் அரச சார் பற்ற நிறுவனத்திற்கும் இப்பருவ கால சீட்டினை குறைந்த கட்டணத் தில் வழங்கி வருகின்றோம். தொடர்ந்தும் பொது மக்களிற் கான போக்குவரத்து சேவையினை நடத்தவுள்ளதுடன் பாடசாலை மாணவர்களிற்கும் அரசசார்பற்றநிறுவனத்திற்கும் குறைந்த கட்டணத்தில் பருவ கால சீட்டு வழங்கும் நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சரத் வீரசேகரவிற்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை



19ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிராக வாக்களித்த நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது. 19ஆம் திருத்தச் சட்டத் திற்கு ஆதரவாக வாக்களிப்பது என ஐக்கிய மக்கள் சுதந்தரக் கூட்டமைப்பு தீர்மானித்திருந்தது.

எனினும் கட்சியின் விதிகளுக்கு புறம்பான வகையில் திருத்தச் சட்டம் குறித்த இரண்டாம் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின் போது எதிராக வாக்களித்திருந்தார்.

இந்நிலையில் சரத் வீரசேகர விற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார். (இ-5)

# மைத்திரி-மகிந்த சந்திப்பு இம்மாதம் இடம்பெறும்!

**(கொழும்பு) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இடையில் சந்திப்பு இடம்பெறாமைக்கு காரணம் குறித்த தினத்தில், மகிந்த ராஜபக்ஷவால் கலந்து கொள்ள முடியாமல் போனமையே என பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை இருவருக்கும் இடையிலான சந்திப்பை இம்மாதம் வேறு தினத்தில் நடத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இணக்கம் தெரிவித்துள்ளார் எனவும் அவர் தெரிவித்தார்.

சுதந்திர கட்சியின் உறுபபினர்கள், ஜனாதிபதிக்கு ஆதரவாகவும், முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு ஆதரவாகவும் இரண்டு குழுக்களாக பிளவுபட்டு இருப்பது குறித்து கடந்த சில நாட்களாக அதிகமாக பேசப்பட்டதனை தொடர்ந்தே இவ்விருவருக்கும் இடையில் சந்திப்பு நடத்துவதற்கு ஆயத்தப்படுத்தப்பட்டது.

எனினும் குறித்த சந்திப்பானது இடம் பெறவில்லை. எனவே மீண்டும் இவ்விருவருக்கு இடையில் சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாக குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

இதேவேளை நிதி மோசடி தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள மத்திய வங்கி ஆளுநரை நீக்குமாறு சபாநாயகரிடம் நேற்று முன்தினம் மனுவொன்றை தாக்கல் செய்துள்ள தாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# 19இற்கு பின்னால் சூழ்ச்சி அதனால்தான் எதிர்த்தேன்

## சரத் வீரசேகர விளக்கம்

19ஆவது திருத்தம் சூழ்ச்சியின் மத்தியில் கொண்டு வரப்படுவதாக எண்ணியதன் காரணமாகவே அதனை தாம் எதிர்த்ததாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.


வீரசேகர மாத்திரமே பாராளுமன்றில் இடம்பெற்ற 19ஆவது திருத்த சட்டமூல இரண்டாம் மூன் றாம் வாசிப்புக்களின்போது எதிராக வாக்களித்தார்.

நாட்டை முன்னிலைப்படுத்தியே தாம் எதிராக வாக்களித்தாக அவர் குறிப்பிட்டுள்ளார். வீரசேகர முன்னாள் இராணுவ அதிகாரியாவார்.

இந்த நிலையில் வீரசேகர மீது ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-5)

# தமிழக மீனவர்களை குற்றவாளிகளாக கடலோரக் காவற்படையினர் சித்திரிப்பு

## திருமாவளவன் கண்டனம்



(டில்லி)

தமிழக மீனவர்களைக் குற்றவாளிகள்போல் இந்திய கடலோரக் காவற்படை சித்திரித்துள்ளதற்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை,

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தொடர்ந்து தாக்கப்படுவது தொடர்பாக உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த வழக்கில் இந்திய கடலோரக் காவற்படை சார்பில் பதில் மனு தாக்கல் செய்துள்ளனர்.

அதில், தமிழக மீனவர்கள் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகள் எனச் சித்திரித்துள்ளனர்.

தமிழக மீனவர்கள் தங்கம், போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது, இலங்கை அரசின் குற்றச்சாட்டை விடக் கடுமையானதாகும்.

இந்தத் தமிழர் விரோதச் செயலை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

மீனவர்களுக்கு எதிரான கடலோரக் காவற்படையின் பதில் மனுவை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-5)

# நாமலின் மெய்ப்பாதுகாவலரிடம் கைத்துப்பாக்கியே இருந்தது

## பொலிஸார் உறுதி

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் மெய்ப்பாதுகாவலரிடம் இருந்தது கைத்துப்பாக்கியே என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் அம்பாந்தோட்டை ஹங்குனு கொலபெலஸ்ஸவில் நடைபெற்ற கூட்டமொன்றின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் கைத்துப்பாக்கியுடன் கூட்டம் நடைபெற்ற பிரதேசத்தில் பிரவேசித்த நாமல்ராஜபக்ஷவின்மெய்ப்பாதுகாவலர் மீது குற்றம் சுமத்தப்பட் டுள்ளது.


எனினும், தமது மெய்ப்பாதுகாவலரிடம் தண்ணீர் போத்தல் ஒன்று மட்டுமே இருந்தது எனவும் கைத்துப்பாக்கி எதனையும் எடுத்துச் செல்லவில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இராணுவ கோப்ரலான குறித்த மெய்ப்பாதுகாவலரிடம் கைத்துப்பாக்கி இருந்தமை இதுவரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இராணுவ உத்தியோகத்தர் ஒருவர் நாமல் ராஜபக்ஷவின் பாதுகாப்பிற்காக யார் நியமித்தார்கள் எனபது குறித்தும் விசாரணை நடத்தப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (இ-5)

# மீனவர்களை சுடவேண்டாம்

## வி.கே.சிங்.கோரிக்கை



(டில்லி)

இலங்கை கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழையும் போது அவர்கள் மீது துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொள்ளக்கூடாது என்று இந்தியா இலங்கை கடற்படையினரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த இந்திய பிரதி வெளியுறவு அமைச்சர் வி.கே. சிங் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

ஏற்கனவே இந்திய மீனவர்களைத் தாக்கிய 6 சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்தநிலையில் இந்திய மனவர்களை மனிதாபிமான முறையில் பார்க்குமாறு அமைச்சர் கோரினார்.

இலங்கை கடற்படையினரால் கடந்த வருடத்தில் 964 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை 303 இந்திய மீனவர்கள் பாகிஸ்தான் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி சண்முகம் இரத்தினம்மா

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சண்முகம் இரத்தினம்மா நேற்று முன்தினம் புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் அளவெட்டி தெற்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



### திருமதி நடராஜா பொன்னம்மா

கரம்பொன் மேற்கைப் பிறப்பிடமாகக் கொழும்பு கொட்டாஞ்சேனையை வதிவிடமாகவும் கொண்டநடராஜா பொன்னம்மா நேற்று முன்தினம் புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அன்று கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### கந்தையா கந்தவேள்

(முன்னாள் வீதி அபிவிருத்தி திணைக்கள கணக்காளரும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்)

செங்குந்தர் வீதி,கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் கந்தசவாமி கோவில் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கந்தவேள் கடந்த 28ஆம் திகதி அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று மதியம் 12 மணியளவில் செங்குந்தர் வீதி,கரவெட்டி கிழக்கில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வீரக்களி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...காம்பிகை அம்மன் பெருங்கோவில் ...் - 2015 (02.05.2015 சனிக்கிழமை)




...கொடை...த்து குடும்பத்தோடு பூசித்து மனநிறைவு காண்பர்.

வா... பொய்த்தாலும் வானம் முரண்பட்டாலும் கிளிநொச்சியை நெற்களஞ்சி...மாக்கும் அம்மனின் தீர்த்த நீரில் அருட்கருணையை எண்ணி அம்மனின் பணி ...துவானாலும் ஆண் பெண் பாராமல், சிறியவர் முதியவர் பாராமல், உயர்வு தாழ்வு ...ாட்டாமல், ஊர் வேறுபாடு இல்லாமல் செய்யும் பணிகள் அளப்பல. ஆண்டுதோறும் ...ளர்ச்சி, ஆண்டுக்கு ஆண்டு உயர்வு, ஆண்டுதோறும் நாளாந்த நிகழ்வு. இது ...க்களைத் தாமும் வாழ்ந்து அயலவர்களையும் வாழவைக்கும் நிகழ்வு ...பாற்றுதற்குரியது. முன்னர் அரிசியும் பிற படையல்களும் வழங்கிய இம்மக்கள் ...ன்று குடிநீர்த்திட்டம், கிணற்று உவர்நீரை நன்னீராக்கும் திட்டம் என உயர்வான ...ர்வளம் கொடுத்து மகிழ்கின்றனர். இத்தகைய மக்களை புடம்போட்டு புகழ்பெற வாழ ...வைத்தமையால் யோகர்சுவாமிகள் மக்கள் மனதைவிட்டு அகலாதவர். அவர் ...ன்னின்று அமைத்துத் தந்த மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புடைய அம்மன் மக்கள் ...ாழ்வியலை வளம்படுத்துபவர். கடந்த 51 ஆண்டுகளில் நான்கு திருக்குடமுழுக்குக் ...ண்ட பெருமாட்டி வன்னிப் பெரு நிலப்பரப்பில் 3 அழகிய சித்திரத்தேர்களில் ...மைந்தர்கள் முன்னே வர அம்மன் பின் அசைந்துவரும் காட்சி அழகொளிக்கும் மாட்சி ...ாளாந்தம் வழிபடுவோரின் துயர்துடைக்கும் சீமாட்டி நைந்த நொந்த அடியார்களுக்கு ...ருள்பொழியும் அமுதவல்லி கனகாம்பிகையின் திருத்தேர் வடம்பிடித்து ...றையுலகில் இடம்பிடிக்க வாரீர்!

நா.சோதிநாதன் ,தர்மகர்த்தா

### அறங்காவலர் சபையின் தலைவர் உள்ளத்திலிருந்து...

கனிந்தே உனது திருவடித்தாமரைகாதலித்து புனைந்து ஏற்றுபவர்
அ...து செய்யினும் நினைத்தார் அளிப்பதுகண்டு கொண்டேன்
தினம் தோறும் கடைக்கண்ணால் அருள் செய் கனகாம்பிகையே
மனமுருகிதினம் தொழுவோர் துயர் துடைக்கும்
தூயமனத்தாளேமனம்கொண்டுசித்திரத்தேர்புத்திரோடுஉறிவலம்வந்து
கடைக்கண்ணால் அருள் செய்து காத்தருள்வாய் இவ்வுலகை
தாயே தலை சாய்த்து வடம்பிடிப்போம் இறையுலகில் இடம்பிடிக்க

எஸ்.என். செல்வராசா
தலைவர், அறங்காவலர் சபை,
கனகாம்பிகை அம்மன் பெருங்கோயில், இரணைமடு.

### அருள்மிகு இரணைமடு கனகாம்பிகை அம்பாள் ஆலய இரதோற்சவ ஆசியுரை




வரலாற்று புகழ்வாய்ந்ததும் தவத்திரு யோகர் சுவாமி அவர்களால் வழிபாடு இயற்றப்பட்டதுமான இரணைமடு அருள்மிகு கனகாம்பிகை அம்பாள் இன்று தேரேறிவந்து அடியார்களுக்கு அருள்பாலிக் க வுள்ளமையறிந்து மிகவும் மகிழ்வடைகின்றோம்.

தேர்த்திருவிழாவானது ஆணவ மலமழித்தலை சாஸ்திரங்கள் சுட்டி நிற்கின்றன. ஆன்மாக்க ளின் மீதுள்ள பேரன்பு காரணமாக அம்பாள் தேரேறி வந்து அடியார்களின் அஞ்ஞான இருளை அகற்றி அனைவருக்கும் அருள்புரிந்து அனைவரையும் சம்சார சாகரத்திலிருந்து மீட்டெடுத்து பேரின்பத்துடன் வாழ வழங்குகின்றாள்.

மகா தேவ ஆச்சிரமம், ஜெயந்தி நகர், கிளிநொச்சி.

### கனகாம்பிகை அம்மன் தேர்த்திருவிழாவிற்கான சிறப்பு வாழ்த்துரை



நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே சிறந்து விளங்கும் பச்சைக் கம்பளங்கள் விரித்தாற்போன்று பச்சைப் பசேலென காட்சியளிக்கும் அழகிய நெற்களனிகளால் சூழப்பெற்ற மருதநிலச் சோலைகள் வளம் கொழிக்கும் இயற்கை எழில் கொஞ்சும் கிளிநொச்சி மாநகரினிலே இரணைமடு நீர்த்தடாகத் தின் அருகே மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் தன்னகத்தே கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கும் கனகாம்பிகை அம்பாளின் சித்திரத்தேர் நாளை 02.05.2015 ஆம் திகதி நடைபெறவிருப்பதால் அதற்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த மாதம் கிளிநொச்சிப் பதியினிலே ஊர் உலா வந்து கொண்டிருந்த கனகாம்பிகை அம்பாள் எமது புதிய மாவட்டச் செயலகத்திற்கும் எழுந்தருளியிருந்தார். அம்பாளைப் பூரண கும்பம் வைத்து வரவேற்று அர்ச்சித்து வணங்கி அடியேனும் செயல் ஊழியர்களும் அம்பாளின் அருட்கடாட்சத்தினை பெற்றுக்கொண்டதையிட்டு பேருவகை அடைகின்றேன்.

ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளைப் புவியடங்கக்
காத்தாளை அங்குச பாசாங்குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே

பக்தர்களுக்கெல்லாம் அஞ்ஞானத்தினைப் போக்கி மெய்ஞ்ஞானத்தினை வழங்கவேண்டும் எனவும் அவர்கள் சகல சௌபாக்கியங்களையும் பெற்று வாழவேண்டும் எனவும் மனமார வாழ்த்துகின்றேன்.

சுந்தரம் அருமைநாயகம் அரசாங்க அதிபர், மாவட்டச் செயலாளர், கிளிநொச்சி மாவட்டம்

### வாழ்த்துச் செய்தி



கிளிநொச்சி இரணைமடு குளத்தினால் வளங்கொழிக்கும் பிரதேசம். இப்பிரதேச பெரும்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தில் இரணைமடு குளம் முக்கிய பங்கு வகிக்கின்றது. கிளிநொச்சியின் நீர்த்தாயாக விளங்குபவள் இரணைமடு குளம். அந்த நீர்த்தாய்க்கு தாயாக விளங்குகின்றாள் குளக்கரையில் வீற்றிருக்கும் கனகாம்பிகை அம்பாள். தாய்த்தெய்வ வழிபாட்டு முறை என்பது வன்னிப் பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற வழிபாட்டு முறையாகும். அம்மனுடைய பல்வேறு வடிவங்களை இப்பிரதேச மக்கள் இன்றும் வழிபட்டு வருகின்றனர். அகிலத்தை அசைவிக்கும் ஆதி சக்தி அம்பாள் அத்தகைய அம்பாள் இரணைமடு குளத்தின் அருகில் இருந்து குளத்தினையும் எம்மையும் காத்து வருகின்றாள். அம்பாளினுடைய திருவிழாவினை ஒட்டி ஆலய நிர்வாகத்தினரால் வெளியிடப்பட இருக்கின்ற மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அம்பாளின் மகனாக அடியவனாக பெருமையடைகின்றேன். அன்னையின் அருளாட்சி வேண்டி அவளின் பாதாரவிந்தங்களில் நாமும் ஒரு மலராவோம்.

திரு.கோ.நாகேஸ்வரன், பிரதேச செயலர், பிரதேச செயலகம், கரைச்சி.

### கிராம அலுவலரின் வாழ்த்துரை



இலங்கைத் திருநாட்டிலுள்ள கிளிநொச்சி மாவட்டத்தின் அம்பாள்நகர் கிராமத்தில் பெருங்கோயில் கொண்டு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ கனகாம்பிகை அம்மன் ஆலய வருடாந்த தேர்த்திரு விழா இவ்வருடம் 02.05.2015 அன்று நடைபெறவுள்ளமை பெருமகிழ்வடையச் செய்கின்றது.

இவ்வுலக ஜீவராசிகளை உலக நியதிகளுக்கமைய பரிபாலிப்பதற்காக இறைவன் ஐந்தொழில்களை மேற்கொள்கின்றான். அவை படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாகும். அந்த வகையில் விநாயகர், அம்பாள், முருகன் ஆகிய மூர்த்திகள் செவ்வாடை தரித்து முத்தேரேறி அழித்தல் தொழிலை மேற்கொள்வதற்காக வலம் வரும் காட்சி பக்தர்களை மெய் சிலிர்க்கச் செய்கின்றது.

முதல் வணக்கத்திற்குரிய கடவுளான விநாயகர் முன்னே செல்ல தொடர்ந்து அகில உலகங்களுக்கும் அதிபதியான ஆதி சக்தியின் அம்சமான சர்வேஸ்வரி பின் தொடர இறுதியாக கந்தன் வலம் வரும் காட்சி அடியவர்களை பக்தி வெள்ளத்தில் மூழ்கச் செய்கிறது. மூன்று மூர்த்திகளும் வலம் வந்து தீய சக்திகளை அழித்து ஈற்றில் பச்சை சாத்தி சாந்த சொரூபமாக மாறும் பாவனையில் இவ்விழா நடைபெறுகின்றது.

இவ்வருடமும் தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெற வேண்டுமென்றும் இவ்வாலயம் அம்பாளின் கிருபையால் மேன்மேலும் வளர்ந்து இக்கிராமத்திற்கு பெருமை சேர்க்க வேண்டுமென்று அம்பிகையின் துணைகொண்டு வாழ்த்துகின்றேன்.

சி.மயூரன், கிராம அலுவலர், அம்பாள் நகர்.

### அவள் அருளாலே அவள்தாள் வணங்குவோம்...



இரணைமடு கனகாம்பிகை அம்பாள் ஆலயத்தின் தேர்த்திருவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதற்காக கிடைத்த அம்பிகையின் அருளை எண்ணி மகிழ்கின்றேன், சந்தர்ப்பம் தந்த ஆலய பரிபாலன சபையினருக்கு இவ்வேளையில் எனது நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இரணைமடுப் பதியினிலே கனகாம்பிகை நாயகியாய், கருணை மலர்தேனமுதாய், அற்புதங்கள் தனை நிகழ்த்தும் ஆனந்த பைரவியாய், வற்றாத ஒளி விளக்காய், வானவனின் குல விளக்காயிருந்து அருள்பாலிக்கும் அன்னையவள், இன்று பொற்தேரில் ஏறிவரும் காட்சியை காண கண்கோடி போதாது என்றால் மிகையாகாது. அத்தனை அழகும் சிறப்பும் அருளும் மிக்க அன்னையின் தேர்த்திருவிழா சிறப்பான முறையில் நடந்தேற அவள் திருப்பாதங்கள் பணிந்து வேண்டுகின்றேன்.

தேடிவரும் அடியவர்களுக்கு நாடி வரம் அருளவென தேரேறிவரும் அம்பிகை, சொல்லொணாத் துயரங்களைச் சுமந்த எமது கிளிநொச்சி மக்களுக்கு சாந்தியையும் சமாதானத்தையும் வழங்கி அவர்கள் சுபீட்சமான வாழ்வை நிறைவாய்ப்பெற்றிட அருள்பாலிக்க வேண்டு மென்று அவள்பாதம் பணிந்து மீண்டும் அம்பாளது தேர்த் திருவிழா சிறப்புற அமைய வாழ்த்தி அமைகின் றேன்

என்றும் ஓங்குக அன்னையின் அருள்

எந்திரி என்.சுதாகரன்
பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், கிளிநொச்சி பிராந்தியம்.

நாதன்'ஸ்
ஆயுர்வேத மருந்துக்கடை
ஆயுர்வேத மருந்துச் சரக்குகளும் சகல விதமான கிரியைப் பொருட்களும் பெற்றுக் கொள்ளலாம்.
டிப்போ சந்தி ,
அருகாமை,
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி.
T.P.No.
0770666024

வேழன் பதிப்பகம்
கனகபுரம்,கிளிநொச்சி.
தொ.பே.இல.
021 228 5579,
077 271 8640
velanpathippagam@gmail.com

KUMARAN HARDWARE & MOTOR STORES
அரிசி ஆலைக்குரிய இயந்திர வகைகள், உதிரிப்பாகங்கள், சகல விதமான வாகனங்களுக்குரிய உதிரிப்பாகங்களை பெற நாடுங்கள்.
Karadipokku, Jaffna Road,
Kilinochchi.
T.P. 077 2474128,07781 71 200

...ன் பட்டு மாளிகை
...RI KUMARAN
...extiles, Specialists in Bridal and ...adymade Garments and Cosmetics
...y Temple, A9 Street, KILINOCHCHI.
...212283618, 0777278300

கிளிநொச்சி ரான்ஸ்போட்
ரான்ஸ்போட் ஏஜென்ட்
கொழும்பு
கிளிநொச்சி

Elil Studio& Colour Lab
Printing வீடியோ, Photo Album மற்றும்
எழில் ஸ்ருடியோ
A9 Road Kilinochchi
PHONE- 077 240 51 65
021 228 56 21
Email- elilstudio1999@gmail.com

Photo Graphers
Video Graphers
KSR PHOTOS
READY MADE PHOTO FRAMES
READY MADE BOX FRAMES
ALBUM MAKERS
No. 05, Kanagapuram Road,
Kilinochchi.

அகி ஐஸ் கிறீம்
திருமண விழா , பிறந்தநாள் விழா,
நீராட்டுவிழாக்களுக்கு வீடு தேடி உடன் சேவை.
...இல., உதயநகர் மேற்கு,
கனகபுரம் தெரு,கிளிநொச்சி.
021 7917585,
077 0232328

S. K. Karan
Director
0777 44 28 46
HOTEL SELLA Rest
A/C, Non-A/C Rooms Conference Hall & Bar
No. 46 Uthayanagar West,
Kanagapuram Road, Kilinochchi
Fax: 021 228 56 13
E-mail: hotelsella@yahoo.com
we accept

அதி நவீன தொழில்நுட்பத்துடன்
அச்சக வேலைகள்
கிளிநொச்சி நகரில்...
Maxico
மக்சிக்கோ
All Kind of Printing Work
Kachchery opersit, A9 Road, Kilinochchi
Phone: 0768397472
Fax : 0214545043
E.mail: maxico5608@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசு கடிவாளத்தை சட்டப்படி தம்வசம் வைத்திருக்கின்றது

## வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

(பாலிநகர்)

**எமக்குத் தேவையான பணம்,ஆளணி ஒரு தொகை என்றால் குறைந்த தொகையே அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றது.இப்போதும் மத்தியே எம்மை வழிநடத்தி வருகின்றது.நாங்கள் சேர்ந்தே செய்வோம், வாருங்கள் என்று கூறிவிட்டு கடிவாளத்தைச் சட்டப் படி தம்வசமே வைத்திருக்கின்றது.ஆகவே அரசியல் தீர்வொன்றை வெகுவிரைவில் கொண்டுவர வேண் டும். எமக்கான அதிகாரங்கள் திடமாக ஆவணப் படு த்தப்பட வேண்டும் என வடக்கு மாகாண முதல மைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

பாண்டியன் குளம் மாந்தை கிழக்கு பிரதேச சபையின் பாலிநகர் கடைத் தொகுதிகள் திறப்பு விழா நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக கலந்து கொண்டு உரை யாற்றிய போதே அவர் மேற்க ண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்று கையில், உங்களைப் பொறுத்த வரையில் பலவித சிரமங்களை நீங்கள் எதிர்நோக்கி வருவது எம க்குப் புரிகின்றது. விரைவில் ஒரு நடமாடும் சேவையினைத் துணுக் காய், மாந்தை கிழக்கு போன்ற இடங்களை உள்ளடக்கி நடத்தத் திட்டமிட்டுள்ளோம். அப்போது உங்கள் பல சிரமங்களை, தேவை களை உடனுக்குடனேயே தீர்த்துக் கொள்ள முடியும் என்று நம்புகின றேன்.

இன்றைய கால கட்டத்தில் எமது வளங்களை, எமக்கிருக்கும் அனுசரணைகளை, எமது மக்க ளின் வாக்காளர் தொகையினை எமது வடமாகாணம் சம்பந்தமாகப் பொதுவாக அறிந்து கொள்ள வேண் டியது அவசியமாகியுள்ளது. பல வெளிநாட்டுத் தாபனங்கள், நிறு வனங்கள், நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்கள் எமக்கு பண உதவி இப்பொழுது கூட பெருவாரியாகத் தந்து கொண்டிருக்கின்றன. ஆனால எவருக்கும் இவை பற்றித் தெரிவதி ல்லை. உதாரணத்திற்கு கனடா வில் இருந்து வந்த ஒருவர் நேற்றுக் கூறினார் சுமார் 5 இலட்சம் டொலர கள் வன்னியில் ஒவ்வொரு வருட மும் 2010ஆம் ஆண்டு தொடக்கம் தம்மால் செலவழிக்கப்பட்டு வருகி ன்றது என்று. இவை பற்றி எங்க ளுககுத் தெரிவதில்லை.இந்த நிலை மாற வேண்டும். தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் அல்லது ஒவ் வொரு நிறுவனத்திற்கும் பணம் அனுப்புவது பற்றியும் அவர் கள் என்னென்ன நன்மைகளை எங் கள் மக்களுக்குச் செய்கின்றார்கள் என்பது பற்றியும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். எனவே கனடா வில் இருந்து அனுப்பப்பட்ட உதவி கள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்புமாறு கேட்டுக் கொண் டேன். அவர் ஒத்துக் கொண்டார். இவ்வாறு தெரிந்து கொள்வதால் ஒரே செயற்றிட்டத்தை இருவேறு நிறுவனத்தினர் ஒரே இடத்தில் செய்ய விளைவதைத் தடுக்கலாம். அத்துடன் நடைபெறும் நன்மை கள் பற்றிய ஒரு கண்காணிப்பை நாங்கள் உண்டு பண்ணலாம். இவற்றில் வெளிப்படைத்தன்மை இருப்பது மிகவும் முக்கியம்.

இன்று எமது வடமாகாணத் தேவைகளைச் சரியாகவும் முறை யாகவும் கணித்து வெளியிட வேண் டிய ஒரு கடப்பாடு எமக்குள்ளது. ஆனால் அவ்வாறு கணிக்கக் கூடிய வசதிகள் எமக்கில்லை. எனவே தான் நாங்கள் பலரிடம் இருந்தும் இதற்கான உதவிகளை எதிர்பார் க்க வேண்டியுள்ளது. ஐக்கிய நாடு கள் ஸ்தாபனத்திடமும் இது சம்பந்த மாகப் பேசி வருகின்றோம். அதை விட ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் இருந்து தரவுகளைப் பெற்று வருகின்றோம்.

ஒரு முக்கியமான விடயத்தை உங்கள் முன் கூற விரும்புகின் றேன். கிடைக்கும் நிதியம் குறை வானாலும் அதனை நிறைவான தாக மாற்ற பல வழிகள் இருக் கின்றன.

எமது அரசாங்கமானது வெளிப் படைத்தன்மையையே விரும்பு கின்றது. பொத்தி வைத்துப் பொத்தி வைத்துத் தமது தனிப்பட்ட நன் மைகளுக்காகப் பொதுப் பணங் களைப் பாவிப்பதையும் அதன் பொருட்டு உண்மையான உதவி களை எதிர் நோக்கியிருப் பவர் களை உதாசீனஞ் செய்து தமது உற்றவர்களின் எதிர்பார்ப்புக்களை மட்டும் பூர்த்தி செய்வதையும் நாங்கள் கண்டிக்கின்றோம். அவ் வாறு எங்களுடைய அமைச் சர்களோ, திணைக்கள அலுவலர் களோ, எமது அலுவலர்களோ செயற்பட முனைந்தால் அதனை எமக்குத் தெரியப்படுத்தத் தயங் காதீர்கள்.


நாம் வெளிப்படைத்தன்மையை விரும்புவது போல்தான் சட்டத்திற்கு அமைவாக உரிய செயன் முறை களைப் பின்பற்ற உறுதி எடுத்



துள்ளோம். பிழையான செயன் முறைகளில் கருவாக எமது அலு வலர்கள் ஈடுபட்டால் எமக்குத் தெரியப்படுத்துங்கள் உரிய நடவ டிக்கைகள் எடுப்போம்.

மக்கள் சேவை என்று வந்து விட்டால் மக்களுக்காகவே நாங்கள் வாழத் தலைப்பட வேண்டும். உற்றார், உறவினர், உடன் ,ருப்ப வர்களுக்கென்று எமது உத்தி யோகபூர்வ அதிகாரங்களைப் பாவித்து சுய நன்மைகளைப் பெற விளையக்கூடாது. முன்னைய ஜனாதி பதி ஒருவரின் சகோதரருக்கும் இப்பொழுது நடந்திருக்குங் கதி என்ன என்று எமக்குத் தெரியும். எனவே தான் மக்கள் சேவை என்று மன்றுக்கு வருபவர்கள் சுய நலத்தை மறந்து விட வேண்டும். நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். தேர்வுகளில் தகுதிக்கே முதலிடம் வழங்க வேண்டும். தமது சொந்த நன்மைகளும் ஊரார் நன்மைகளும் முரண்பட வேண டிய ஒரு சூழ்நிலை ஏற்படுமேயா னால் சுய இலாபத்தையும் நன்மை யையும் புறக்கணிக்கும் மனோ பக்குவம் எமக்கு வர வேண்டும்.

பொது வாழ்வு என்றால் பொது மக்களை முன் வைத்துப் பணம் சம்பாதிப்பது என்ற நிலை மாற வேண்டும். எமது வடமாகாணம் பண்பான நிர்வாக முறைமைக்குப் பெயர் போனதாக அமைய வேண் டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. எம்மால் முடிந்த உதவிகளை உங்களுக்கு நல்க நாங்கள் என் றென்றும் கடமைப்பட்டுள்ளோம். எங்கள் வடமாகாணத் தேர்தலில் எங்களை வெல்ல வைக்க நீங்கள் செய்த சேவை மகத்தானது. உங் கள் மக்களின் நல்வாழ்வுக்காக எம்மால் முடிந்ததைச் செய்வது எமது கடப்பாடு, கட்டாயம், கடமை என்று கூறி முடித்தார். (2)




# கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்கு அனுபவ அறிவு கட்டாயம் அவசியம்

## வடக்கு கூட்டுறவு அமைச்சர் தெரிவிப்பு

(வவுனியா)

கூட்டுறவு அமைப்புகள் பல சாதனைகளை நிகழ்த்திய காலம் ஒன்றிருந்தது. ஆனால், இன்று கூட்டுறவுத்துறை நலிவடைந்திருப் தோடு, கூட்டுறவு அமைப்புகளு க்கும் சமூகத்துக்கும் இடையிலான இடைவெளியும் அதிகரித்து வரு கிறது. கூட்டுறவுத்துறையின் இந்தச் சரிவுக்குப் பல காரணங்கள் உண்டு. அதில் இளையோர் பற்றாக்குறை வும் ஒன்று. இளையோரை உறுப் பினர்களாக இணைத்துக் கொண் டால் கூட்டுறவுத்துறைக்குப் புதுவே கம் பிறக்கும் என்று வடக்கு கூட்டுற வுத்துறை அமைச்சர் பொ.ஐங்கர நேசன் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கி நேற்று முன்தினம் நெடுங் கேணி யில் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தின ராகக் கலந்துகொண்டு உரையா ற்றும்போதே அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில்,

கூட்டுறவு அமைப்புகளின் தலை



மைப் பதவிகளிலும், நெறியாளர் குழுவிலும் பெரும்பாலும் வயது முதிர்ந்தவர்களே இடம்பெற்றி ருக்கிறார்கள். கூட்டுறவுத்துறை யின் வளர்ச்சிக்கு இவர்களின் அனுபவ அறிவு அவசியம். அதே சமயம் கூட்டுறவுத்துறைக்குப் புது இரத்தம் பாய்ச்சுவதற்கு இளையோரைக் கணிசமான அளவில் இணைத்துக் கொள்வதும் அவசியம்ஆகும்.

இளையோரைக் கூட்டுறவின்மீது நாட்டம் கொள்ளத்தக்க வகையில் கூட்டுறவுக் கட்டமைப்புகளில் மாற் றங்கள் செய்யப்படல் வேண்டும்.

கூட்டுறவுத்துறையில் நாம் பாரம் பரிய அணுகுமுறைகளையே இப் போதும் கடைப்பிடித்து வருகிறோம். ஆனால், தனியார்துறை இப்போது பலம் மிக்க துறையாக உருவெடு த்துள்ளது.

திறந்த பொருளாதாரக் கொள் கையால் நமது உள்ளூர்த்தரம் சர்வதேசத் தரத்துக்கு முகங்கொ டுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட் டுள்ளது. இத்தகைய சவால்களை யெல்லாம் எதிர்கொள்ளத்தக்க வகையில் கூட்டுறவுத்துறையில் மாற்றங்களை ஏற்படுத்தினால், கூட்டுறவு மீண்டும் மிடுக்கோடு நிமிரும் காலம் விரைவில் வரும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் வடக்கு மாகா ணசபை உறுப்பினர் கே.ரி.லிங் கநாதன், வவுனியா வடக்கு பிர தேச செயலாளர் க.பரந்தாமன், வவு னியா மாவட்ட கூட்டுறவு அபிவிரு த்தி உதவி ஆணையாளர் கு.ரவீந் திரநாதன் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங் களின் பதிவாளருமான திருமதி மது மதி வசந்தகுமார், வவுனியா வடக்கு பிரதேச தவிசாளர் மு.பாலசுப்பிர மணியம் ஆகியோருடன் வங்கி நடவடிக்கைகளில் பங்கேற்க வந்த பெருமளவிலான பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தார்கள். (2)

### புதுவருட சேமிப்பாக

# சமுர்த்தி பயனாளிகளிடமிருந்து 193955ரூபா பணம் பெறப்பட்டது

(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயல கத்துக்குட்பட்ட முள்ளியவளை வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப் படை வங்கியின் புதுவருட சேமிப் பாக பயனாளிகளிடமிருந்து ஒரு இலட்சத்து 93 ஆயிரத்து 955 ரூபாய் பெறப்பட்டுள்ளதாக வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் குறி ப்பிடுகையில்,

வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய, புதுவருடத்தை முன்னிட்டு கிராம ங்கள் தோறும் மக்கள் மத்தியில் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிப்பத ற்காக இந்த செயற்றிட்டம் முன்னெ டுக்கப்பட்டது.

எமது வங்கியின் கீழ் 15 கிராம ங்கள் இருக்கின்றன. குறித்த 15 கிராமங்களில் மூன்று கிராமங்க ளுக்கு மாதாந்த சமுர்த்தி கொடுப் பனவுகள் வழங்கப்படுவதில்லை. எனினும் கடன் உட்பட ஏனைய உதவிகள் சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படாத கிராமங்களுக்கு வழங்கப்படுகிறது.

எனவே, சமுர்த்தி நிவாரண ங்கள் பெறும் கிராமங்களுடன் சமு ர்த்தி கொடுப்பனவு வழங்கப்படாத கிராமங்களைச் சேர்ந்த மக்களும் புதுவருடத்தை முன்னிட்டு மிகவும் ஆர்வத்துடன் சேமிப்புக்களை செய்துள்ளனர்.

பங்கு, குழு, அங்கத்துவம், திரியமாத, சிசுரக்க, அங்கத்தவர் அல் லாதோர் கணக்கு, சிறுவர் கணக்கு என சகல கணக்குகளையும் உள் ளடக்கிய வகையில் புதுவருட சேமி ப்பு செய்யப்பட்டுள்ளது என்றார்.(2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் செய்கின்ற செயல்கள் 75 சதவீதம் சரியாக இருக்குமானால் என்னால் எவ்வளவோ செய்ய முடியும். - ரூஸ்வெல்ட்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இனப்பிரச்சினைத் தீர்விலும் ஒற்றுமைப்பட வேண்டும்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வீட்டிற்கு அனுப்புதல் என்பதில் எதிர்க் கட்சிகள் ஓரணியில் திரண்டதன் காரணமாக அந்த நடவடிக்கை வெற்றிகரமாக நிறைவேறியது. அதனைத் தொடர்ந்து ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை குறைக்கின்ற நோக்கில் கொண்டுவரப்பட்ட 19 ஆவது திருத்த சட்டமூலமும் நிறைவேறியாயிற்று.

இந்த நாட்டிற்கு பொருத்தமற்ற ஜனாதிபதி ஆட்சி முறைமையை வலுக்குறைக்கின்ற செயற்பாடு நடந்து முடிந்ததையடுத்து, ஜனாதிபதி மைத்திரியின் அடுத்த கட்ட நடவடிக்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாக இருக்க வேண்டும்.

இலங்கையின் அபிவிருத்தி தடைப்பட்டது முதல் இந்த நாட்டின் பெருமைக்கு குந்தகமாக இருந்தது வரையான அத்தனைக்கும் இனப்பிரச்சினையே காரணமாகும்.

ஒரு நாட்டுக்குள் உள்ள இனங்கள் ஒற்றுமைப்பட்டு வாழமுடியாமல் தவிக்கும் போது அந்த நாடு [illegible]த வகையிலும் நிம்மதியாக இருக்க முடியாது.

ஆக, முதலில் நாட்டில் அமைதி, சமாதானம் ஏற்பட வேண்டும் அத்தகையதொரு சூழ்நிலையை ஏற்படுத்தும் போதே எல்லாம் சாத்தியமாகும்.

அந்த வகையில் மகிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பியமை; ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை குறைப்புச் செய்தமை என்பன இந்த நாட்டிற்கு நன்மை பயக்க வேண்டுமாயின், தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும். இதனைச் செய்யக்கூடிய தகைமையும் திறமையும் ஜனாதிபதி மைத்திரியிடமே உண்டு.

மகிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பியதுடன் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் சர்வாதிகாரத்தை இல்லாது செய்து இந்த நாட்டின் ஜனநாயகத்தை-இறைமையைக் காப்பாற்ற அடிப்படையாக இருந்தவர்கள் தமிழர்கள் என்பதை ஜனாதிபதி மைத்திரி நிச்சயம் உணர்வார் என நம்[illegible]ாம்.

அதேநேரம் இந்த உண்மையை சிங்களவர்களும் அவர்கள் சார்ந்த அரசியல் கட்சிகளும் உணர்ந்து கொள்வது அவசியம்.

இந்த நாட்டில் எண்பது வீதமானவர்கள் சிங்களவர்கள், என்று மார்தட்டினாலும் பன்னிரண்டு வீதமான தமிழர்களின் வாக்குகளே இலங்கையின் ஜனநாயகத்தைக் காப்பாற்றியது.

ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன தோல்வி கண்டு மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றிருந்தால் சிங்கள அரசியல் தலைவர்கள் பலர் சிறைகளுக்குள் அடைக்கப்பட்டிருப்பர்.

ஆக, சர்வாதிகாரத்தின் எல்லைக்குச் சென்ற இலங்கையை மீட்டெடுத்து ஜனநாயகத்தை மீளவும் தளிரவைத்த பெருமை தமிழ் மக்களையே சாரும்.

இந்த உண்மை உணரப்படுவதனூடாக தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒற்றுமைப்பட்டால், இந்த நாட்டின் மேன்மை என்பது அபரிதமாக உணரப்படும் என்ற செய்தி அறியப்பட வேண்டும்.

எனவே கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இந்த நாடு அனுபவித்து வரும் மிகப் பெரிய அவலமாக இருக்கக்கூடிய இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவது ஜனாதிபதி மைத்திரியின் தலையாய கடமையாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்ற விடயத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்.

கூடவே பௌத்த மத பீடங்கள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஆதரவு தரவேண்டும்.

இவற்றை எல்லாம் ஒரு நிலைப்படுத்தி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் என்ற உயரிய பணியை ஜனாதிபதி மைத்திரி செய்வார் என்று நம்பலாம்.

இலங்கையை புதிய பாதையில் வழிப்படுத்திச் செல்ல வேண்டுமாயின் அதன் முதற்பணி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது அவசியம்.

# வாள்வெட்டு கலாசாரத்திற்கு விரைந்து முற்றுப்புள்ளி அவசியம்

## வட.பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு முதலமைச்சர் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாக தலைதூக்கியிருக்கும் வாள்வெட்டு கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார். இது தொடர்பில் தாம் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் உறுதியளித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 28ஆவது மாதாந்த அமர்வு நேற்றுக் காலை நடைபெற்றது. அவைத்தலைவரால் குறித்த விடயம் சபைக்கு முன்வைக்கப்பட்டது. தற்போது அதிகரித்துள்ள வாள்வெட்டு கலாசாரத்தினால் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. எனவே வாள்வெட்டுக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து நடவடிக்கை எடுக்கவும் சபையின் ஊடாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவைத்தலைவர் சிவஞானம் தெரிவி த்தார்.

இதனை தொடர்ந்து உரையாற்றிய முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இங்கு நடைபெற்று வரும் வாள்வெட் டுக்கள், வன்முறைச்சம்பவங்கள் குறித்து நிறுத்துவதற்கு உடனடியாக பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேணடும் என்று வலியுறுத்தி பொலிஸ் மா அதிபருக்கு கடிதம் அனுப்பியுள்ளேன்.

இங்கு நடைபெறுகின்ற வாள்வெட்டுக்களினால் பதற்ற நிலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதோடு மக்கள் மத்தியில் அச்ச உணர்வும் தோற்றுவித்துள்ளது. உடனடியாக இக்குற்றச் செயலை கட்டுப்படுத்துமாறு கடிதத்தில் குறிப்பிட்டு அனுப்பியிருந்தேன் அக்கடிதம் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக எனக்கு பொலிஸ் மா அதிபர் உறுதியளித்துள்ளார் என முதலமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இவ்வாறான சம்பவம் தொடர்பில் குழு ஒன்று அமைக்கப்பட்டு தொடர்ந்தும் கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். எனினும் முதலமைச்சர் தலைமையிலேயே இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பது சிறந்தது என அவைத்தலைவர் சிவஞானம் வலியுறுத்தியிருந்தார். (செ-4)

## ஆசிரியர் நியமனம் பெறுவோருக்கு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பாடசாலைகளின் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு 161 தேசிய போதனா கல்வி டிப்ளோமாதாரர்களுக்கு (ஆசிரியர் சேவை-3-I (ஆ)) எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை அன்று மத்திய கல்வி அமைச்சில் ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது.

மேற்படி நியமனத்திற்காக நியமிக்கப்படவிக்கும் தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரர்களுக்கு பாடசாலை தெரிவினை மேற்கொள்வதற்காக எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 9 மணிக்கும், மதியம் 1 மணிக்கும் இரு பிரிவாக செம்மணி வீதி, நல்லூரில் அமைந்துள்ள வட மாகாணக் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அத்துடன் நேர்முக தேர்விற்கு குறிப்பிட்ட டிப்ளோமாதாரிகளை பிறப்பு சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றின் மூலப்பிரதி மற்றும் போட்டோ பிரதிகளுடன் தவறாது சமுகமளிக்குமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார். (செ)

## 2ஆயிரம் ரூபா குற்றப்பணம்

(கரணவாய்)

பொது இடத்தில் மது அருந்திய குற்றச்சாட்டு தொடர்பில் இரண்டு நபர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபா குற்றப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

மேற்படி குற்றச்சாட்டில் கைதான நபர்களுக்கு ஏற்கெனவே பிணை வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே பருத்தித்துறை நீதிபதி இவ் உத்தரவை வழங்கியிருந்தார். (இ-3-60)

## கூட்டம் நாளை

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு மத்தியஸ்தர் சபைக் கூட்டம் நாளை சனிக்கிழமை தாளையடி றோ.க.த.க பாடசாலையில் நடைபெறும் என மத்தியஸ்தர் சபைத் தலைவர் அறிவித்துள்ளார். (இ-3-60)

## களஞ்சிய அறையிலிருந்த பொருட்கள் திருட்டு

(கரணவாய்)

வடமராட்சி கற்கோவளம் புனித நகரில் அமைந்துள்ள நாகர்கோவில் தமிழ்க்கலவன் பாடசாலையின் களஞ்சிய அறையிலிருந்து பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபரின் அறையின் கூரை ஓட்டைப்பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் களஞ்சிய அறைத் திறப்பை எடுத்து அதனைத்திறந்து 50 கிலோ அரசி, 35 பெரிய ரின்மீன், 5 லீற்றர் மரக்கறி எண்ணெய் ஆகியவற்றை எடுத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மேற்படி பாடசாலையின் மூன்று நீர் இறைக்கும் மோட்டார் இயந்திரங்கள் திருடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் களஞ்சிய அறைத்திறப்பையும் திருடர்கள் தம்முடன் எடுத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-3-60)

## தொழிலாளர் தினமான இன்று கிளி.பொதுச்சந்தை மூடப்படும்

(கிளிநொச்சி)

தொழிலாளர் தினமான இன்று கிளிநொச்சி பொதுச்சந்தை மூடப்பட்டிருக்குமென கரைச்சி பிரதேச சபை செயலாளர் இ.கிருஸ்ணகுமார் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி பொதுச்சந்தை வருடா வருடம் தொழிலாளர் தினத்தன்று வியாபார நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டு மூடப்படுவது வழமையானதொன்றாகும்.

நாளை சனிக்கிழமை வழமை போன்று வியாபார நடவடிக்கைக்காக திறக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-271)

## துவிச்சக்கரவண்டிகள் பொலிஸாரால் மீட்பு

(கரணவாய்)

அநாதரவான நிலையில் காணப்பட்ட இரண்டு துவிச்சக்கரவண்டிகள் நெல்லியடிப் பொலிஸாரினால் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது. துன்னாலை இந்திர அம்மன் கோவிலுக்கு அருகாமையில் வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கரவண்டிகளே இவ்வாறு மீட்கப்பட்டு பருத்தித்துறை நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் அடையாளம்காட்டி துவிச்சக்கர வண்டிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-3-60)

## தமிழ்த்தினம்

மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை நடத்தும் தமிழ்த் தினம் எதிர்வரும் 05 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 2.30 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் பண்பு விருத்தி மாணவர் மன்றத் தலைவர் செல்வன் வ. நிருபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன், சிறப்பு விருந்தினராக யாழ்.புகையிரத நிலைய அதிபர் தே.பிரதீபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## இயல், இசை நாடகவிழா இன்று யாழில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல் இசை நாடகவிழா இன்று முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 4 மணிக்கு இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இரண்டாவது நாளாக தமிழ் மாமன்றத் தலைவர் இரா.இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் நாட்டியாஞ்சலி, வீணாகானம், இசைகானம், நாடகம் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (இ)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### பெண் குழந்தை முக்கியம்

★ பெரியோர்களுக்கு கண்ணியம் கொடுக்காதவரும், சிறியோர் மீது இரக்கம் கொள்ளாதவரும் எம்மைச் சேர்ந்தவரல்ல.

★ பெண் குழந்தையை விட, ஆண் குழந்தைக்கு முதன்மை அந்தஸ்து கொடுக்காமல் இருக்கும் ஒருவரை நிச்சயம் அல்லாஹ் சொர்க்கத்தில் நுழைய வைப்பான்.

★ தன்னுடைய வரவுக்குத் தக்கபடி செலவு செய்பவனும் எல்லாச் செயல்களிலும் நடுவுநிலையைக் கை கொள்பவனும் நிச்சயம் ஏழ்மை அடைய மாட்டான்.

★ உங்களை விட கீழ் நிலைமையில் இருப்பவர்களைப் பாருங்கள். உங்களுக்கு மேலான நிலையில் உள்ளவர்களைப் பார்க்காதீர்கள்.

★ செல்வச் செழிப்போடு வாழும் போது நீ இறைவனை நினைத்தால் நீ துன்பம் அடையும்போது இறைவன் உன்னை நினைப்பான்.

★ தற்செயலாக குவிந்து விட்ட பொருள் யாவும் செல்வமில்லை. ஆன்மிகச் செல்வமே செல்வம்.

★ நீங்கள் கற்புடையவர்களாக இருங்கள். உங்கள் மனைவியரும் கற்புடையவர்களாக இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பில்லாத டோனி; தொடரும் விமர்சனம்



இந்திய அணித்தலைவர் டோனி, கீப்பராக செயற்படும் போது சற்று தள்ளி செல்லும் பந்துகளை பிடிப்பதில்லை என்ற விமர்சனங்கள் தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடர்களில் இந்தியா உதை வாங்கிய போதும் சரி, சமீபத்தில் இங்கிலாந்து அணிக்கு எதிராக தொடரை இழக்கும் போதும் சரி, டோனி பல கேட்ச்களுக்கு ஒரு விக்கெட் கீப்பராக முயற்சி செய்யாமல் வேடிக்கை பார்த்தது அவ்வப் போது வர்ணனையாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் ஷாகித் அப்ரிடி இந்தியப் பந்துவீச்சை புரட்டி எடுத்துக் கொண்டிருந்தார்.

அந்த நிலையில் ஆஷிஷ் நெஹ்ரா, அப்ரிடிக்கு ஒரு அருமையான பந்தை வீசினார். அது மட்டையின் வெளி விளிம்பில் பட்டு விக்கெட் கீப்பர் டோனிக்கும், முதல் ஸ்லிப்பில் அணித்தலைவர் டிராவிட்டுக்கும் இடையே சென்றது. ஆனால் இருவரும் முயற்சி செய்யவில்லை.

டிராவிட்டால் அதை படிக்க முடியாது. ஆனால் கிளவ் உடன் இருக்கும் விக்கெட் கீப்பர் டோனி அதை பிடிக்க முயற்சி செய்திருக்க வேண்டும்.

ஆனால் அவர் வேடிக்கை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது "எளிதான கேட்சைக் கூட பிடிக்க முடியவில்லை" என்று நெஹ்ரா கூறியதாக ஒரிரு ஊடகங்கள் இதனை சுட்டிக்காட்டின.

இந்நிலையில் கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் 5ஆவது ஓவரை நெஹ்ரா வீச, கொல்கத்தா வீரர் மணீஷ் பாண்டே பந்தை எட்ஜ் செய்தார்.

இம்முறை டோனிக்கும் அஸ்வினுக்கும் இடையே கேட்ச் பிடிக்க முடியுமாறு சென்றது. ஆனால் டோனி கேட்சிற்கு முயற்சி செய்யவில்லை.

பெரிதும் விமர்சிக்கப்பட்ட நெஹ்ராவின் பந்துவீச்சில் நல்ல முன்னேற்றம் உள்ள நிலையில், டோனியின் செயற்பாடு மட்டும் அப்படியே உள்ளதையே இது காட்டுகிறது. (க)

## பாலிவுட் படத்தில் கோலி



இந்திய அணியின் துணை அணித்தலைவர் விராட் கோலி, பாலிவுட் படம் ஒன்றில் நடித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

அனுஷ்கா, ரன்பீர் கபீர் நடித்துள்ள பாம்பே வெல்வெட் படத்தில் முதன்முறையாக ஒரு சிறிய வேடத்தில் விராட் கோலி நடித்துள்ளதாக கூறப்படுகிறது.

கியான் பிரகாஷ் என்ற எழுத்தாளரின் 'மும்பை பேபிள்ஸ்" என்ற வரலாற்று நூலைத்தான் இயக்குநர் அனுராக் காஸ்யப் இந்த படத்திற்கு திரைக்கதையாக மாற்றியுள்ளார்.

இந்தப் படத்தில் 1950 காலத்திய பழைய மும்பையை அப்படியே கண்முன் காட்டப்போகிறார்கள். இப்படத்தைப் பொறுத்தவரை மும்பை நகரமும் ஒரு கதாபாத்திரமாக உலாவருகிறது.

இந்தப்படத்தில் 1960களில் வாழ்ந்த கிரிக்கெட் விளையாட்டு வீரராக நடித்துள்ளாராம் கோலி. இதற்காக இலங்கைக்கு சிறியதாக ஒரு ட்டிரிப் போய்விட்டு வந்ததாக கூறப்படுகிறது. (க)

# 44 வயதிலும் அசத்தும் ஆஸியின் பிராட் ஹாக்




ஐபிஎல் தொடரில் கொல்கத்தா அணியில் விளையாடி வரும் அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் பிராட் ஹாக் 44 வயதிலும் வியக்க வைக்கிறார்.

இதன் மூலம் ஐபிஎல் தொடரில் அதிக வயதில் விளையாடிய வீரர் என்றசாதனையையும்படைத்துள்ளார்.

முன்பு ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்காக ஆடிய பிராட் ஹாக்கை, இந்த முறை கொல்கத்தா அணி ரூ.50 அலட்சத்திற்கு வாங்கியது.

இவர் சென்னை அணிக்கு எதிரான கடைசி ஆட்டத்தில் சுனில் நரைனுக்கு பதிலாக பந்துவீச வந்தார். 44 வயதிலும் அசால்டாக பந்து வீசி அசர வைக்கிறார்.

4 ஓவர்களை முழுமையாக வீசிய பிராட் ஹாக், ஒரு விக்கெட்டை வீழ்த்தி 18 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்தார்

அதிக வயதில் விளையாடுவது பற்றி பிராட் ஹாக் கூறுகையில், 44வது வயதிலும் கிரக்கெட் விளையாடி கொண்டு இருக்கிறேன். இது என் அதிர்ஷ்டம்.

இந்திய வீரர்களுக்கு அனுபவித்து பந்து வீசுகிறேன். ஏனென்றால் அவர்கள் சுழற்பந்து வீச்சை சிறப்பாக எதிர்கொள்வார்கள். அவர்களுக்கு பந்துவீசுவது சவாலானது என்று தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் மிகச் சிறந்த சுழற்பந்து வீச்சாளர்களில் பிராட் ஹாக்கும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# உலக சாதனை படைத்த சிக்சர் மன்னன் கெய்ல்




பெங்களூர் அணியின் அதிரடி ஆட்டக்காரர் கிறிஸ் கெய்ல், இருபது இருபது போட்டிகளில் 500 சிக்சர்களை விளாசி புதிய வரலாறு படைத்துள்ளார்.


ராஜஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் கிறிஸ் கெய்ல், 4 பந்துகளில் 1 சிக்சர், 1 பவுண்டரி உட்பட 10 ஓட்டங்கள் குவித்தார்.

இதன் மூலம் மொத்தமாக இருபது இருபது போட்டிகளில் 500 சிக்சர்களை அடித் துள்ளார்.

இவருக்கு அடுத்த இடத்தில் மேற்கிந்திய தீவுகளின் சகவீரர் பொலலார்ட் 348 சிக்சர் களை விளாசியுள்ளார்.

ஐபிஎல் போட்டியிலும் அதிக சிக்சர் விளாசியவர்கள் பட்டியலில் கிறிஸ் கெய்ல் முதலிடத்தில் இருக்கிறார். (க)


# மாட்ரிட் டென்னிஸ்; ஜோகோவிச் விலகல்



உலகின் 'நம்பர் 1' டென்னிஸ் வீரர் ஜோகோவிச். செர்பியாவை சேர்ந்த இவர் அடுத்த வாரம் ஸ்பெயினில் தொடங்கும் மாட்ரிட் மாஸ்டர் டென்னிஸ் போட்டியில் இருந்து விலகியுள்ளார்.

அடுத்த மாதம் நடக்கும் பிரெஞ் ஓபன் டென்னிஸ் போட்டியில் பங்கேற்பதற்கு ஓய்வு தேவைப்படுவதால் இப்போட்டியில் இருந்து விலகுவதாக அவர் தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு காயம் காரணமாக மாட்ரிட் டென்னிஸ் போட்டியில் இருந்து விலகி இருந்தார்.சமீபத்தில் நடந்த அவுஸ்திரேலிய ஓபன், இந்தியன் வேல்ஸ், மியாமி டென்னிஸ் ஆகிய போட்டிகளில் அவர் சம்பியன் பட்டம் வென்று இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# சுனில் நரைனுக்கு மீண்டும் சிக்கல்




மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சுனில் நரைனின் பந்துவீச்சுக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

இதன்படி அவர் தமது ஓஃப் பிரேக் பந்துவீச்சுக்களை வீசக்கூடாது என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

ஐபிஎல் போட்டிகளில் விளையாடி வரும் சுனில் நரைனின் பந்துவீச்சு குறித்து கடந்த 22 ஆம் திகதி சந்தேகம் எழுப்பப்பட்டிருந்தது.

இதனையடுத்து அவர் சென்னையில் பந்துவீச்சு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

இதன் அடிப்படையில் அவர் ஓப் பிரேக் பந்துகளை வீசும் போது, அவரின் கை அனுமதிக்கப்பட்ட அளவை காட்டிலும் அதிகமான பாகைக்கு மடிக்கப்படுகிறது.

இந்த நிலையில் அவர் எதிர்வரும் போட்டிகளில் ஓஃப் பிரேக் பந்துகளை வீசுவாராக இருந்தால், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையினால் நடத்தப்படுகின்ற அனைத்து போட்டிகளுக்கும் தடை விதிக்கப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஏனைய பந்துகளை வீச அவருக்கு தடையில்லை என்று கூறப்பட்டுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தபாய, நாமல் ஆகியோர்...

தில் கடந்த செவ்வாய்க்கிழமை நிறைவேற்றப்பட்ட 19வது திருத்தச்சட்ட மூலம், இரட்டைக் குடியுரிமை கொண்டவர்களை தேர்தல்களில் போட்டியிடத் தடை விதித்துள்ளது. கோத்தபாய ராஜபக்ஷ இரட்டைக் குடியுரிமையை கொண்டுள்ளவர் என்பதால் அவர் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாது.

இதேவேளை, 2021ஆம் ஆண்டு இடம் பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் நாமல் ராஜபக்ஷவை போட்டியிட வைக்கும் எண்ணத்துடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்டிருந்த திட்டங்களும் தோல்வியில் முடிவடைந்துள்ளன.

இலங்கை அரசியலமைப்பின் 19-வது திருத்தச்சட்டமூலத்தின் ஊடாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரின் ஆகக்குறைந்த வயதெல்லை 32இலிருந்து 35ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இதனால், 2021-ம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெறவுள்ள அடுத்த ஜனாதிபதி தேர்தலில் நாமல் ராஜபக்ஷவினால் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் இதன்போது நாமல் ராஜபக்ஷ 35 வயதை பூர்த்தி செய்திருக்கமாட்டார்.

1986ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி பிறந்த நாமல் ராஜபக்ஷ அடுத்த ஜனாதிபதி தேர்தல் முடிந்து மூன்று மாதங்களின் பின்னரே, ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடும் தகைமையைப் பெறுவார். இதனால், இலங்கையின் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 19-வது திருத்தச் சட்டடமூலத்தில் ஜனாதிபதி வேட்பாளரின் குறைந்த பட்ச வயதெல்லையை அதிகரித்தமைக்கு, நாமல் ராஜபக்ஷவை போட்டியிட முடியாமல் தடுப்பதே முக்கிய காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், கோத்தபாய ராஜபக்ஷ இலங்கை மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் குடியுரிமையைக் கொண்டுள்ளார் என்பதை இலங்கையின் குடிவரவு, குடியகல்வு திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

படைத்தரப்பில் இருந்து ஓய்வுபெற்ற அவர், 10 ஆண்டுகளாக அமெரிக்காவில் தங்கியிருந்தார். இந்நிலையில் ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றதும், 2005ஆம் ஆண்டு நாடு திரும்பிய அவர், பாதுகாப்பு செயலாளராக பதவியேற்றிருந்தார்.

கோத்தபாய ராஜபக்ஷவை அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வைப்பதற்கு சிங்கள, பௌத்த பேரினவாத அமைப்புக்கள் தீவிர முயற்சிகளை மேற்கொண்டிருந்தன. அத்துடன், தான் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடக்கூடும் என கோத்தபாய ராஜபக்ஷவும் அண்மையில் இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருந்தார்.

ஆனால், இலங்கையில் இரட்டைக் குடியுரிமை கொண்ட ஒருவரை 19-வது திருத்தச்சட்டமூலம் எந்தவகையிலும் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கமுடியாது. இந்நிலையில் கோத்தபாய ராஜபக்ச அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட வேண்டுமானால், அவர் அமெரிக்க குடியுரிமையை இரத்துச் செய்ய வேண்டும் என சட்டநிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு 19-வது திருத்தச்சட்டமூலம் தடை விதிக்கவில்லை என்றும் சட்டநிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

பசில் ராஜபக்ஷ அமெரிக்க குடியுரிமை கொண்டவர் அல்ல என்றும், அவர் அமெரிக்க வதிவிட உரிமையை மட்டுமே அவர் கொண்டவர் என்பதால் தேர்தலில் போட்டியிடத் தடையில்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர். (செ)

# பஸிலிடம் மீண்டும் விசாரணை

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பஸில் ராஜபக்ஷவிடம் நிதி மோசடி விசாரணை பிரிவினர் மீண்டும் நேற்று விசாரணை நடத்தியுள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு சென்ற விசாரணை அதிகாரிகள் நேற்று வியாழக்கிழமை காலை 10 மணிமுதல் பிற்பகல் 1மணி வரை மூன்று மணித்தியாலங்கள் அவரிடம் விசாரணை நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றுது.

கடந்த 22ஆம் திகதி அவர் கைது செய்யப்படுவதற்கு முன்னர் நடத்தப்பட்ட விசாரணையின் தொடர்சியாகவே நேற்று விசாரணை நடத்தப்பட்டுள்ளது. கடந்த 22ஆம் திகதி கைது செய்யப்பட்ட பஸில் ராஜபக்ஷ எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கபட்டுள்ள நிலையில் அவர் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையின் கட்டணம் செலுத்தும் வார்ட்டில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)


## இலவச யோகாசனப் பயிற்சி வகுப்பும் தியானமும்



சற்குரு யகி வாசுதேவின் கீழ் பயின்ற ஆசிரியர் வைத்திய கலாநிதி கௌரிபாலன் நடாத்துகின்றார்.

இடம் :- சிவகுருநாதர் பீடம்,
குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

காலம் :- 03.05.2015
04.05.2015

நேரம் :- பிற்பகல் 3 - 5 மணிவரை

சுகயீனமுள்ளவர் வைத்திய கலாநிதி கௌரிபாலன் யோகாசனம் அவர்களுக்கு எப்படி உதவி செய்யும் என்பதை கலந்துரையாட சந்தர்ப்பம் உண்டு.

குறிப்பு :- 1) இலேசான மதிய உணவை 12 மணிக்கு முன் உண்ணவும்
2) i. தளர்வான உடை பயிற்சிக்கு நன்று.
ii. பெண்களுக்கு மூடிய கழுத்துச் சட்டை அவசியம்.
3) அமர்ந்து இருக்க துவாய் அல்லது சிறு துணி தேவை சிறு தலையணையும் உதவியாக இருக்கும். (இ)

தொடர்புகளுக்கு :- வைத்திய கலாநிதி கௌரிபாலன்
0719247919



## பேராசிரியர் சி.க. சிற்றம்பலத்தின்



## "தடம்பதித்த தமிழ்த்தேசியம்"

நூல் வெளியீட்டு விழாவிற்கு தங்களை தமிழ்த் தேசிய உறவுரிமையுடன் அழைப்பதில் நிறைவுறுகின்றோம்.

தலைமை :- சட்டத்தரணி கனக மனோகரன் (கனடா)

### முதன்மை விருந்தினர்கள்

கௌரவ இரா.சம்பந்தன் (MP)
தலைவர்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

நீதியரசர்.சீ.வீ.விக்கினேஸ்வரன்
முதலமைச்சர்,
வடமாகாணம்.

### சிறப்பு விருந்தினர்கள்

கௌரவ மாவை.சேனாதிராசா
(பா.உ)
இலங்கைத் தமிழரசுக் கட்சி

திருமிகு.செ.சந்திரகாசன்
இயக்குநர்,
ஏதிலியர் மறுவாழ்வுக்கழகம்.

பேராயர் கலாநிதி.சு.ஜெபநேசன்

காலம் :- 03.05.2015 (ஞாயிறு)
இடம் :- வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
நேரம் :- மாலை 3.00 மணிக்கு

(215)



தனிப்பட்ட கவனத்துடன் கூடிய பிரத்தியேக வகுப்பு

கணக்கீடு
A.P. பகீரதன் B.B.A (F.mSpl)

புதிய பிரிவுகள் ஆரம்பம்

A/L 2016 மே 2 முதல்
பங்குடமை
Sat Sun } 5-6 p.m

மே 6 முதல்
Paper Class
Wed Fri } 5-6 p.m

A/L 2017 மே 4 முதல் Mon Fri } 6.15 -7.15a.m
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்

IBS அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்
கண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்பாக



## இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி நடாத்தும்

# இயல் இசை நாடக விழா- 2015

இடம்:-இலங்கைவேந்தன் கலைக்கல்லூரி கலையரங்கம்
காலம்:- 30.04.2015-04.05.2015 நேரம்:- பி.ப..4.00 மணி
01.05.2015 இரண்டாம் நாள்

தலைவர்
திரு.இரா.இராஜேஸ்வரன் (தலைவர் தமிழ் மாமன்றம்)

பிரதம விருந்தினர்
பேராசிரியர் V.P. சிவநாதன் (கலைப்பீடாதிபதி யாழ்பல்கலைக்கழகம்)
நாச்சிமார் கோவிலடி " சபேசன்" குழுவினர் வழங்கும்

மங்கல இசை
நாதஸ்வரம்
திரு.மாணிக்கம் சபேசன்
திரு.முருகையா ரமேஸ்
தவில்
திரு.நடராஜா வினோதன்
திரு.கண்ணன் முரளி

மங்கல விளக்கேற்றல்
திரு.கனகசபை அருள்நேசன் (உரிமையாளர் - சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்)
திரு.சோ.பிரகதீஸ்வரன் (உரிமையாளர்- சிற்றி ஹாட்வெயர்ஸ் ஸ்ரோர்ஸ்)
திரு.T.கந்தசாமி (உரிமையாளர்- பெஷன் கவுஸ்)
தேவாரம்:- கோ.மனாமிர்தன், கோ.சுபாம்சன், கோ.கோபிராம், மி.லக்சன்
(சாரங்கம் இசை மன்ற மாணவர்கள்)
ஆசியுரை:- வண.கலைமாணி மீகஹஜந்துரே சிறி விமலதேரர்
(ஸ்ரீ நாகவிகாரை - யாழ்ப்பாணம்)
வாழ்த்துரை:- சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல்

சைவ வித்தியா விருத்திச் சங்கசிறுவர் இல்ல மாணவிகள் வழங்கும்
நாட்டியாஞ்சலி
நட்டுவாங்கம்: யாழினி ரவீந்திரன் பாட்டு: நா.சிந்துஜா
வயலின்: இந்துமதி தயாபரன் மிருதங்கம்:திரு.மு.சிவமார்

திருமதி கவிதா வாமதேவனின் மாணவர்கள் வழங்கும்
வீணாகானம்
மிருதங்கம்:செல்வன்.ப.சாரங்கன் தபேலா:சி.சிவசங்கர்

இசைகாணம்
பாட்டு:ஸ்ரீமதி.ஹம்சத்வனி சோமஸ்கந்த குருக்கள் வயலின்: திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம்:நல்லை G.கண்ணதாஸ் முகர்சிங்:திரு.M.சதீஸ்குமார்
பொன்னாலை சந்திர பரத கலாலய மாணவிகள் வழங்கும்

"தமிழே என் உயிர் தமிழே"
நாட்டியாஞ்சலி
நட்டுவாங்கம்:ஸ்ரீமதி.ஸ்ரீதேவி.கண்ணதாசன்
பாட்டு: ஸ்ரீமதி.பங்கயற்செல்வி முகுந்தன் வயலின:திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம்: திரு.ச.மகேந்திரம் கீ போட்: திரு.செல்வச்சந்திரன்

கலைஞர்கள் கௌரவிப்பு
பிரதம விருந்தினர் உரை
கோண்டாவில் மறுமலர்ச்சி நாடகமன்றம் வழங்கும்
தியாகச் சுடர்-(சமூக நாடகம்)
நன்றியுரை

(தி-858)

அனுமதி இலவசம்

அனுசரணை
SRI MATHAVAN
CYCLE,CYCLE SPAIR PARTS
Kasthuriyar Road, Jaffna.
10,Jumma Mosque Lane, kasthuriyar Road, Jaffna. T.P 0212224406

இலங்கைவேந்தன் கலைக்கல்லூரியினர்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சர்வதேச மத்தியஸ்தமே...

வழங்கல் மத்தியஸ்தம், உறுதியளிப்பு மற்றும் - தனிர பாகளிப்பு இல்லாமலும் நிரந்தரமானதும் சமத்துவமானதுமான தீர்வொன்றினை காணமுடியாது என இச்சபை உறுதியாக நம்புகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச சமூகமும் இலங்கையில் உள்ள தமிழ் சிங்கள இனப்பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலம் நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை காண பதை நோக்கி தமது தொழில்நுட்ப உதவி களை வழங்க முன்வரவேண்டுமென இச் சபை அழைப்பு விடுக்கின்றது.

இலங்கையில் உள்ள தமிழ்-சிங்கள இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு ஒன்றை காண்பதை நோக்கியதாக இலங்கை அரசுக்கும் தமிழ்த் தலைவர்களுக்கும் இடை யில் மத்தியஸ்தம் வகிக்க முன்வருமாறு சர்வ தேச சமூகத்திற்கு குறிப்பாக ஐரோப்பிய யூனி யன், இந்தியா, அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றுக்கு இச்சபை அழைப்பு விடுகின்றது.

என்றவாறாக தனது பிரேரணையை சபையில் முன்மொழிந்தார். சிவாஜியின் இப் பிரேரணை காலத்திற்கு முந்தியது எனவும். இதனை தற்போது நிறைவேற்றுவதனை விட ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழு வின் இலங்கை மீதான அறிக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வெளியிடப்பட்ட பின்னர் நிறைவேற்றுவது உரிய பயன் தரும் என உறுப்பினர்களான சயந்தன், அஸ்மின் ஆகி யோர் தெரிவித்தனர்.

இதனையடுத்து எழுந்த வடக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சி தலைவர் தவராசா சிவாஜிலிங்கத்தின் குறித்த பிரேரணை தன் போதைய அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கை யற்ற நிலையை காண்பிப்பதாகவும் நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) பாராளுமன்றத் தில் நிறைவேற்றப்பட்ட பத்தொன்பதாவது திருத்த சட்டத்தில் சிறுபான்மை மக்கள் தொடர் பிலும் அவர்களின் தீர்வு குறித்தும் எதுவுமே குறிப்பிடப்படவில்லை.

இந்த நிலையில்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதிய அரசின் தேசிய அரசில் இணைந்துள்ள தோடு உயரிய சபையிலும் அங்கம் வகிக்கின் றது. மற்றும் பத்தொன் பதாம் திருத்த சட்டம் நிறை வேற்றப்பட்டதன் பின்னர் நடைபெற்ற ஊர்வலத் திலும் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் தலைமைகள் கலந்து கொண்டிருந்தனர்.

இவ்வாறான நிலை யில் கொழும்பில் ஒரு நிலைப்பாட்டையும் வடக் கில் ஒரு நிலைப்பாட்டை யும் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு கொண்டிருக்க முடியாது. ஆகவே குறித்த பிரேரணை நிறைவேற் றப்பட வேண்டுமாயின் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு புதிய அரசிலிருந்து பிரிந்து செயற்பட வேண்டும். அவ் வாறில்லாமல் பிரேரணை நிறைவேற்றப்படுமாயின் நாம் ஆதரவு வழங்க மாட் டோம் என தவராசா தெரி வித்தார்.

இதன்பின்னர்சர்வதேச மத்தியஸ்தம் ஊடாக அல் லது தலையீட்டினால் தான இலங்கை இனப்பிரச் சினை தீர்க்கப்பட முடியும் என தான் உறுதியாக நம்பு வதாகவும் எனினும் தற் போது குறித்த பிரேரணை யை நிறைவேற்றுவது பாதிப்பை ஏற்படுத்தும் என வும் ஐ.நாவின் செப்டெம் பர் மாத அறிக்கை வெளி யாகிய பின்னர் நிறை வேற்றுவதன் மூலம் பிரே ரணையின் அனைத்து பயனையும் பெற முடியும் என முதலமைச்சர் விக் னேஸ்வரன் தெரிவித்தார்.

பின்னர் அனைவரது வேண்டுகோளிற்கிணங்க குறித்த பிரேரணையில் சில மாற்றங்கள் செய்யப் பட்டு சிவாஜிலிங்கத்தின் அனுமதியுடன் பிரேரணை அடுத்த அமர்விற்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. (செ-4)


PERSONAL CLASS
ACCOUNTING
A.KALAICHELVAN
A/L - 2015, 2016, 2017
ENGLISH MEDIUM & TAMIL MEDIUM
New Batches Start
Grade 10 & 11 English Medium
Grade 11 Tamil Medium
New Batch Start
Note:- Teaching in New Methods
Contact Through Parents
(249)
Hot Line:- 0776944543




கனடா
Express Entry Visa
தொழில்வாய்ப்புடன் குடியுரிமை
(Work with PR)
2015ம் ஆண்டு
3 இலட்சம்* பேருக்கு
நிரந்தர குடியுரிமை வழங்கும்
கனேடிய அரசாங்கத்தின்
புதிய திட்டத்தின்கீழ்
150க்கு மேற்பட்ட தொழில் நிலைகளுக்கு
180,000*க்கு மேற்பட்ட வெற்றிடங்கள்
Degree/Diploma வுடன் ஒரு வருட தொழில் அனுபவம் அவசியம்!
O/L or A/L உடன்
Student Visa
With/Without IELTS
UK, Australia, New Zealand, Switzerland, Canada, Malaysia, Spain etc.
SIKARAM Education Abroad Work, Migration & Visa Solutions
Any Visa to Any Country
எந்தவொரு நாட்டுக்குமான எந்த வகை விசா என்றாலும்
Student Visa – Spouse Visa - Visit Visa
Rejection Appeal & Migration
FREE Assessment
மேலதிக விபரங்களுக்கு
www.sikaram.lk
Sikaram (Pvt) Ltd.
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
யாழ் பஸ் நிலையத்துக்கு மிக அருகில்
Tel: 0777 32 4004, 021 222 00 11
(C-864)
* நியந்தனைகளுக்கு உட்பட்டது


# கொழும்பு கம்பன் கழகம் நடத்தும்

# கம்பன் விழா – 2015




(கொழும்பு)

கொழும்பு கம்பன் கழகம் நடத் தும் கம்பன் விழா 2015 இன்று முத லாம் திகதி வெள்ளிக்கிழமை தொடக கம் 4-ம் திகதி திங்கட்கிழமை வரை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் காலை, மாலை நிகழ்வுகளாக இடம்பெறவுள்ளது.

இன்றைய தொடக்க நாள் நிகழ்வு கள் மாலை 5.00 மணிக்கு கொழும்பு கம்பன்கழக பெருந்தலைவர் ஜெ.விஸ் வநாதன் தலைமையில் இடம்பெற வுள்ளது.

இந் நிகழ்வின் ஆரம்பத்தில் ஸ்ரீ ஐஸ்வர்ய லஷ்மி திருகோவிலிருந்து கம்பன் படம் ஊர்வலமாக எடுத்து வரப்படும்.

நிகழ்வின் பிரதம விருந்தின ராக மலேசிய இளைஞர், விளை யாட்டுத்துறை துணை அமைச்சர் டத்தோ எம்.சரவணன், சிறப்பு விருந்தினராக இந்தியாவின் பார திய ஜனதா கட்சி தேசிய செயற்குழு உறுப்பினர் இல.கணேசன்,

கௌரவ விருந்தினராக புதுவைக் கம்பன் கழக செயலர் தி.முருகேசன் ஆகியோர்கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து நடைபெறும் விழா வில் அருணாசல கவிராயர் அரு ளிய இராமநாடகக் கீர்த்தனை பாகம் 2, மாணிக்கவாசக சுவாமி கள் அருளிய திருவாசகம் ஆகிய நூல்களும், கம்பன் விழா-2014 இறுவட்டும் வெளியிடப்படவுள்ளது.

மேலும் அறக்கட்டளை விருது கள் வழங்கும் வைபவத்தில் நாவலர் விருது - அருள்மொழி அரசி வசந்தா வைத்தியநாதன், விபுலானந்தர் விருது - நாட்டியக் கலைஞர் வேல் ஆனந்தன், நுழைபுலம் ஆய்வு விருது - அல்ஹாஜ் எஸ்.ஏ.ஆர். எம்.செய்யித் ஹஸன் மௌலானா, மகரந்தச் சிறகு விருது - கவிஞர் வாசு தேவன், ஏற்றமிகு இளைஞர் விருது - விளையாட்டு வீராங்கனை தர்ஜினி சிவலிங்கம் ஆகியோருக்கு வழங் கப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளது.

நிகழ்வின் இறுதியில் திரி வேணி சங்கமம் நாட்டிய நிகழவும் நிகழ்த்தப்பட ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. (ஸ)

## நேபாள நிலநடுக்கம்...

நேபாள உள்துறை அமைச்சக கணக்கின்படி, சுமார் 11,000 பேர் படுகாயங்களுடன் உள்ளனர்.

அத்துடன், இந்திய மற்றும் திபெத் நிலப்பரப்பில் ஏற்பட்ட நிலநடுக்கத் துக்கு 80-க்கும் அதிகமானோர் பலியானதாக அதிகாரிகள் தெரி வித்தனர்.

இமாலய தேசமான நேபாளத் தின் பல்வேறு குக்கிராமங்களுக் குள் மீட்பு பணி அதிகாரிகள் சென்று நிவாரண உதவிகளை அளித்து வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்றுக் காலை முதல் மழை குறுக்கிட்டதால் சீர மைப்பு பணிகளில் தொய்வு ஏற் பட்டுள்ளது.

இருப்பினும் மழையையும் பொருட்படுத்தாது மோசமான நிலை யில் இருக்கும் காத்மண்டு சுற்று வட் டார கிராமங்களில் மீட்பு பணிகள் தொடர்ந்தது.

ஆனால் கன மழை தொடர்ந்த தால் மீட்பு பணிகள் தற்காலிக மாக நிறுத்தப்பட்டது.

இதனிடையே, பேரழிவு மேலாண்மை குழுவின் முதன்மை இயக்குநர் கூறும் போது, நிலநடுக்க இடிபாடுகளில சிக்கி மாயமான மக்கள், இனியும் உயிரோடு மீட்கப்பட வாய்பில்லை. இங்கு சீரமைப்பு பணி களுக்கு மழை கூடு தல் இடையூறாக உள்ளது. இயற்கை நமக்கு எதிராக இருக்கிறது. சிரமம்தான் என்றார்.

ஐ.நா. அறிக்கையின்படி, சனிக் கிழமை ஏற்பட்ட நில நடுக்கத்துக்கு 6 லட்சம் வீடுகள் முற்றிலும் இடிந்து நாசமானதாகவும், 80 லட்சம் மக் கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது. நிலநடுக்கத் துக்கு பின்னர் நேபாள மக்கள் பெரும் பாலானோர் வெட்ட வெளியில் வாழும் நிலை உருவாகியுள்ளது.

மேலும், குறைந்தது 20 லட்சம் மக்கள் கூடாரங்கள், தண்ணீர், உணவு மற்றும் மருத்துவ பொருட் களுக்காக காத்திருக்கும் நிலை யில் உள்ளனர்.

அடுத்த 3 மாத கால அளவுக்கு இவர்களுக்கான தேவைகள் கைவ சம் இல்லை என்று ஐ.நா. அதிகாரி தெரிவித்திருக்கின்றனர். (செ)


வீடு
விற்பனைக்கு
வல்வெட்டித்துறை சந்தியில், மரக்கறி சந்தைக்கு முன்பாக
இரண்டு கடைகளுடன் சேர்ந்த வீடு விற்பனைக்கு உண்டு.
மொத்தம் 1 1/4 பரப்பு கொண்டது.
வியாபார நோக்கத்துக்கு உகந்தது.
(248)
தொடர்புகளுக்கு:
0773284200



அருள்மிகு ஊற்றங்கரை ஸ்ரீ சித்திவிநாயகர்
தேவஸ்தான மன்மத வருட
மகோற்சவ விஞ்ஞாபனம் - 2015

◆ தேர்த் திருவிழா - 02.05.2015 சனிக்கிழமை காலை 6 மணிக்கு
◆ கும்ப பூசை காலை 8.30 மணிக்கு
◆ பச்சை சாத்தல் காலை 11.00 மணிக்கு
◆ பஞ்ச முகார்ச்சனை மதியம் 12.00 மணிக்கு
அனுசரணை:- நியூ அம்மன் ஜுவலர்ஸ்
தண்ணீரூற்று, முள்ளியவளை.
உரிமையாளர்: சுகந்தன்
கோவில் நிர்வாகம்
(C-863)



தென்னிந்திய திரை யுலக பாடகர் T.M.S. சௌந்தராஜனின் புதல்வர் செல்வக் குமார் மற்றும் புரட் சித் தலைவர் எம். ஜி.ஆர் போல் வேடம் கொண்டு உலகையே கலக்கி வரும் நடிகர் 'நாமக்கல் எம்.ஜி. ஆர்' அவர்களை உங் கள் இசை நிகழ்வு களிற்கு அழைத் திட மற்றும் இசைக் குழு தொடர்பு களிற்கு
(C-865)
மோகன் சவுண்ஸ்
0777 030 234


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org